
மணிமேகலைப் பிரசுரம்



# புலவர்மணி கவிதைகள்

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி

# கவிதைகள்

## புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம் - மட்டக்களப்பு

PERIYATHAMBI PILLAI VIJAYARATNAM, BA, DIP IN ED.,
PRESIDENT
COLOMBO TAMIL SANGAM
44/7, SOLOMON AVENUE, COLOMBO - 06.

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
Web Site : www.manimekalaiprasuram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு ☞ | புலவர்மணி கவிதைகள் |
| ஆசிரியர் ☞ | புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை |
| மொழி ☞ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு ☞ | 2005 |
| பதிப்பு விவரம் ☞ | முதற்பதிப்பு |
| உரிமை ☞ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை ☞ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு ☞ | கிரெளன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு ☞ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் ☞ | xviii + 146 = 164 |
| நூலின் விலை ☞ | இந்திய விலை **ரூ. 40.00** |
| அட்டைப்பட ஓவியம் ☞ | சாய் |
| லேசர் வடிவமைப்பு ☞ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்<br>✆ 23725639 |
| அச்சிட்டோர் ☞ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட்<br>சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் ☞ | தையல் |
| வெளியிட்டோர் ☞ | **மணிமேகலைப் பிரசுரம்**<br>சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


**நாடும் மக்களும்**

1. இலங்கை மணித் திருநாடு ---------- 1
2. ஈழ நன்னாடே நீ வாழி ---------- 3
3. உயிரனைய மட்டு நன்னாடு ---------- 6
4. அன்னையை வந்தனைசெய்து வாழ்வோம் ---------- 6
5. இனிய மனவளம் படைத்த மட்டு நன்னாட்டு மக்கள் ---------- 7
6. நவீன இலங்கை ---------- 8
7. கன்னியாய்த் திரு ---------- 8
8. சுதந்திர கீதம் ---------- 11
9. வாழி கல்லோயா நங்கை ---------- 13
10. யாழ்ப்பாண நன்னாடு ---------- 16
11. மட்டக்களப்பு நன்னாடு ---------- 16
12. ஒற்றுமை மந்திரம் உச்சரிப்போம் ---------- 17
13. தேசியத் திருப்பொங்கல் ---------- 18
14. கலிவெண்பா ---------- 20

**குருவணக்கம்**

15. முதல் தமிழ் ஆசிரியர் வணக்கம் ---------- 23
16. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவருக்கு வணக்கம் ---------- 23
17. விபுலாநந்த அடிகளார் ---------- 24
18. மகாலிங்கசிவ மலர் ---------- 24
19. விபுலானந்தர் மீட்சிப்பத்து ---------- 26
20. தமிழ்த்தாயின் வடிவில் விபுலாநந்தன் ---------- 30
21. நல்லாசிரியர்க்கு நிகர் யாருமில்லை ---------- 30
22. சமர்ப்பணம் ---------- 31

**தமிழ்மொழியும் தமிழ்ப்புலவரும்**

23. செந்தமிழ்ச் செய்யுளின்பம் ---------- 32
24. வள்ளுவனார் வேதத்தமிழ் ---------- 33
25. தமிழ்ப் பாதுகாப்பு ---------- 33
26. பாரதிக்கு அஞ்சலி ---------- 34
27. தமிழ் ஊட்டல் இனிது ---------- 36
28. கல்முனைத் தமிழ்ச் சாகித்திய விழாவில் ---------- 37
29. திருவாசகப்பயன் பெரிதுரைத்த அருளம்பலவனார் ---------- 38


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. தோத்திரப் பாமாலை வாழ்க ---------------------------------- 39
31. வாழிய கலைப்புலவன் ---------------------------------- 39
32. தமிழர் மன மணிவிளக்கு ---------------------------------- 41
33. வித்துவ சிரோமணியின் 80ஆம் ஆண்டு
நிறைவு விழாப் பாட்டு ---------------------------------- 43
34. பண்டிதர் பூபாலபிள்ளை இரங்கற் செய்யுள் ------------------- 44
35. சிங்களமும் செந்தமிழும் சமநிலையில் அரசு செய்க ----------- 45
36. நாகரிகத் தமிழ்வாழ்வின் மணிமுடி------------------------------ 45
37. பராசக்தி மகாகாவியம் - சாற்றுகவி------------------------------ 47
38. சுதந்திரன் வாழ்த்து ---------------------------------- 49
39. கவியரங்கின் தலைமையுரை ---------------------------------- 51
40. காரைநகர்ச் சைவ மகாசபை ---------------------------------- 53

சான்றோர்

41. உத்தமர் திலகம் காந்தியடிகள் ---------------------------------- 54
42. நேருவினைச் செப்புவீர் ---------------------------------- 55
43. ஸ்ராலினை மறவோம் ---------------------------------- 56
44. சேர்.பொன் இராமநாதனைக் கவர்ந்த பாடல் ------------------- 56
45. சேர். பொன் இராமநாதன் அரசியற் பொன்விழாச் செய்யுள் ---- 56
46. சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி வரவேற்புப் பா ---------- 57
47. காலஞ்சென்ற ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்களை நெல்லோடு
ஒப்பிட்டுப் பாடியது --------------------- 57
48. சுவைகண்ட பஞ்சசீலன் ---------------------------------- 58
49. அகிம்சைநெறி கடைப்பிடித்த இராமச்சந்திரன் ----------------- 59

கடவுள் வணக்கம்

50. கடவுள் வணக்கம் ---------------------------------- 63
51. என் இரு கண்கள் ---------------------------------- 63
52 முருகப் பெருமான் ---------------------------------- 64
53. கந்தசட்டியின் உட்பொருள் ---------------------------------- 64
54. மண்டூர்ப் பதிகத்தின் முதற் செய்யுள் ---------------------------------- 65
55. சக்தி ---------------------------------- 66
56. அந்தாதி தாரணியே காப்பாள் ---------------------------------- 67
57. குருபூசை வாழ்த்து ---------------------------------- 67
58. மாவைக் கோயில் கதவடைப்பு ---------------------------------- 69
59. கண்ணன் அருள்வெள்ளத்தில் வாழ்வோம் --------------------- 70
60. எனை உன் அடிமலர் இருத்தி---------------------------------- 71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. சிவத்தை உரிமைசெய்ய மனத்துநார் வேண்டும் ---------------- 71
62. காளிக மடு கற்பக விநாயகர் ஊஞ்சல் -------------------- 72
63. கிறிஸ்து திருவவதார கீதம் ------------------------ 76
64. கிறிஸ்தவ சபைத் துயிலுணர்ச்சிப் பாடல்கள் ------------------ 77
65. கோயம்புத்தூர் எழுச்சி மகாநாட்டுப் பாடல் ------------------ 78

தனிப் பாக்கள்

66. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ------------------------ 79
67. மேன்மையணி கல்வி அறிவு ------------------------ 85
68. நாட்டுச் சூழலுக்கு ஒவ்வாத நடையால் என்ன பயன் ---------- 86
69. நல்லார்க்கும் மூர்க்கர்க்கும் பொழுதுபோதல் ------------------ 86
70. நல்லாரைப் பேணார் கதி ------------------------ 86
71. தாய்மொழி கற்றோர் நிலை ------------------------ 87
72. புதுமைக் கவிஞருக்கு ------------------------ 87
73. தமிழ் முஸ்லிம் ஒற்றுமை ------------------------ 88
74. நிலமகளை ஈன்ற தந்தை ------------------------ 89
75. கலையும் பண்பும் சேர்ந்த அறிவே சிறப்பு ------------------ 90
76. வஸ் பிரயாணம் ------------------------ 92
77. புத்திரர் புத்திரிகளின் வருகை ------------------------ 92
78. இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம் ------------------ 94
79. கல்முனை விளைவுவிழா வாழ்த்து ------------------------ 97
80. நெல்வேலி ஆண்பிள்ளைக்கு இரு பாடல்கள் ------------------ 98
81. செய்நன்றி மாலை சேர்த்திடுவோம் ------------------------ 104
82. சந்திர மண்டலப் பயணம் பற்றி ------------------------ 107
83. விருந்தோம்பல் ------------------------ 108
84. சோம்பற் குடும்பம் ------------------------ 111

சிந்தனை

85. குருகுலத்தின் குறிக்கோள் ------------------------ 112
86. அழகு ------------------------ 116
87. இன்பம் ------------------------ 118
88. மதுவினை யொழிப்போம் ------------------------ 121
89. சிந்தனைத் தரு ------------------------ 123
90. உண்மைப் பொருள்கண்டு சாந்தியில் வாழ்வோம் -------------- 125
91. போலிக் காதலும் உண்மைக் காதலும் ------------------ 129
92. புதுமைக் கமக்காரன் ------------------------ 132
93. தில்லை மண்டூர்ப் பதிகம் ------------------------ 137
94. நிலைமண்டல ஆசிரியப்பா ------------------------ 143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




22–05–1994இல் கொழும்ப பிரதம தபாலகத்தில் நடைபெற்ற தேசிய வீரர் தினத்தில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களை கௌரவித்து வெளியிட்ட தபால் முத்திரை




22-05-1994இல் கொழும்பு பிரதம தபாலகத்தில் முத்திரை வெளியீட்டுப் பணியம் தேசிய வீரர்களை கௌரவித்து வெளியிட்ட முதல்நாள் உறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980இல் வெளியான முதற்பதிப்பின்

# பதிப்புரை

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கவிதைகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்நூல் புலவர்மணி அவர்களின் கவிதைத் திறனைத் தமிழுலகு அறியத் துணைபுரியும் என்பது எங்கள் நம்பிக்கை.

இக்கவிதைகளை வெளியிட வசதியாகப் புலவர்மணியின் கவிதைகளைப் பெருமனத்துடன் எங்களிடம் ஒப்படைத்த புலவர்மணியின் துணைவியார் திருமதி நல்லம்மா பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கும், அவருடைய மக்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

புலவர்மணியின் கவிதைகளை அச்சிட மூவாயிரத்து அறுநூறு (3600) ரூபாய்களைத் தந்துதவிய தமிழாராய்ச்சி மகாநாட்டு மட்டக்களப்புக் கிளையினருக்கும், பொருளுதவி செய்துள்ள ஏனையோருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலை அச்சிடும்போது பிழைகளைத் திருத்தியும், நூல் சிறப்பாக அமையவும் துணைபுரிந்த வித்துவான் எவ்.எக்ஸ்.ஸி. நடராசா அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு மதிப்புரையை வழங்கிய பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூல் வெளியீடு எவ்விதத் தடையுமின்றி நடக்கச் சகல வழிகளிலும் துணை புரிந்த மன்றத் தலைவர் திரு. அ.கி. பத்மநாதன் அவர்களின் சேவை பாராட்டுதற்குரியதாகும். நூலை வெளியிட வேண்டிய துணைகளைப் புரிந்த துணைச் செயலாளர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலை விரைவாக அச்சிட்டுதவிய கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழன்பர்களின் ஆதரவு கிடைக்குமானால் புலவர்மணியின் உள்ளதும் நல்லதும் கட்டுரைகள் விரைவில் நூலுருவம் பெறும் என்பது எங்கள் நம்பிக்கை.

**ம. சிவநேசராசா**
செயலாளர்,
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப்பணி மன்றம்.

38, வாவி வீதி இல. 2,
மட்டக்களப்பு,
3.10.80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980இல் வெளியான முதற்பதிப்பிற்கு

# அணிந்துரை

'வெள்ளை நிற மல்லிகையோ'

என்ற சுவாமிகளின் பாடல்,

'இலங்கை மணித் திருநா டெங்கள் நாடே'

என்ற புலவர்மணியின் பாடல் இரண்டும்

கற்றோருக்கும் மற்றோருக்கும் இனிப்பவை.

சாவா மூவாப் பாடல்கள் அவை.

அண்மையில் வானொலியில் புலவர்மணியின் குரலில் அவர் பாடலைக் கேட்ட போது, அவர் பக்கலில் இருப்பதொரு மகிழ்ச்சி பொங்கியது.

'ஈழ நன்னாடே வாழி' என்றது தொடக்கம் 'நலனே இலங்கை' பரியந்தம் உள்ள பாடல்கள் முதற் பாடலின் விரிவுரை போன்றவை அருமையானவை. சுதந்திர கீதம் இந்த வருக்கத்தைச் சேர்ந்தது. 'கன்னியாய்த் திரு' என்ற தலையங்கத்தைக் கண்ட போது திடீரென ஓர் ஏக்கம் உண்டானது.

'காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று
கவி பாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று
தீதுபழி கேட்டவன்றன் மனம் போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம் போல ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபெறா வேழைதுயர் மனம் போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம் போல ஒன்று
காதுமழுக் காறுடையான் மனம் போல ஒன்று
கனலேறு மெழுநீர்களுண்டு கன்னியாயில்'

என்ற பாடலில் வரும் 'கனலேறு மெழுநீர்கள்' மனசிற் குடிகொண்டு கொதித்துக் கொண்டிருந்தமையால் புலவர் மணியின் கன்னியாய், புலவரின் கன்னியாயோடு எடைவிடாது நின்று பிடிக்குமா என்பதே ஏக்கம்.

கல்லோயா நங்கை சற்றே எட்டநின்று, என் ஏக்கத்தை நோக்கி களுக்கென்று சிரித்தாள். உடனே,

'திருந்து மினிய மனச்சான்றோர்
சினம்போல் வெம்மை செய்தேநீர்
சுரந்து வருவ தென்னேநீ
சொல்லாய் கன்னியாய்த் திருவே,
சுரந்து வெம்மை தருவதெல்லாம்
தொட்டே யென்னை அணைவார்க்கு
மருந்தாய்ப் பாவம் பிணிதீர்க்கும்
வகையென் றுணர்வீர் மாந்தர்களே.'

என்ற பாடலையும் அதனைத் தொடர்ந்து வரும் பாடல்களையும், கல்லோயா நங்கையில் வரும்,

'காடும் நாடாய்ச் செழித்தோங்கக்
கழனிச் செல்வம் பொலிந்தோங்க
நாடும் வாழ்விற் றிகழ்ந்தோங்க
நடந்தாய் வாழி கல்ஓயா
நாடும் வாழ்விற் றிகழ்ந்தோங்க
நடந்த தெல்லாம் நின்தலைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் புகழ்சேர் இனியநடைப்
பாங்கே வாழி கல்லோயா'

என்ற பாடலையும், அதனைத் தொடர்ந்து வரும் பாடல்களையும் படித்தேன். படிக்கும்போது,

'திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி'

என்ற சிலப்பதிகாரத்துக் கானல் வரிப் பாடல் ஞாபகத்துக்கு வந்தது. அந்தக் கணமே,

கானல் வரிப் பாடலுக்குச் சற்றும் எடை குறையாதவை புலவர்மணியின் பாடல்கள் என்றொரு குரல் வந்தது.

அந்தக்குரல் திரு. சோமசுந்தரப் புலவர் அவர்களின் ஆத்மீகக் குரல் ஆகலாம். அக்குரலுக்கு வணக்கஞ் செய்துவிட்டு, அப்பால் தலையங்கங்களை மாத்திரம் படித்துக் கொண்டு சென்றபோது, விபுலாநந்தர் மீட்சிப் பத்து இமாலயம் போல் நிமிர்ந்து நின்றது.

'காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு கடவுட் காதல்மகன்
கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர் கண்ணிறை திருமயிலோன்
ஏரே றும்படி கீழ்பால் மேல்பா லாக்கிநல் லிசைநட்டோன்
இமயத் தலையிற் தமிழ்முத் திரைவரை ஈழக் கரிகாலன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில நூறுசுவை யினிதூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக தெய்வ அகத்தியனாம்
பாரே றும்புக ழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே
பன்மொழி விபுலா நந்தன் வாழ்கெனக் கூவாய் பைங்குயிலே.'

என்ற பாடல் தொடக்கம் பத்துப் பாடல்களைக் கொண்டது மீட்சிப் பத்து. இது புலவர்மணியின் புலமை உணர்ச்சியின் உருக்கப் பிழிவு.

இந்த மீட்சிப் பத்து; தனித்தெடுத்து விமர்சன உலகு விமர்சிக்கற் பாலது.

இவ்வளவில் விடைபெற்றுக் கொள்கின்றேன்.

## ஒரு குறிப்பு

## பழைய நினைவு

25 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் புலவர்மணியும் நானும் பஸ்வண்டியில் குருக்கள் மடத்திலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிப் புறப்பட்டோம்.

அப்பொழுது, முன்னொருமுறை பஸ்வண்டியில், காற்சட்டை போட்ட உத்தியோகத்தருக்கு இடங்கொடுக்கும் பொருட்டு, பஸ்வண்டிக்காரரால் ஒருவர் கஷ்டப்பட்ட போது, தம்பால் முகிழ்த்ததொரு பாடலைப் படித்துக் காட்டிக் களிப்பூட்டினார் புலவர்மணி. அப்பாடல்,

முன்னை வழக்கால் முளைத்தநாற் சாதிபோய்ப்
பின்னையிரு சாதி பிறந்ததுகாண் - அந்நியர்தம்
ஆங்கிலத்தால் மேல்சாதி யாயிற்றே தாய்மொழிகற்
றேங்கிநிற்கும் கீழ்சா தியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது. இருவரும் பஸ்வண்டியில் முன்னிடத்தில் வெகு வசதியாயிருந்து கொண்டு கலந்துரையாடினோம். பிரயாணம் சுகம் பேசியது. தூரம் போதாது.

மேற்குறிப்பிட்ட பாடலை, 'தாய்மொழி கற்றோர் நிலை' என்ற தலையங்கத்திற் காண்க.

## வேறொரு விசேடக் குறிப்பு

தலையங்கம் ஒவ்வொன்றுக்கும் சந்தர்ப்பத்தோடு கூடிய விவரமான குறிப்பு எழுதி, அதனை அனுபந்தமாக்குவது இன்றியமையாதது.

### மற்றொரு கவலை

இப் புத்தகம் சில மாசங்களுக்கு முன் வெளிவந்திருக்குமாயின், அதன் அருமை அறிந்து மதிக்க வேண்டியவர்கள், புலவர்மணிக்குப் பெருமதிப்பு நல்க வாய்ப்பாயமைந்திருக்கும்.

புலமை யுலகு புலவர்மணியைக் கவியரசு என்று முடிசூடிக் கொண்டாடும்.

கவிதைச் சக்கரவர்த்தியாகிய சுவாமிகளின் ஆத்மீக ஆசியும் பெருகும்.

திருவருளின் கருத்தை யார் அறிவார்?

புலவர்மணியின் புகழ் வாழ்க!

இலக்கிய கலாநிதி

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி கவிதைகள் மீள்பதிப்புக்கு (2004)

# பாராட்டுரை

தமிழ்ப்புலவர்களின் பெருமையை புலவர்மணி அவர்கள் இந்நாட்டில் நிலை பெறச் செய்துள்ளார். இவரின் கவிதைகள் ஆற்றொழுக்குப் போல இனிதாக அமைந்துள்ளன. சொற்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் உள்ளவை. கவிதைப் புலமை இவருக்கு இயல்பாக அமைந்தது. கலைமகள் அருள்பெற்றவர். இவர் சிறந்த சிந்தனையாளர் என்பதை இவரது கவிதைகள் உணர்த்துகின்றன. தமிழ் உலகில் மட்டக்களப்புத் தமிழகம் உயர்நிலையைப் பெற்றுள்ளது. தமிழர்களைப் போல இசுலாமியர்களும் சிறந்த தமிழ்ப்புலமை பெற வழிப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. பழைமைக்கும் புதுமைக்கும் இணைப்பாக விளங்கியவர். அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்வதை விரும்பியவர். புலவர்மணிபோல் ஒருவரைக் காண்பது அரிது. இவரது கவிதைகள் உலகு உள்ளளவும் நிலைத்து நிற்கும். புலவர்மணியின் கவிதைகளை மீள்பதிப்புச் செய்யும் அனைவரையும் பெரிதும் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றேன்.

**தமிழவேள் இ.க. கந்தசுவாமி**

ஈழத்துப் பூதத்தேவனார் தமிழ்ப்புலவர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எங்களின் நூலாசிரியர் திரு. வரதசுந்தரம் அவர்கள் தான் எழுதியுள்ள திருக்கோணேஸ்வர திருத்தல யாத்திரை புத்தகத்தில் புலவர் மணி அவர்களின் பாடல்களை மணிவாசகரின் பாடல்களோடு ஒப்பிட்டு மிக உயர்வாக அவரைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். இதன் பிறகுதான் புலவர் மணி அவர்களின் பெருமைகளை என்னால் முழுமையாக உணரக்கூடியதாக இருந்தது.

இதன் பிறகு இன்னொரு ஆச்சரியமான செய்தியை அறிந்துகொண்டேன். தற்போது கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. விஜயரத்தினம் இவரது புதல்வர் என்பதுதான் அது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்துடன் கடந்த 15 ஆண்டுகளாக எனக்கு தொடர்பு உண்டு. 1994-ல் தமிழ்ப் புத்தக உலகம் பற்றி நான் அங்கு பேசியிருக்கிறேன். அப்போது இருந்த தலைவர் அமரர் திரு. சிவகுருநாதன் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர். எப்போது சென்னை வந்தாலும் தவறாது மணிமேகலைப் பிரசுரம் வந்து என்னைச் சந்தித்துவிட்டுத்தான் செல்வார். இவருடைய மறைவு எங்களுக்கெல்லாம் தனிப்பட்ட முறையில் இழப்பு. இவர் கொழும்பில் மறைந்த பொழுது மயானத்திற்குச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினேன். இப்படிப்பட்ட சிறந்த ஒரு அன்பர் வகித்த தலைவர் பதவிக்கு அடுத்தபடியாக தலைமைப் பொறுப்பை ஏற்க வல்லவர் யார் என்று எண்ணியபோது அவருடைய தமிழ் ஆர்வத்திலும் நிர்வாகத் துறையிலும் ஒரு இம்மிகூட குறையாத அளவுக்கு தற்பொழுது திரு. விஜயரத்தினம் ஐயா அவர்கள் தலைவர் பதவியிலிருந்து கொண்டு செவ்வனே செயலாற்றி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய மனைவியும் அன்பிலும் பண்பிலும் சிறந்து விளங்குபவர்.

தன் தந்தையின் படைப்புகளை மறுபதிப்பு செய்யவேண்டும் என்று இவர் விரும்பியபோது பெரிதும் மகிழ்ந்து நான் சம்மதித்தற்கு காரணம் அமரர் புலவர் மணி அவர்களின் அற்புதமான தமிழ் படைப்புகள்தாம்!

இலங்கை அரசு இத்தமிழறிஞருக்காக தபால் தலை வெளியிட்டிருப்பது இவரது சிறப்புக்கு மிகப்பெரிய அங்கீகாரம்.

இந்நூலில் இலங்கை மணித் திருநாடு என்ற கவிதையில் நாட்டுப்பற்றையும், வரலாறையும் இலங்கையின் இயற்கை வளத்தையும் அழகுற விவரித்திருக்கும் பாங்கு மிகவும் அற்புதம். கிட்டத்தட்ட 90 கவிதைகளில் இவர் தொடாத துறையே இல்லை எனலாம். சமய ஒற்றுமை இவர் கவிதைகளில் மிளிர்கிறது என்பது காளிகமடு கற்பக விநாயகர் ஊஞ்சல், கிறிஸ்து திருவவதார கீதம், குருபூஜை வாழ்த்து ஆகிய கவிதைகள் மூலம் அறியலாம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம் செய்து வரும் சேவையையும் ஆசிரியர் மாணவர் உறவு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும் குருகுலத்தின் குறிக்கோள் மூலம் அறியலாம். மொத்தத்தில் இவர் கவிதைகள் முத்து பந்தலில் தேன் மாரி பொழிந்தது போல் உள்ளது என்றால் மிகையாகாது.

இந்த நூல் சிறப்புற வெளிவருவதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்ட திரு. விஜயரத்தினம் ஐயா அவர்களும் திரு. பொன்னுத்துரை குணபாலசிங்கம் அவர்களும் என் பாராட்டுக்குரியவர்கள்.

*– ரவி தமிழ்வாணன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி **ஏ. பெரிய தம்பிப்பிள்ளை** அவர்களின்

## வாழ்க்கைக் குறிப்பு

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரும் சிறந்த புலவரும் ஆவார். இவர் சோமநாதர் ஏகாம்பரபிள்ளை அவர்களுக்கும், சின்னத்தங்கம் அவர்களுக்கும் மூத்த மகனாக 1899ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூரில் பிறந்தார்.

இவர் சுன்னாகம் குமாரசாமிப்புலவர், வித்துவ சிரோன்மணி சி. கணேசையர், விபுலானந்த அடிகள், ஆறுமுகநாவலரின் தமையனார் மகன் திரு. கைலாசபிள்ளை, கல்முனை குஞ்சித்தம்பி ஆசிரியர் ஆகியோரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயின்றவர்.

ஆங்கிலத்திலும், நல்ல தேர்ச்சி உடையவர். இவருடைய ஆங்கில ஆசிரியராக வணக்கத்துக்குரிய திரு. R.N. சேதுகாவலர் அவர்கள் விளங்கினார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கல்விமான், நல்லாசிரியன், சமய, சமூக சீர்திருத்தவாதி. இவர் இயல்பாகவே கவிபாடும் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார். இவருடைய ஆக்கங்கள் பல பாட நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய, நூல்கள் பல. அவற்றுள் பகவத்கீதை வெண்பா, முதலாம், இரண்டாம், மூன்றாம் பாகங்கள், உள்ளதும் நல்லதும், புலவர்மணி கவிதைகள், பாலைக்கவி, நாமகள் இலம்பகம் முதலியன குறிப்பிடத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூர்ப் பதிகம், சித்தாண்டிப் பதிகம், கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் பதிகம், என்பன இவர் எழுதிய பதிகங்களாகும். காளிகாமடு கற்பக விநாயகர் என்ற ஊஞ்சல் நூலையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார். 1951ம் ஆண்டில் மட்டக்களப்பு தமிழ்க்கலை மன்றம் புலவர்மணி என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கியது.

ஆரிய திராவிட பாசவிருத்திச் சங்கம் பண்டிதமணி என்னும் பட்டத்தையும், இவர் இறந்தபின் 1980ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கிய வித்தகர் என்ற பட்டத்தையும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் 1997ம் ஆண்டு சித்திரைமாதம் 23ம் திகதி இலக்கியக் கலாநிதி என்ற பட்டத்தையும் வழங்கி இவரைக் கௌரவித்தன.

இவர் அரசகரும் மொழிகள் திணைக்கள ஆலோசனைச் சபை, இந்துசமய அபிவிருத்திச் சபை, இலங்கை வானொலி கல்வி ஆலோசனைச் சபை, ஆகிய தேசிய ஆலோசனைச் சபைகளில் உறுப்பினராக விளங்கினார்.

இவரது சேவையைப் பாராட்டி, இலங்கை அரசு 1994ம் ஆண்டும் வைகாசி மாதம் 22ம் திகதி, தேசிய வீரர் தினத்தன்று இவரைக் கௌரவிக்கும் முகமாக, தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டது.

இத்தினத்தில் தேசியவீரர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி இவர் இறைவன் அடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி கவிதைகள்

## நாடும் மக்களும்

### இலங்கை மணித் திருநாடு

இலங்கை மணித்திருநா டெங்கள்நாடே - இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே. (இலங்)

மாவலி கங்கைளங்கள் வளநதியே - அருள்
மன்னு சிவனொளிபாதம் எங்கள் மலையே
பூவலஞ் செய்கதிரை எங்கள்தலமே - இதைப்
போற்றிப் புகழ்ந்தால் வரும். பெருநலமே. (இலங்)

முத்துக் குளிக்கநல்ல துறைகளுண்டு - ஒளி
முதிர்ந்த மணிகள்தரச் சுரங்கமுண்டு
தித்திக்கும் நறுங்கனிச் சோலைகளுண்டு - எங்கள்
தேசத்தில் பொன் விளையும் பூமியுமுண்டு. (இலங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத மனையநன்னீர்ப் பெருக்குமுண்டு - திளைத்
தாட வினியவெந்நீர்ச் சுரப்புமுண்டு
தமிழின் இனியசுவை யூற்றுமுண்டு - மெல்லத்
தண்ணென் றுலவு தென்றற் காற்றுமுண்டு. (இலங்)

தேமல் முதிரைகருங் காலிகளுண்டு - வளர்
தேக்குண்டு வனந்தனில் தேனுமுண்டு
பால்மலி பசுவுண்டு மேதிகளுண்டு - தமிழ்ப்
பாட்டுக்கு நல்ல யானைப் பரிசுமுண்டு (இலங்)

கோமான் பராக்கிரம வாகுமன்னன் - குளக்
கோட்டன் முதலோர்கட்டு குளங்களுண்டு
நாமாண் புறச்செழித்த வயல்களுண்டு - முன்னோர்
நாட்டிய சித்தி ரக்கண் காட்சிகளுண்டு. (இலங்)

சிங்க மெனும்விஜயன் கண்டநாடு - கீர்த்தி
சிங்க னிருந்துரிமை கொண்டநாடு
பொங்கு மிசைபொருந்து இராவணேசன் - தமிழ்ப்
பூபதிஎல் லாள னிருந் தாண்டநாடு. (இலங்)

சிங்களர் செந்தமிழர் மகமதியர் - என்னும்
செல்வப் புதல்வர்க்கொரு தாய்நாடு
மங்கள மாகஅன்று வாழ்ந்தநாடு - இன்றும்
மங்காப் புகழ் பெருக்கி வாழும்நாடு. (இலங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழ நன்னாடே நீ வாழி

(தீபாவளித் திருநாளை ஒட்டி ஈழநாட்டு மக்கள் ஒளிபெற்று வாழத் திருவருள் பாலிக்க வேண்டுமென ஈழமாதாவை வேண்டிப் பாடிய பாடல்)

ஈழநன் னாடே ஈழநன் னாடே
இனிதெனைப் பெற்ற ஈழநன் னாடே
ஊழி யூழிநீ வாழியென் னம்மோய்
நித்திலம் பதித்த நீலக் கடலெனும்
சித்திரச் சேலை திகழ்ந்திட வுடுத்து
தத்துநீள் மாவலித் தண்புனல் நதியாம்
உத்தரீ யந்தரித் துலகெலாம் கைதொழ
மணியணி பலவும் வயங்கிட வணிந்து
சோலைக் கூந்தலிற் கதிர்மதி சூடிச்
சிவனொளி பாதச் சிறுநறு நுதலிற்
திருவருட் டிலகம் தீட்டிப் பொருவறும்
எழில்நலங் கனிந்தபொன் ஈழநன் னாடே
குணதிசை யழகு ராணியெம் தாயே
வாழிநீ யான்சொலும் வார்த்தையைக் கேளாய்,
இன்றுநின் நிலைகண் டென்மனந் துடித்தல்
கண்டிலை யோவென் காதல்கொள் தாயே
இந்துமா கடலிடை யிங்கோர் சிறிய
இங்கிலாந் தமைந்து கிடந்ததோ வென்ன
முந்தைநா கரிகமும் முன்னோர் பழக்கமும்
வந்தனை முறையாம் வழக்கமும் விடுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழிப் பயிற்சியும் சிந்தனா சக்தியும்
ஆய்கலைத் திறனும் அமைதியும் மாறி
வாழ்வு தலைகீழாய் மயங்கி யுணர்வின்றித்
தாழ்வுதலைப் பட்டே உண்மை நிலை தவறிப்
போலிக் கவுரவ இருளிற் புகுந்தனை;
ஆழ்கலைப் பண்பும், அறிவும் படைத்தும்
இயற்கையோ டிணைந்த பயிற்சியை யிழந்து
சூழ்நிலை காணா விருளிற் றுஞ்சினை;
அயல்நாட் டவர்கள் ஆக்கியே குவிக்கும்
ஆடம்பரப் பொருட் கடிமையா யவற்றில்
மோகமா மிருளில் மூழ்கிக் கிடந்தனை;
தேவை தேவையுன் தேவையில் மூழ்கி
ஆடம் பரமெனு மாரிருள் மூழ்கி
விழலுக் கிறைத்து வீணே பொருளெலாம்
வாழ்க்கைச் செலவை யீடுசெய் வகையில்
வருவாய் போதா தெனவே மாழ்கித்
தேசிய நோக்கம் மறந்து திகைத்தனை;
உதவாக் கல்விகற் றுழன்றே கிடந்தனை;
தொழிற்கவு ரவத்தைத் துறந்தனை யன்னாய்;
தெய்வம் பேணாது சிந்தனை மயங்கினை;
வகுப்புப் பூசலாம் வல்லிரு ளதனில்
சுயநல மென்னும் தொல்லைசேர் இருளிற்
குறிக்கோள் மறந்தனை; சேவையைத் துறந்தனை;
பிரிவினை என்னும் பேய்வாய்ப் பட்டனை;
வறுமை கண்டிரங்காய்; வல்லிரு ளதனையும்
சிறுமையில் நாணாய்; தீரா விருளையும்
ஆசை யென்னும் அடர்பெருங் காட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோப மென்னும் உதவா விருளில்
ஒளியென விரும்பி உணர்விலை கிடந்தனை;
பாரெலா மறிவொளி பரப்பிய தாயே;
உண்மை யறிவும் உணர்ச்சியு மென்னும்
நல்லொளி யதனில் நீதிகழ்ந் தொளிரும்
நாளது வருமோ வென்றென் றாவலோ
டென்மன மிராப்பக லிதுவே நினைவாய்க்
கிடந்தது தாயே.
உன்னைப் பண்டைப் பெருமையிற் காண
விழைந்தேன் தாயே அஃதருளல் வேண்டும்
உன்னடி பிடித்தேன் நெகிழவிடேன் யான்
அன்னையே புத்தொளி யதனில்நீ விளங்கி
உன்மக ரெல்லாம் அறிவொளி மயமாய்
நிறைவிளக் கென்ன நீணில மீதில்
தேசிய மயமாய்த் திகழ்ந்திட வேண்டினேன்
என்மொழி கேட்டே யிரங்குக தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரனைய மட்டு நன்னாடு

தேன்பாயும் சோலையெலாம் தீம்பால் பாய்ந்து
தித்திக்கும் கழனியெலாம் வாவி நீர்க்கீழ்
மீன்பாடும் நிறைமதிநாள் இடையா மத்தில்
வெண்ணிலவு பரந்தமைதி கூடும் வேளை
மான்பாயும் வனத்தினிலே மகவு கொண்டு
மதகளிற்றின் முதுகில்மந்தி பாயும் மக்கள்
ஊன்பாயும் உதிரத்தில் தமிழும் பாயும்
உயிரனைய மட்டுநன்னா டென்தாய் நாடே.

## அன்னையை வந்தனைசெய்து வாழ்வோம்

1. சந்ததம் நம்மை வாழ்விக்கு மினிய
தமிழுண்டு தமிழ்ப்பண்பு முண்டு
எந்தையும் தாயும் எளிமையாய் வாழ்ந்த
இனிமைசேர் கிராமவாழ் வுண்டு
சிந்தனை செய்யும் திறம் நமக்குண்டு
தேசிய ஒற்றுமை பூண்டு
வந்தனை செய்தெம் மன்னையைத் தினமும்
வாழ்வகை வாழுவோம் வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இன்னிலம் தன்னில் இயற்கையைப் பயன்செய்
திடுகல்வித் திட்டமும் உண்டு
அன்னைநேர் எங்கள் நாட்டபி விருத்திக்
கைந்தாண்டுத் திட்டமும் உண்டு
பொன்னுல கெனநம் நாட்டினை யுயர்த்திப்
புதியசா தனைஇனிச் செய்தே
தன்னிறை வடைந்து வாழுவோம் அன்பு
தழைத்தொரு குலமென விங்கே.

## இனிய மனவளம் படைத்த மட்டு நன்னாட்டு மக்கள்

செஞ்சாலி விளைவேலி ஆயிரமூர் புரக்கும்
திருவோங்கி நிறைவுடைய செல்வமெலாம் சுரக்கும்
அஞ்சாயல் மடவார்கட் கறநெறியே பெருக்கும்
அமர்விருந்தி னுபசாரம் எவர்மனமும் உருக்கும்
துஞ்சாமல் இரவுபகல் மள்ளர்குரல் ஒலிக்கும்
சுவாமிவிபு லாநந்தர் யாழிசைநின் றொலிக்கும்
மஞ்சாடும் பொழில்மட்டு மாநாட்டின் இனிய
மண்வளம்போல் வாழ்வார்க்கு மனவளமும் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இலங்கை

இந்துமகா சமுத்திரத்தின் நடுவில் ஈங்கோர்
இங்கிலாந் தமைந்துகிடந் ததுவோ வென்ன
முந்துசீர் நாகரிகம் பழக்கம் வாழ்வு
மொழிப்பயிற்சி கலையுணர்ச்சி முழுதும் மாறிப்
பந்தமுறு வெறும்போலிப் பகட்டில் மோகப்
பட்டுப்பாழ் பட்டாவி பதைத்து வீழ்ந்து
சிந்தனையற் றிடுமிலங்கா தேவி யுள்ளம்
தேசிய மயமாகத் திகழ்வ தென்றே.

# கன்னியாய்த் திரு

(திருக்கோணமலையின் அருகிலமைந்த கன்னியாயில் அமைந்த வெந்நீரூற்றுகளையிட்டு புலவர்மணியின் கருத்து).

1. திருந்து மினிய மனச்சான்றோர்
சினம்போல் வெம்மை செய்தேநீர்
சுரந்து வருவ தென்னேநீ
சொல்லாய் கன்னி யாய்த்திருவே
சுரந்து வெம்மை தருவதெல்லாம்
தொட்டே யென்னை அணைவார்க்கு
மருந்தாய்ப் பாவம் பிணிதீர்க்கும்
வகையென் றுணர்வீர் மாந்தர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சைவர் பவுத்தர் மகமதியர்
சார்ந்தே கிறிஸ்து சமயத்தோர்
மெய் தொட்டாட நீவிரும்பும்
விதமென் கன்னி யாய்த்திருவே
மெய் தொட்டாட யான்விரும்பும்
விதமிங் குணர்வீர் மேதினியில்
தெய்வ மெவர்க்கும் பொதுவென்னும்
திறத்தை விளக்கும் செயல்கண்டீர்.

3. அள்ளக் குறையா தினிதூறும்
வெந்நீர்ச் செல்வ மதையருளி
மெள்ளச் சுரந்து வருவதென்னே
விளம்பாய் கன்னி யாய்த் திருவே
மெள்ளச் சுரந்து வருவதெல்லாம்
விரும்பி யுலகோர் மனத்தளவே
கொள்ளச் சுரக்கும் கல்வியென
யானும் சுரக்குங் குணங்கண்டீர்.

4. அன்னை தனக்காய் இராவணனார்
அந்தி யேட்டி செயவென்றே
உன்னை யமைத்த துண்மையதோ
உரைப்பாய் கன்னி யாய்த்திருவே
என்னை யமைத்தார் இராவணற்காய்
இறைவ னாண்மை யருட்சக்தி
என்னும் திருமால் யான்சக்தி
வடிவம் இதனை யுணர்வீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சாதி பேதம் பாராதே
சமமா யெவரும் உனைத்தழுவ
ஏதுங் கலங்கா திருப்பதென்னே
இயம்பாய் கன்னி யாய்த்திருவே
ஏதுங் கலங்கா திருப்பதிங்கே
எல்லா உயிரும் சமமென்றே
ஓதும் படைப்பின் ஒருமைநிலை
உணர்த்து முண்மை நிலைகண்டீர்!

6. பல்லாயிரம்பேர் உனைத் தோய்ந்தும்
பாரிற் பெரியோர் நிதமுமுனை
நல்லாயென்றே புகழ்வ தென்னை
நவிலாய் கன்னி யாய்த்திருவே
நல்லாயென்றே புகழ்வ தெல்லாம்
நாடிப் பலருந் தோய்ந்தாலும்
புல்லா தியானும் கன்னியெனப்
பொலிவுற் றிருக்கும் நிலைகண்டீர்.

7. உன்பாற் படிவோ ரெல்லாரும்
உடலும் உயிருந் தளிர்த்தொளிசேர்
பொன்போற் பொலிவ தென்னே நீ
புகல்வாய் கன்னி யாய்த்திருவே
பொன்போற் பொலிதல் பூமியின்கீழ்ப்
பொங்கும் தாதுப் பொருள்கள்பல
என்பாற் கலந்து சக்தியுடன்
யானும் வருவ தெனக்கொள்வீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர கீதம்

(வாழ்க தமிழ்மொழி என்ற பாரதி மெட்டு. 4.2.1948ல் இலங்கை சுதந்திரம் பெற்ற போது பாடப்பட்ட சுதந்திர கீதம்)

1. வாழ்க இலங்கை மணித்திரு நாடு
வாழிய வாழியவே
வாழ்க சுதந்திரம் வாழிய அன்னை
மணிக்கொடி வாழியவே.

2. வாழ்க சுதந்திர நாடுகளோ டன்னை
சமமே வாழியவே
வாழ்க சகோதர ஆசிய நாடுகள்
தோழமை வாழியவே.

3. பன்னூ றாண்டு மறைந்த சுதந்தர
பானு உதித்ததிங்கே
அன்னை சுயாட்சி ஒளியில் விளங்கும்
அழகில் மகிழ்ந்திடுவோம்.

4. தெங்கொடு பனைநறுந் தேமா தோடை
செந்நெல் வாழைபலா
பொன்பொலி தேயிலை ரப்பர் செழிக்கும்
பொன்னா டெம்நாடே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தென்றற் பூம்பொழில் செந்தமி ழருவி
திருமலை மணிமுத்தம்
குன்றொத் தனஉயர் கொம்பன் யானைக்
குலமுடையா ளெங்கள்தாய்.

6. பொங்கும் போர்த்துக் கேயர் ஒல்லாந்தர்
புல்லடிமைத் தொழில்போய்
அங்கில ராட்சியில் இங்கினி தடைந்தாள்
அன்னை சுதந்திரமே

7. செயராம நாதன், அருணா சலம்ஜேம்ஸ்
பீரிஸ், தம்பிமுத்தன்
சேனநா யகமுதற் புதல்வோர் ஈந்திடு
சுதந்திரம் வாழியவே.

8. சமூக பொருளா தார சமத்துவம்
தந்தென்றும் வாழியவே
சாதி மதப்பெரும் பூசல் தணிந்தன்னை
சாந்தியில் வாழியவே.

9. சிங்களர் தமிழர் முஸ்லிம் ஆதிய
செல்வநன் மக்களொன்றாய்
மங்கள அன்னை மணிக்கொடி தாங்கி
வாழ்த்தி வணங்கிடுவோம்.

10. மணமலி ஈழ மணித்திரு மாதே
மக்கள் நமஸ்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணதிசை அழகு ராணியெம் தாயே
கோடி நமஸ்காரம்

11. அன்பறி வாண்மை பொன்புகழ் ஈகை
அருளொடு வாழியவே
இன்ப சமாதானம் உலகெங்கு மோங்க
இனிதன்னை வாழியவே.

## வாழி கல்லோயா நங்கை

"1949ஆம் ஆண்டிலே கல்லோயாத் திட்டம் ஆரம்பமானது. கல்லோயா என்பது 'கல்' என்னும் அனுகரண ஓசை ஓயாமல் ஒலித்துக் கொண்டு பாயும் பட்டிப்பளை ஆற்றைக் குறிக்கும். இத்திட்டம் தொடங்கிய அன்றைக்கே இதன் பூர்வ வடிவத்தை என் அகக்கண்ணால் நான் கண்டுகொண்டேன். என் சிந்தனைச் சிற்பத்தில் அழகொழுக அதை அமைத்துக் கொண்டேன்."

- புலவர்மணி

(கல்லோயாத் திட்டம் ஆரம்பமான போது தன் அகக்கண்ணால் கண்டவற்றைச் சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரிப் பாங்கினில் இக்கவிதைகளாகப் புலவர்மணி இயற்றியுள்ளார்.)

1. காடும் நாடாய்ச் செழித்தோங்கக்
கழனிச் செல்வம் கனிந்தோங்க
நாடும் வாழ்விற் திகழ்ந்தோங்க
நடந்தாய் வாழி கல்லோயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் வாழ்விற் திகழ்ந்தோங்க
நடந்த புகழ்சேர் இனியநடைப்
பாடும் புகழ்சேர் இனியநடைப்
பாங்கே வாழி கல்லோயா.

2. இரவும் பகலாய் ஒளிவீசி
இங்கே சுவர்க்க நிலைகாட்டப்
புரவே பூண்டு தவழ்ந்தினிது
புகழ்ந்தாய் வாழி கல்லோயா
புரவே பூண்டு தவழ்ந்தினிது
புகுந்த தெல்லாம் நின்தலைவன்
திருவார் செனநா யகன்புரவின்
திறனே வாழி கல்லோயா.

3. கண்ணார் கரும்பின் தேன்பாயக்
கமழ்ந்தே ஆலைப் புகைசூழப்
பண்ணார் பாகின் பதந்தேங்கப்
பரந்தாய் வாழி கல்லோயா
பண்ணார் பாகின் பதந்தேங்கப்
பரந்த தெல்லாம் நின்தலைவன்
தண்ணா ரினிய மனப்பண்பின்
தகவே வாழி கல்லோயா.

4. மேல்பாற் பரிதி நிறத்தருனை
விரைந்து சிறைசெய் திட்டாலும்
சால்பாற் பரந்தே பசிபிணிகள்
தணித்தாய் வாழி கல்லோயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால்பாற் பரந்தே பசிபிணிகள்
தணித்த தெல்லாம் தண்மதியம்
போல்வான் நினது தலைவனருட்
பொலிவே வாழி கல்லோயா.

5. மலையி னிடையே அணைகோலி
வலிந்து சிறைசெய் தாலுமுனைப்
புலவாய் தொண்டர் சிறைபோன்றே
பொறுத்தாய் வாழி கல்லோயா
புலவாய் தொண்டர் சிறைபோன்றே
பொறுத்த தெல்லாம் நினைமணந்த
தலைவன் செனநா யகன்பொறையின்
தகவே வாழி கல்லோயா.

6. பரந்து விளையாட் டயருமுனைப்
பலகால் உழவர் சிறைசெயினும்
வரம்பு கடவாய் தெளிந்தோடி
வருவாய் வாழி கல்லோயா
வரம்பு கடவாய் தெளிந்தோடி
வருவ தெல்லாம் நின்தலைவன்
திருந்து சனநா யகவரம்பின்
தெளிவே வாழி கல்லோயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நன்னாடு

உலகமுவப் புறவுரக்கும் நூற்பொருள்கள் தெரிவார்
ஒருவர்தமக் கொருவர்நிதம் ஒப்புரவு புரிவார்
பலதிசையும் சென்றுமுயன் றீட்டுபெரும் பொருளார்
பரமனடித் தொண்டுபுரிந் தேத்துதிரு வருளார்
மலையெனநின் றுயர்ந்தோங்கு நன்மான முடையார்
மானமழிந் தெய்தவரு வருமான மடையார்
அலகில்புகழ் ஆறுமுக நாவலனாம் கொடையார்
அவர்வாழும் யாழ்ப்பாணம் அனைவோர்க்கு மினிதே.

## மட்டக்களப்பு நன்னாடு

"மட்டக்களப்பு மாநாடு என்றால் அது மீன்பாடும் தேன்நாடு. நான் பாலகனாயும் வாலிபனாயும் இருந்த போது கண்ட இந்நாட்டின் வளமையைச் சிறிது கூறுகின்றேன். இது இயற்கை நவிற்சி."

– புலவர்மணி

1. பால்பெருகும் தேன்பெருகும் பண்புடைய மன்னவர்செங்
கோல்பெருகும் படிவயற்பைங் கூழ்பெருகும் புனல்பரந்து
கால்பெருகும் கல்லார்க்கும் சொல்லாட்சி மிகப்பெருகும்
நூல்பெருகு மிடையார்க்கு நுவலறங்கள் பெருகுமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மோட்டெருமை வெண்தயிரும் முப்பழமும் கற்கண்டும்
போட்டினிய சீனிதேன் பொருந்துசெந்நெல் வெண்சோற்றை
கூட்டியொன்றாய்க் குழைத்ததனைக் குலக்குமரர் தமைக்கூவி
கூட்டுணுவார் அமிர்தமெனக் குறைவில்செல்வ மவர்க்கம்மா.

## ஒற்றுமை மந்திரம் உச்சரிப்போம்

பல்லவி

பிரிவினைப் பேயைக் கொல்லுவோம் – நாட்டில்
பேராசைப் பகையை வெல்லுவோம்.

அனுபல்லவி

ஒருமுக மாகச் செல்லுவோம் – நம்முள்
ஒற்றுமை கூடச் சொல்லுவோம் – (பிரி)

சரணம்

1. பலதலை விரித்தப்பேய் பாரெங்கும் துள்ளுதே
அலைகடற் கப்பால்நின்றே ஆவேசம் கொள்ளுதே
நிலைகுலைத் தெமைத்தாழ்ந்த நிலைமைக்கே தள்ளுதே
நீசச் செயல்புரிந்தே யெமைப்பலி கொள்ளுதே வாரீர் –
(பிரி)

2. பிரித்தனி லொருதலை பிரான்சினி லொருதலை
உருத்தாபி ரிக்காவில் உயர்த்துதே யொருதலை
விரித்தம ரிக்காவில் வெருட்டுதே யொருதலை
விரித்தீழ நாட்டிலே வெருட்டுதே யொருதலைவாரீர். – (பிரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆதிக்க வெறிபிடித் தலைக்குதே யொருதலை
சாதித் திமிர்கொண்டெமைத் தடுக்குதே யொருதலை
பாதித் தநீதிசெய்தார்ப் பரிக்குதே யொருதலை
சேதித்தே யித்தலைகள் சேமமுற வுலகம்வாரீர். - (பிரி)

4. ஒற்றுமை மந்திரத்தை உணர்ச்சியுடன் உச்சரிப்போம்
கற்ற அறிவைத்தாயின் கடமைக்கே யர்ப்பணிப்போம்
சுற்றிவருந் துன்பங்கள் துடைத்தின்ப வெற்றிகாண்போம்
சற்றுந் தயக்கமின்றித் தலைநிமிர்ந் தார்ப்பரித்தே - வாரீர்.
(பிரி)

## தேசியத் திருப்பொங்கல்

1. இலங்கையெனும் பாற்கலத்தை இனங்களெனும்
அடுப்பேற்றித் திருநாள் ஈதிற்
துலங்குணர்ச்சிக் கனல்மூட்டித் தூய்மைபெறு
வாய்மையெனும் அரிசி யிட்டே
நலங்கமழும் ஐக்கியமாம் நறும்பாகு
பயறுமுடன் கலந்து நன்கு
பலம்பெறவே தேசியத் திருப்பொங்கல்
படைத்துண்போம் சேர வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தீம்பா லரிசி செழும்பயறு பாகுமொன்றாய்
வேம்போ தினியசுவை மேவுதல்போல் - நாம் வாழ்வில்
துன்பம் வருங்கால் துளங்காதொன் றாகிநின்றால்
இன்பம் பெறுத லெளிது.

3. அன்பினிது பொங்க அறம்பொங்க ஆருயிர்கள்
இன்பசுகம் பொங்க இனிதாக - மன்புவியில்
பொங்கநறும் பால்வயல்கள் பொங்கப் புனல்பரந்து
பொங்குகதைப் பொங்கல் பொலிந்து.

4. தேசப்பற் றென்னும் திருவமுதுண் ணாதுகட்சிப்
பூசலெனும் நஞ்சுண்ணப் போகாதீர் - ஆசைப்
புதல்வீர் சுயதேவை பூர்த்திபெற நாளும்
உதவீர் கடனீ துமக்கு.

5. நீரிருக்க நல்ல நிலமிருக்கச் சோற்றுக்காய்
ஊரூராய்ப் போவ துனக்கழகோ - ஊரார்
அவமதிப்போ டீயும் அரிசியால் நாட்டின்
சுயமதிப்புப் போவதோ சொல்.

6. ஊரா ரரிசி உலையிட்டுப் பொங்கலெனும்
பேரார வாரம் பெறுமோதான் - சேர்வீர்நீர்
காணிப்பிட் டாளத்திற் கண்போற் சுயமதிப்பைப்
பேணிக்கொள் வீர்காண் பெரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி ஸ்ரீ. கி.வா. ஜகந்நாதன் அவர்களது அறுபதாண்டு நிறைவினைக் குறித்து மட்டக்களப்புத் தமிழக மக்கள் 30.8.66ல் நகரசபை மண்டபத்தில் அன்னாருக்கு மனங்களிந்தளித்த

## வாழ்த்து மடல்

## கலிவெண்பா

தெய்வத் திருவளருஞ் செம்மைமனத்துதித்த
மெய்வைத்த ஞான விளக்கொளிபோல் - வையத்தே
தூயவிபு லாநந்த சோதிதனைப் பெற்றமையால்
தேயமெலாம் போற்றுந் திருநாடு - பாயகலை
வெண்கதிரோன் நீரின் விளங்காத வெண்மையினைக்
கண்கொளவே நன்குவெளிக் காட்டல்போல் - தண்புனலின்

மேல்பாற் பரந்து விரிகதிரால் வாவியினைப்
பால்போல மாற்றுவதைப் பாராட்டிப் - பால்மதிய
மண்டலத்தை வாழ்த்துதல்போல் நீர்க்கீழ் அரமகளிர்
பண்டைத் தமிழ்யாழ் இசைபாட - உண்டினிது
வெண்தயிர்செந் தேன்செந்நெல் வெண்சோற்றுடனருந்திப்
பண்தவழும் நன்னாட்டுப் பாட்டமிழ்தம் - பெண்தகையார்

வாயொழுகக் கேட்டு மனநிறைவு கொண்டெவரும்
போயுரைக்க நீண்ட புகழ்நாடு - பாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதிநீ ரொலிநாட்டுக் கூத்தொலிக்கு மாறாய்
எதிரொலிசெய் தெங்கு மிசைக்கப் - புதிர்காவும்
ஓசையொரு மாதர் உரையசைக்கா வோசைமனை

வாசல்தொறு மொன்றாய் மயங்கியெழ - வீசுவலை
மீனுக்கு மூனுக்கும் வெண்ணெல்லுஞ் செந்நெல்லும்
தான்விலையாள் மாறித் தலைமயங்கச் - சோனகர்தம்
கோலளக்குஞ் சீலைக்குக் கொள்விலையாய் நல்லமரக்
காலளக்கும் நெற்குவியல் காண்பிக்கச் சாலவே
கோயிலிலும் பள்ளி குளங்களிலும் நீர்பெருகிப்
பாயும் நதியில்வயற் பண்ணையிலும் - போயொருங்கோர்
தாய்வயிற்றுப் பிள்ளைகள்போற் சார்ந்துசம மாயெவரும்
நேயமுடன் வாழும் நிறைநாடு - தூயமனச்
சிட்டர் புகழுந் திருநாடு செந்தமிழ்வாழ்
மட்டக் களப்பெனும் மாநாடு - உட்கனிந்து
மங்களஞ்சேர் நல்ல மணிவிழாச் செல்வ! நினைப்
பொங்கு மன்பாற் கண்டுமனம் பூரித்தே - இங்கு
வருக பொலிகவென்றே வாழ்த்தி யினிதாய்
உருகுமுரை கேட்பா யுவந்து; - திருவுடைய
சான்றோர் புகழ்சாமி நாதையர் சூலுளைந்தே
ஈன்ற தமிழின் வடிவமெனத் - தோன்றி
வருமனது நல்வரவால் வள்ளல் ஜகநாதா
பெருமிதங்கொண் டோம்தமிழர் பேறே - உருவத்தால்
ஓங்கு சமனொளியை யொப்பாய் உரைவளத்தால்
தேங்கமழு மாவலித்தெண் ணீர்ப்பெருக்கை - வாங்குகடற்
கீரிமலை யூற்றைக் கிளர்கன்னி யாயெனும்வெந்
நீர்நிலைக ளேழும் நிகர்வாய்நீ - சேருமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழம் அமைதி யடக்கத்தாற் கோணமலை
சூழு மியற்கைத் துறைபோல்வாய் - வாழி
தெளிவால் இனிமையாற் சீர்விபுலா நந்தர்
உளமார் கவிநலனை யொப்பாய் - இளமைவளர்
தென்மொழியைச் செய்ய சிவநெறியை - வேல்முருகன்
தன்வடிவிற் கண்ட தனிநோக்கும் - தொன்மைவளர்

சங்கத் தமிழைச் சமயப் பொருளை மக்கள்
சங்கத்தி லேற்றிவைத்த தண்ணளியும் - எங்கும்
கலைவிளக்கம் போன்ற கலைமகளால் நாட்டின்
நிலைவிளக்கஞ் செய்த நெறியும் - தலையாய
தெய்வத் திருக்குறளுட் செந்தமிழெல் லாங்காட்டிச்
செய்தகலை யாக்கத் திருப்பணியும் - ஐயாநின்
உள்ளழகின் தோற்றமென்வொளிர்ந்தே தெள்ளுதமிழ்
உள்ளளவும் வாழ்விக்கும் உன்புகழை உள்ளத்தே
உள்ளுதொறும் உள்ளுதொறும் உன்னினிமை செய்தமிழ்போல்
அள்ளிக்கொள் வன்ன அழகுடைய - நல்லோய்
சதாபிஷே கங்கண்ட சான்றோ னெனநீ
சதாமங்களந்தழைத்து வாழ்க - சதாநிதமும்
மல்லல் வளஞ்சுரக்கும் மட்டுநன் னாட்டுவயல்
நெல்லினும்பல் லாண்டு நிறைந்து.

இன்னணம்
மணிவிழாக் குழுவினர்

*கவிதை : புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

## முதல் தமிழ் ஆசிரியர் வணக்கம்

எங்கள் ஆசிரியர் யாழ்ப்பாணம் புலோலியைச் சேர்ந்தவர். அவர் பெயர் சந்திரசேகர உபாத்தியாயர். மட்டக்களப்பில் எங்கள் இனத்துள் கலந்து கொண்டவர். ஒரு முதுபெரும் புலவர். புத்தகம் பாராமலே பாடம் சொல்பவர்.

- புலவர்மணி

1. அன்னை நிகரன்பின் ஆசானென வந்தே
என்னைத் தமிழ்த்தாய் இணையடியில் - மன்னுவித்த
சந்திர சேகரனார் தாட்கமல நாட்போதெம்
சிந்தை மலர்க தினம்.

## சுன்னாகம்
## அ. குமாரசுவாமிப் புலவருக்கு வணக்கம்

2. வண்மைத் தமிழ்க்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி - கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக் கியான்செய் சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபுலாநந்த அடிகளார்

1. பண்டித சிரோமணிநற் பாலியசன் யாசிசெஞ்சொற்
கொண்டல்கவி இன்பம் குணக்குன்றம்
- மண்டழல் போல்
தூயவிபு லாநந்த சோதி மலரடிக்கே
நேயமெலாம் வைத்தேனென் நெஞ்சு.

2. முத்தமிழின் வடிவமெனத் தோன்றிமேற்கு
மொழிக்கடலும் வடகடலும் முறையினாடித்
தத்துவநன் னெறியுணர்ந்து சாந்திகண்ட
தவமுனியை இசைத்தமிழின் தந்தையென்ன
வித்தகயாழ் நூலருளும் விபுலானந்த
வியன்மணியை யீழமணி விளக்கைநாளும்
சித்தமதில் மகிழ்ந்தேற்றிப் பத்திசெய்து
புத்திதெளிந் துண்மைவழிச் செல்வோம்யாமே.

## மகாலிங்கசிவ மலர்

(புலவர்மணி காவிய பாடசாலையிற் சேர்ந்து கற்கக் காரணமாயிருந்தவருள் ஒருவரான பாவலர் வே. மகாலிங்கசிவத்தின் மறைவின்போது பாடப்பட்டவை. பதினைந்து பாடல்களில் நான்கு பாடல்களே கிடைத்துள்ளன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்தமலர்
சாதிமலர், மலர்கள் தாழ
மட்டவிழ்ந்து மணங்கமழ்ந்து வயங்குமலர்
மாணவராம் வண்டு சூழ்ந்து
தொட்டருந்து மினியமலர் மகாலிங்க
சிவமலர்தன் தொடர்பாம் பாசக்
கட்டறுந்து கருணைமலர் சிவபெருமான்
கழல் மலர்க்கீழ்க் கலந்ததன்றே.

2. தண்முகஞ்சேர்ந் தொழுகிவிளை புலம்நிரம்பச்
சமத்துவமாய்ச் சார்வோர் கொள்ள
உண்முகஞ்சேர் அகம்புறமாம் ஒண்பொருளின்
வளம்பெருக்கும் உபகா ரத்தால்
மண்முகஞ்சேர் மகாவலிகங் கைக்கிணையாம்
மகாலிங்க சிவனா ரின்று
விண்முகஞ்சேர்ந் திடுதுயரம் தமிழுலகம்
தாங்கிடுமோ விதியி தாமோ.

3. பட்டுடையு மிலையாடம் பர நடையு
மில்லைவெளிப் பகட்டு மில்லை
பொட்டுமிலை புனைவிரலிற் பொன்கணையா
ழியுமில்லை போலி வேடக்
கட்டுமிலை செருக்குமிலை கலைத்தொண்டே
நிலைத்தொண்டாய்க் கருத்துட் கொண்டாய்
சிட்டர்புகழ் மகாலிங்க சிவமேநின்
சிறப்பியல்பு தெரிவார் யாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திறந்தமனம் நிறைந்தகுணம் தெளிந்தமொழி
சிறந்தநடை திருந்து நீதான்
இறந்தனையென் றறைந்தஉரை இலங்கைமுழு
வதும்வெதுப்பி இமயம் சார்ந்த
துறந்தமனத் தொழுந்தகையும் சோகமுழந்
திடச்சென்று சுட்ட தானால்
மறந்தெங்ஙன் ஆற்றிடுவோம் நின்பிரிவை
மகாலிங்க சிவப்பேர் வள்ளால்.

*துறந்தமனத் தொழுந்தகை - அடிகளார் விபுலாநந்தர்.*

## விபுலானந்தர் மீட்சிப்பத்து

1. காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு கடவுட் காதல்மகன்
கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர் கண்ணிறை திருமயிலோன்
ஏரேறும்படி கீழ்பால் மேல்பா லாக்கிநல் லிசைநட்டோன்
இமயத் தலையிற் தமிழ்முத் திரைவரை ஈழக் கரிகாலன்
சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில நூற்சுவை யினிதூட்டித்
தெருட்டும் புதுமைக் கபிலன் கலியுக தெய்வ அகத்தியனாம்
பாரே றும்புக ழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே
பண்மொழி விபுலா நந்தன் வாழ்கெனக் கூவாய் பைங்குயிலே.

2. ஈழ முதற்பனி இமயம் வரைக்கொடி கட்டுமிசைத் தமிழன்
இந்திய வாணியை ஆங்கில பீடத் தேற்றிய புதுமையினோன்
தோழமை கொள்வட மொழிமய மாகிய தொன்மை இசைத்தமிழை
தூய தனித்தமிழ் வடிவிற் தோற்றிய தந்தை யெனுந் துணையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழமு தத்தமிழ் வாணர் மதிக்கொரு சோதிச் செஞ்சுடரோன்
சுவாமி சிவானந் தக்கட லாடிய படிமைத் தோற்றத்தோன்
வாழி யவன்சுக மீள்கென வினிதே கூவாய் வரிக்குயிலே
மாதவ விபுலா நந்தன் வாழ்கெனக் கூவாய் வரிக்குயிலே!

3. வெள்ளிப் பனிமலை வாரத் தேறிய மேன்மைப் பேறுற்றோன்
வேதத் தனிமுத லாதித் திருநிறை சோதிச் சுடர்கண்டோன்
அள்ளிக் கொள்வன அழகுத் தோற்றத் தாழ்ந்த வியப்பானோன்
ஆண்டொரு மூன்றாங் கண்டு ணாற்றும் அருந்தவ நிலைநின்றோன்
உள்ளத் துயர்வென வோங்கிடு மீழப் பல்கலை மன்றத்தே
ஒளிர்தமிழ்ப் பீடத் தெழிலுற வேறிய ஒருமுதற் பேராசான்
வள்ளற் குருமணி தோள்வலி மீள்கெனக் கூவாய் மாங்குயிலே
மனநிறை விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் மாங்குயிலே.

4. பாற்கடல் மீதொரு மரகத மலைதான் பைம்பொற் போர்வைகொடே
போர்த்தியதென்னப் பொலிதிரு மேனிப் புனிதத் திருவுருவான்
மேற்கடல் மிசையெழில் வெற்றித் திருவினில் வீறு கொழும்புநகர்
வேந்தர் வயித்திய சாலை யுளான்சுர வெம்மை தணிந்திடுவான்
நூற்கட லசைவில் குணக்கட லருள்வளர் நோன்மைத் தவவலியான்
நோய்நலி யாதுடல் தான்மெலி யாதுபன் னூறாண் டுயிர்வாழ
நாற்கட லுலக மகிழ்ந்திட நன்றே கூவாய் நறுங்குயிலே
நம்பன் விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் நறுங்குயிலே.

5. மாசமொன் றாய்த்தமிழ்ப் பொன்னுரை யாதொரு மாற்று மிலாதநிலை
வருசுர நோய்க்க யரான்தமி ழன்னையின் வறுமை நிலைக்கயர்வான்
பாசமெ லாமவன் தாய்த்திரு நாட்டுப் பணிசெயல் மீதுளதால்
பைந்தமி ழன்னை திருப்பணி தொட்டன பாதிகை கூடவிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெ லாமவன் தேசு சுகம்பெறு செய்திக் குருகுவன
செந்தமி ழுன்னையோர் நூறாண் டின்பின் தேடு பெருஞ்செல்வம்
வாசமு லாந்திரு வாயால் மீள்கெனக் கூவாய் மணிக்குயிலே
மதிநிறை விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் மணிக்குயிலே.

6. தமிழ்தலை தாங்கிய நான்காம் மதுரைச் சங்கச் சான்றோன்காண்
தண்ணார் கரந்தைச் சங்கம் போற்றும் தகைசால் மூதறிவோன்
அமிழ்தத் தமிழ்முதற் பேரா சானாய் அண்ணா மலையமர்ந்தோன்
ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத் தறிவர்பிரான்
இமிழ்கடல் இலண்டன் மாநகர்ப் பௌதிக இயல்தேர் விஞ்ஞானி
இன்னுஞ் சென்னைக் கலைச்சொற் சபையின் ஏற்றம் பெறுதலைவன்
கமழ்தமிழ் நாடு காணி யுனக்குக் கூவாய் கவிக்குயிலே
கலைநிறை விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் கவிக்குயிலே.

7. அறப்பயிர் நாட்டிய உழவோ னப்பயி ராக்கம் குருதேவர்
அருள்நீர் பாய்ச்சி வளர்த்தே அன்புக் காவ லமைத்தபிரான்
புறப்பகை வெள்ளைப் புள்ளொடு கருமைப் புன்மை விலங்கோட்டிப்
போற்றுஞ் சொல்லம் பானுட் பகைகடி ஞானப் பொன்வாளான்
துறப்பெனு நிலைசேர் தெப்பத் தேறித் துயர்க்கடல் நீத்தமகான்
சுந்தர ராம கிருட்ண சங்கம் தந்தெமை வாழ்வித்தோன்
சிறப்பமை தோள்வலி மீள்கென வாழ்த்திக் கூவாய் செழுங்குயிலே
திருநிறை விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் செழுங்குயிலே.

8. செவிக் கினிதாகச் செந்தமி முறுத்துமென் தேசிக மணிகண்டாய்
சீர்வள ரீழத் திருமணி பாரத தேசப் பொதுமணிகாண்
புவிக்கினி யலைந்து வறுந்தளிர் கோதி வருந்தேல் போவாயேல்
புத்தமிழ் தளைந்த முத்தமிழிதமுன் பொன்வாய் விருந்திடுவோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்பினி நீங்கத் தமிழ்மொழி யோங்கத் தாய்நா டின்புறவே
தமிழன் தன்தலை நிமிர்ந்தே யுலக சமத்துவம் வென்றிடவே
கவிப்புல வோன்சுகம் மீள்கென வினிதே கூவாய் கவின்குயிலே
கண்மணி விபுலா னந்தன் வாழ்கெனக் கூவாய் கவின்குயிலே.

9. மல்கலை யீழப் பல்கலை மன்றக் குழுவினர் மனமாற
வண்கவி யின்பங் கூட்டுண் புலவோர் மதிதளர் நிலைமாற
நல்கலை யுடைய வள்ளல்க ளின்ப வெள்ளத் தேசார
நற்கலை கற்று மெய்யுணர் துறவோர் நடுநிலை நின்றோரச்
சொல்கலை கற்போர் சோர்நிலை நீங்கித் துள்ளிக் களிகூர
தொடர்படு மன்பிற் பிணிபடு நல்லோர் துயர்விட் டொளிசேர
வெல்கலை மேலோன் மீள்கென விரைவாய்க் கூவாய் மென்குயிலே
விபுலா னந்த வியன்மணி வாழ்கெனக் கூவாய் மென்குயிலே.

10. திருநிறை குணமலை நின்றோன் தெய்வத் திருவருள் நதிபடிவோன்
சீரிய மட்டுநன் னாடுடை யோனுயர் சிவபுரி தனில்வாழ்வோன்
பொருள்நிறை பன்மொழி மாலிகை யோனிசை யாழ்நூற் புரவியினோன்
புலமேய் ஐம்பொறி யானை யடர்த்தோன் பூங்கா விக்கொடியோன்
அருள்நிறை சமய சமத்துவ முரசம் அடிப்போன் குருதேவர்
ஆணை தனைச்சிர மேகொடு தாங்குமெம் மடிகள்பல் லாண்டுறைக
இருள்நிறை யுலகொளி சூழ்கென வாழ்த்திக் கூவா யின்குயிலே
இசைத்தமிழ் விபுலா னந்தன் வாழ்கெனக் கூவா யின்குயிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாயின் வழவில் விபுலாநந்தன்

வாய்மை நல்லறம் காத்தவன் வஞ்சமாம்
வல்லி ருட்பகை மாய்த்தவன் மாசிலாத்
தூய்மை உள்ளம் படைத்தவன் யாவர்க்கும்
சொந்த மாத்தன்னை யர்ப்பணம் செய்தவன்
நோய்மை செய்யும் புலனைந்தும் வென்றவன்
நோற்று யர்ந்தமுனி விபு லாநந்தன்
தாய்மை யன்பு கனிந்தெம் மனத்துளே
சார்ந்த னன்தமிழ்த் தாயின் வடிவிலே.

## நல்லாசிரியர்க்கு நிகர் யாருமில்லை

1. உலகினுக் குழவர் உயிரென உரைப்பர்
உரைத்திடு முரையுண்மை யேனும்
அலகில்பல் லறிவு புகட்டுமா சிரியர்
அவ்வுயிர்க் குயிரென அறிவீர்
பல்கலைத் துறையின் பயிற்சியா சிரியப்
பணியினால் நிறைவுறும் பயனால்
நிலவுசீர் நல்லா சிரியரை நிகர்க்கும்
நீர்மையர் யாவரே புவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கல்வியு மறிவும் கனிமனப் பண்பும்
கருத்தினி லுணர்ச்சியும் அமைவும்
சொல்வள மடக்கம் ஒப்புர வுண்மை
துலங்குநற் பரம்பரைத் தொடர்பும்
செல்வமா யமைந்த உடல்நலம் ஒழுக்கம்
தேசிய அடிப்படை நோக்கும்
வல்லவர் பயிற்சி நெறிமுறை கற்றால்
வயங்குமா சிரியராய் வாழ்வார்.

## சமர்ப்பணம்

(பகவத்கீதை வெண்பாவின் முதற்பாகமான கர்மயோகத்தை ஸ்ரீமத் விபுலாநந்த அடிகளாருக்குச் சமர்ப்பணம் செய்து பாடியது)

சங்கத் தமிழ்மதுரைச் சத்திரத்தில் வைத்தெம்மை
அங்குவச மாக்கி யருள்செய்தே - தங்கியெம்
புத்தி புகுந்தவிபு லானந்தர் பொன்னடிக்கண்
வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் தமிழ்ப் புலவரும்

## செந்தமிழ்ச் செய்யுளின்பம்

1. கண்ணுக்கினிய சில பொருள்கள் - இரு
காதுக்கினிய சில பொருள்கள்
உண்ணற்கினிய சில பொருள்கள் - தொட்டே
உவத்தற்கினிய சில பொருள்கள்

2. மணத்தற்கினிய சில பொருள்கள் - உலக
வாழ்விலினிமை தரும் சுவைகள்
குணத்திலொரு புல னுக்கொன்றாய் - இன்பம்
கொள்ளவமைந்து நிற்குமவை.

3. உண்ணவுண்ண ருசி தெவிட்டும் - மிக
உண்டாற் துன்ப மெனவெறுக்கும்
எண்ணுமிவற்றில் வரு மின்பம் - மன
இயல்பிற்தோன்றி மறைந் திடுமாம்.

4. ஐந்துபுலனு மொரு பொருளில் - ஒன்றாய்
அமைந்து நுகரு மின்பங்கண்டேன்
செந்தமிழ்ச் செய்யு ளின்பமுண்டால் - இங்கே
தேவனெனவாழ்ந் திடுவை கண்டாய்.

5. கன்னித்தமிழ்க் கவி இன்பம் - உண்ணக்
காதலால் நெஞ்சு வாடுகின்றேன்
முன்னைப்பிறப்பி லுயி ருடனே - அது
முளைத்துவளர் தெய்வக் காதல்கண்டாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவனார் வேதத்தமிழ்

(1958ஆம் ஆண்டு ஆனிப் போசன் தினத்தன்று அனுராதபுரம் திருக்குறள் மகாநாட்டுத் தலைமை உரையின் பின் பாடியது)

உள்ளம் தெளியும் உரைதெளியும் மாவலிநீர்
வெள்ளம்போற் பேச்சு விரைந்துவரும் - வள்ளுவனார்
வேதத் தமிழை விரும்பியே முப்போதும்
ஓதத் தெளியும் உணர்வு.

## தமிழ்ப் பாதுகாப்பு

பல்லவி

காப்போ மெழுந்திடுவீர் - நம் தாய்மொழியைக்
காப்போ மெழுந்திடுவீர்.
- காப்போம்

அநுபல்லவி

தீப்போற் கொதித்தெழுந்து
தியாகம் பல புரிந்து
மீட்போமென் றாணையிட்டு
வீரத் தமிழர்களே - காப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

1. இந்து சமுத்திரத்தின் எல்லை யளந்தமொழி
இமயம் வரையும்புகழ் ஈட்டியே வென்றமொழி
சிந்துவெளியில் மங்காச் சிறப்புட னாண்டமொழி
தெய்வத் தமிழ்மொழிநம் செல்வத் திருமொழியைக்
– காப்போம்

2. மன்னர் வளர்த்தமொழி மாநில மாண்டமொழி
பன்மொழி வாணர்களும் பாலித்துக் காத்தமொழி
உண்ணு முணவில்நீரில் உயிரி லினியமொழி
கண்ணிற் சிறந்தநம் கன்னித் தமிழ்மொழியைக்
– காப்போம்

## பாரதிக்கு அஞ்சலி

1. காலமாம் கற்பகத்தில் தோன்றிமலர்ந்தே – இன்பம்
கமழும் மறுமலர்ச்சித் தேன்சொரிந்தே
ஞாலமீ திருபதாம் நூற்றாண்டில் – தமிழ்
நாட்டிற் புதுமைசெய்த ஞானகவி.

2. உள்ளத் துணர்ச்சிபொங்கப் பாடுங்கவிஞன் – உடல்
உதிரம் கொதித்துருகப் பாடுங்கவிஞன்
வெள்ளம்போற் பாயுமின்பப் பாட்டினிலே – வேக
வீரக் கனல்பறக்கப் பாடுங்கவிஞன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வறுமையிற் செம்மைகண்ட மாகவிஞன் - நாட்டு
வறுமைக் கிரங்கிமனம் வாடுங்கவிஞன்
திறமை யிழந்துநாட்டு மக்களடைந்த - பொல்லாச்
சிறுமைக்குத் தன்னைப்பலி செய்தகவிஞன்.

4. தீயைப் பிழிந்துகவி செய்தானோ - வீறு
சேர்ந்த வீரக்கனலைப் பெய்தானோ
மாயப் பகைகளெல்லாம் பொடிபடுமே - மானம்
வளரும் தேசியக்கவி வெம்மையிலே.

5. காவியமெல் லாம்வடித் தெடுத்தானோ - சுவை
கனியும் அமிழ்துமுடன் குழைத்தானோ
ஆவிதனை யுருக்கி இனித்துநிற்கும் - அவன்
அழகுசெந் தமிழ்நாடாம் திருப்பாட்டே.

6. அன்பு வடிவமவன் குயிற்பாட்டு - நம்மை
ஆனந்த நிலைசேர்க்கும் கண்ணன்பாட்டு
என்பு முருக்குமேபாட் டாளிபொருட்டு - அவன்
இதயம் ,கிழித்ததுன்பக் கரும்புப்பாட்டே.

7. பாஞ்சாலி சபதமாம் பாட்டினிலே - உண்மைப்
பக்தியின் வெற்றியினை நாட்டிவிட்டான்
மாஞ்சாலும் மடிந்தாலும் உலகினிலே - தர்மம்
வாழ்ந்திடச் சூதமிழிதல் காட்டிவிட்டான்.

8. ஓங்கி யுயர்ந்தஞானப் பேரொளியாம் - வேத
உபநிடதப் பொருள்கள் ஒன்றுதிரட்டிப்
பாங்கா யிசைக்குமவன் ஞானப்பாட்டை - ஒருக்கால்
படித்தால் மனத்துயரம் பறந்துபோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9\. பெண்ணின் குலத்தையெங்கும் உயர்த்திவிட்டான் - சிறு
பிள்ளைகள் வாழ்வைநன்றாய் அமைத்துவிட்டான்
தன்னையீன் றெடுத்ததாய் நாட்டினையே - வானோர்
பொன்னுலகினும் போற்றிப் புகழவைத்தான்.

10\. போலிப் படிப்பையவன் கேலிபண்ணி - மனம்
பொறுமை யிழந்துபாடும் பாட்டைக்கேட்டால்
வாலிபர், கன்னியர்கள் மனந்திரும்பித் - தங்கள்
வாழ்வுக்கும் கல்விக்கும் தொடர்புகாண்பார்.

11\. இயற்கை யமைவுடைய கவிதைப்பெண்ணை - அவன்
இசைத்திடு கற்பனையால் அழகுபண்ணி
மயக்க மிலாப்பொருளாம் உயிர்கொடுத்தே - காதல்
மனத்தி லவளையெம்மோ டிணைத்துவைத்தான்.

12\. பாடிப்பாடி நிதம் மனமுருகித் - தனது
பாட்டு மவனும் பரவசமாகி
கூடிநம்முட் கலந்த பாரதியை - மனம்
குளர நினைந்துநினைந் தஞ்சலிசெய்வோம்.

## தமிழ் ஊட்டல் இனிது

கற்ற லினிததனிற் கன்னித் தமிழ்தமிழன்
கற்ற லினிததனைக் கற்றலினும் - கற்றவரை
நன்கு மதிப்பினிது நாட்டிலொரு வர்க்கேனும்
இங்கதனை யூட்டல் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனைத் தமிழ்ச் சாகித்திய விழாவில்

1. நாடியொரு மூன்றும் நடத்தல்போல் நம்முடற்கண்
கூடியினம் மூன்றுமொன்றாய்க் கொண்டாடும் - நீடுதமிழ்ச்
சாகித் தியவிழாத் தான்பொலிக நாளெல்லாம்
ஏகபரன் காக்க இனிது.

2. நீலமணி வெண்முத்தம் நீள்சிவப்பு மாணிக்கம்
போலமொழி மூன்றும் பொலிந்திலங்கச் - சீலகுணச்
செல்விசிறீ லங்கா திருப்பொன் முடிபதிப்போம்
நல்லெழுது கோலாலே நாம்.

3. முத்தமிழ்போல் மூன்றாவோம் மூன்றுமொன்றாய் வாழ்வதுபோல்
இத்தரையில் வாழ்ந்தே இணைந்திடுவோம் - நித்தமும்நாம்
காப்போம் தனித்தன்மை தேசியக் கண்கொண்டு
பார்ப்போம்செய் வோம்தாய் பணி.

4. எழுத்தாள நண்பர்க்கென் வேண்டுகோள் ஈது
பழுத்த புலமையைப்பா வித்தே - மொழிக்குமொழி
ஆற்றுமுப கரத்தால் அவ்வவர்தம் தாய்மொழியைப்
போற்றி வளர்த்தல் பொருள்.

5. எட்டினமட் டும்பாயும் ஏவுகணை இவ்வுலகில்
எட்டாத தூரமெலாம் ஏகியே - பட்டுருவிப்
பாயும் எழுதுகோல் பாவிப்போம் நாமதனை
நேசக் கரம்பிடித்து நின்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உண்ணு முணவில் உயிரில் எமதிரண்டு
கண்ணின் இனிய கவின்மொழியால் - பண்ணமிழ்த
இன்பத் தமிழால் இளஞ்சந் ததிவாழ
அன்புப் பணிபுரிவோம் யாம்.

7. உண்மை யழகுசெம்மை மூன்றுமிணைந் தொன்றாகும்
வண்ணமெழுத் தாளர் வளம்பெறுக - எண்ணமதில்
சிந்தனையிற் செய்கையினில் தேசிய ஒற்றுமையே
சந்ததமும் வாழ்க தழைத்து.

## திருவாசகப்பயன் பெரிதுரைத்த அருளம்பலவனார்

கண்ணொடு மனமும் இரண்டறக் கலந்த
காட்சியி னனுபவம் மலர்ந்து
மண்ணொடு கனிந்து சாத்விக நிலையிற்
பகர்திரு வாசகப் பயனைப்
பெண்ணொடு முடனாம் பிரானருள் காட்டப்
பெரிதுரைத் தாங்கதிற் கலந்தார்
எண்ணொடு மொன்றாய் நின்றநல் லருளம்
பலவர்சீர் இயம்புதற் கினிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோத்திரப் பாமாலை வாழ்க

நேத்திரம்போ லிலங்குகலை நிதிநிறைய
மதிதெளிய நெகிழு மன்பின்
பாத்திரமாம் உளமுருகப் பராசக்தி
சரசுவதி பாதம் போற்றி
நாத்திருந்தும் கவியரசு முருககூ
ரியன்நவின்ற நலஞ்சேர் தூய
தோத்திரப்பா மாலையினி தரங்கேறித்
துலங்கதமிழ்த் தொண்டு வாழ்க.

## வாழிய கலைப்புலவன்

1. கற்பனையின் கடல்படிந்து கலைவாணர்
தம்முணர்வுக் கணணாற் கண்ட
சிற்பநிலை தெளிந்துயிரோ வியத்திறமுந்
தெளிந்துநவ ரத்ன மென்னும்
பொற்பமையுங் கலைப்புலவன் கலைவளர்ச்சி
யெனுஞ்செழுநூல் புனைந்தே யின்பக்
கற்பகமாம் பொன்னைய வேள்நினைவுக்
குரிமைசெய்தான் காண்போம் வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தென்னாட்டில் வடநாட்டிற் திகழ்அழகுக்
கலைகள்பல தென்னி லங்கைப்
பொன்னாட்டில் வளர்ந்தவர லாறுரைக்கும்
புதுநூல்செய் ததனை யிங்கே
தன்னாட்டை யுயர்த்தீழ கேசரிப்பொன்
னையாவின் தகைமைக் கீந்தான்
இந்நாட்டு வரலாற்றி லிவன்பெயர்பொன்
னெழுத்தினா லெழுதற் பாற்றே.

3. வண்ணமொடு வடிவுதொழில் பயனென்ப
வாய்ந்தினிது வயங்கக் காண்பார்
எண்ணமொடு செயல்மறந்தே ஈடுபட்டு
மனமுருகி இன்பம் காணும்
பண்ணமையும் சிற்பமுட னோவியத்தின்
படிவமெலாந் தமிழ்ப்பண் பாட்டின்
வண்ணமெனக் காட்டியரங் கேறுமிந்நூல்
தமிழ்மொழிக்கோர் வாழ்வு தானே.

4. உள்ளழகே புறவழகி னுயர்வுடைய
தெனவுணரு முணர்ச்சி யூட்டும்
வெள்ளமெனு மன்பூற அகமொன்றாய்
உள்ளுருக்கி மெய்ம்மை காட்டும்.
தெள்ளுதமிழ்ச் சிற்பமுட னோவியத்தின்
திறமிதுகா ணெனவே தேற்றும்
அள்ளமுத சுரபிநிகர் இந்நூல்நின்
றகிலமெலா மினிது வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உய்வண்ணச் சைவநெறி யுரைத்தினிதாய்
உயர்தமிழர் உலகம் போற்றுங்
கைவண்ணத் தாற்பவுத்த நெறிதெரிக்குங்
கலைக்கோயிற் கவினுங் காட்டிச்
செய்வண்ணக் கலைமாட்சி தெரித்தினிய
திருவுடைத்தாய்த் தேருந் தோறும்
மெய்வண்ணங் காட்டுமிந்நூல் இலங்கைவளர்
மக்களுக்கோர் விருந்தாய் வாழி!

## தமிழர் மன மணிவிளக்கு

(நாவலர் பெருமான் திருவுருவச்சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது பாடியது).

1. செந்தமிழின் திருவுருவோ சிவநெறியின்
பெருவாழ்வோ சமயப் போரில்
கந்தனென வந்தசைவத் தளபதியோ
கருணைவளர் நால்வர் பின்னே
வந்தருளைந் தாம்சமய குரவரோ
தமிழர்மன மணி விளக்கோ
சிந்தைவளர் விழாக்கோலப் பவனிவரும்
திருவுருவச் சிலையில் நின்றார்.

2. அஞ்சாமைக் கொருதமிழன் மாற்றார்முன்
அனுதினமும் அஞ்சி அஞ்சித்
துஞ்சாமைக் கொருதமிழன் தொழுதுபிறர்
தமையுரிமை தாதா வென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சாமைக் கொருதமிழன் கீழ்ப்படுத்தித்
தனையெவரும் அதிகா ரத்தால்
மிஞ்சாமைக் கொருதமிழன் நாவலர்தம்
சிலைப்பவனி விரைந்து காண்மின்.

3. நுண்கலைச்சிற் பியர்குறித்த நோக்கணுவும்
பிழையாமல் நோக்கி நோக்கி
வெண்கலத்தில் வடித்தசிலை வீதிவலம்
வருமினிய விழாவின் காட்சி
கண்கலப்பக் கண்டமக்கள் கடலொலித்த
வாழ்த்தொலிமண் கடந்தப் பாற்போய்
விண்கலப்ப மகளிருடன் விண்ணவரும்
விழைவுகொள்ளும் விழாக்கோள் காண்மின்.

4. இனியதமிழ் வசனநடைக் கிவனொருவன்
நூற்பதிப்புக் கிவனே கல்லும்
கனியவுரை சொல்வன்மைக் கிவனொருவன்
கண்டனஞ்செய் எதிரி தோற்றுக்
குனியமடக் கிடுதருக்க வாதத்துக்
கிவனொருவன் மாற்றார் கும்பல்
தனியொருவ னெனத்தொலைத்த தமிழ்வீரன்
சிலைவடித்த தபதி வீரன்.

5. காலமெனுங் கற்பகத்தில் கனிந்ததமிழ்க்
கவின்கனியைப் புனித சைவ
சீலமெனும் செழுங்கனியைத் திருத்தொண்டர்
சேவையிலே திளைத்த சைவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமெனுங் கொழுங்கனியை ஈன்றகிளை
தமிழரெலாம் கூட்டுண் டிந்த
ஞாலமிசை வாழவைத்த நல்லூராம்
நறுங்கிளையின் நிழலெம் வாழ்வே.

## வித்துவ சிரோமணியின் 80 ஆம் ஆண்டு நிறைவு விழாப் பாட்டு

1. நூல்நிலையம் குருவாக நூற்பொருளின்
மேற்பரப்பின் நுனியில் நின்றே
கால்மதியும் அறியாமே கலைவளர்க்கும்
குழுமலிந்த கால மீதில்
நூலிதுநூறு பொருளீது நுவல்முறையீ
தெனஅவற்றின் நுண்மை காட்டி
மாலகற்றும் ஆசிரிய பரம்பரையின்
விளக்கமென வயங்கி நின்றோன்.

2. எண்பதுநல் யாண்டுகழிந் திறப்பளவும்
மாணியென இருந்த தூயோன்
உண்பதுவும் தமிழ்ச்சுவையே உயிர்ப்பதுவும்
தமிழுயிர்ப்பே உளஞ்சே ரன்பின்
நண்பதுவாய்ந் தான்றவிந்தே அடங்குநல்லோன்
நடைபயின்றே நலஞ்சே ருள்ளப்
பண்பதிலே பழகுமின்பப் பேறுபெற்றோர்
கொடுத்துவைத்த பயன்பெற் றாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் பூபாலபிள்ளை இரங்கற் செய்யுள்

1. பட்டார் களத்தே பண்டிதர்பூ பாலபிள்ளை
எனுஞ் சொல்லால்
சுட்டார் சுட்டசொல் தமிழர் மனமும்சுட்டே
ஆசிரியர்
வட்டாரத்தில் நெருப்பூட்டி மயல் நீத்துலக
ஆசைதனை
விட்டார்மனமும் சுட்டதெனில் எங்ஙன் வெம்மை
யாம்பொறுப்போம்!
விஞ்ஞானம்செய் அணுக்குண்டின் வெம்மை இதினும்
சுடுமோதான்.

2. நிமிர்ந்த நடையை, அன்பொழுக
நெகிழ்ந்த நோக்கை, மெய்யடியார்
அமர்ந்த மனத்தை, அருளொளிபோல்
அள்ளிப் பூசும் திருநீறு
திமிர்ந்த வடிவைச் சைவமணம்
திளைத்தே, இனிய செந்தமிழ்த்தேன்
கமழ்ந்து துளிர்க்கும் வாய்மலரை
இன்னுங் காணப் பெறுவோமோ?
கலைப்பண் பமைந்த பண்டிதரை
ஒருக்கால் இன்னும் காண்போமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களமும் செந்தமிழும் சமநிலையில் அரசு செய்க

1. வாழியநற் கல்வி வளர்செல்வம் பண்புடைமை
வாழி இலங்கை மதிப்பெங்கும் - வாழியவே
சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமநிலைக்கண்
இங்கரசு செய்தே இனிது.

2. சிங்களமும் செந்தமிழும் சேர்ந்துசம மேயிலங்கை
எங்கும் அரசமொழி யென்னவே - துங்கமுடன்
ஆட்சி புரியவழி யாக்குவதே யெல்லாரும்
மாட்சியுடன் வாழும் வழி.

## நாகரிகத் தமிழ்வாழ்வின் மணிமுடி

1. தனிமனித னுரிமையெனு மடிப்படையி
னுலகசமு தாய வாழ்வைப்
புனிதமுற வகுத்தமைத்த திருக்குறளாம்
பொதுமறையைப் புவன மெல்லாம்
கனிதமிழின் நடையழகும் சொல்வளமும்
பொருட்பொலிவுங் கண்டு போற்ற
இனிதருளும் வள்ளுவனை யீன்றதாய்க்
கிவ்வுலகும் விசும்பு மீடோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கள்ளமறு மன்புமலர்ந் தருள்கனிந்து
மாசிலதாய்க் கவின்கொள் தூய
உள்ளமுடை யோனாத லறமெனவே
யுரைத்திருமை யறமு ணர்த்தி
அள்ளமுத சுரபிநிக ரறிவூற்றாந்
தமிழ்மறையை யளித்த தெய்வ
வள்ளுவனை நல்லுலக மணிவிளக்கை
மனத்தேற்றி மகிழ்ந்து வாழ்வாம்.

3. சாதிகுலம் பிறப்புநெறி சாராத
பண்புநிலை சார்ந்து நின்று
பேதியலும் மதவாதப் பிணக்ககன்று
சமநோக்கம் பேணி நன்று
நீதிமுறை தெரித்தோதி யொழுக்கநெறிக்
குயர்வளித்து நிலவும் ஞான
சோதிநிகர் திருக்குறளை முப்போது
மோதிமனந் தூய்மை செய்வோம்.

4. சீரியலு மரசியலு மமைச்சியலுங்
கலையியலுந் தெளியத் தேற்றிப்
போரியலும் பொருளியலுங் குடியியலு
மொழுக்கியலும் பொருந்தக் காட்டி
ஊரியலும் நாட்டியலும் உழவியலும்
இன்பநெறி இயலு மோதிப்
பாரியலும் பயன்பழுத்த திருக்குறளிப்
பார்முழுதும் பயின்று வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராசக்தி மகாகாவியம் – சாற்றுகவி

1. வானமுயர் முகடாக மாநிலமே தளமாக
மண்மேல் வாழும்
ஊனுலவு சாதிவகுப் புயர்தூணாத் திடபுத்தி
சுவரா யுள்ளம்
தானிலவு தூய்மைசுதை யாச்சமைத்த தமிழ்க்கோயிற்
கவிப்பீடத்தின்
மேனிலையிற் பாரதசத் தியைஇருத்தி உலகமெலாம்
விளங்கச் செய்தான்.

2. உள்ளமெனும் கூடத்தே உணர்ச்சியெனும்
குண்டமதில் உண்மை அன்பாம்
அள்ளுநறு நெய்பெய்து தவவிரத
அனல்மூட்டி ஆசை யென்னும்
துள்ளுமறி பலிசெய்து தூய்மைபெறு
தியாகமெனும் வேள்வி வேட்டுத்
தெள்ளுமனச் சாந்தியெனும் திருவமுதின்
சுவைகண்ட தெய்வ யோகி.

3. தமிழ்மொழியைத் தமிழ்க்கவியால் தமிழுரையால்
புதுமைசெய்தான் தமிழர் போற்றத்
தமிழ்மொழியைத் தமிழ்க்கவியைப் பிறமொழியால்
உயர்த்திவைத்தான் தரணி போற்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியால் பிறமொழியால் இந்துமத
தருமமெலாம் தழைக்கச் செய்தான்.
தமிழ்மொழியால் உண்மையொளி கண்டதனைப்
பொதுச் சொத்தாய்த் தரணிக் கீந்தான்.

4. பிறந்ததுவும் தமிழ்க்காயின் வளர்ந்ததுவும்
தமிழ்க்காயின் பெரியோ னென்னச்
சிறந்ததுவும் தமிழ்க்காயின் தேர்ந்துலக
மொழிகள்பல தெளிந்தே ஞானம்
நிறைந்ததுவும் தமிழ்க்காயின் வாழ்வதுவும்
தமிழ்க்காயின் நிலத்தில் இன்பம்
துறந்ததுவும் தமிழ்க்காயின் தமிழ்த்துறவி
யெனஇவனைச் சொல்ல லாமோ.

5. காலமெனும் கற்பகத்தில் நூறாண்டுக்
கொருகாற்சீர் கனிந்து தோன்றிச்
சீலமெனும் தேன்சொரிந்து மறுமலர்ச்சி
செய்கனியிவ் வுலக மக்கள்
ஞாலமெனும் வீட்டகத்தே கூட்டுண்ணக்
கனிந்தகனி நலஞ்சேர் யோகக்
கோலமுட னெளிவருசுத் தானந்தக்
கனிவாழ்க அருள் குழைந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன் வாழ்த்து

1. வாழும் நாட்டி லொருவகுப் பின்னொரு
வகுப்பி னுக்கடி மைத்தொழில் செய்வதோ
ஆழு மாற்றிற் கரைத்த புளிநிக
ராகி வீரத் தமிழ்க்குலம் மாய்வதோ
தாழு மாற்றில் விழுந்திடல் தக்கதோ
தமிழா நின்னெதிர் காலத்தை நோக்கியே
சூழு மாற்றல் படைத்தெழு வாயென்றே
தூண்டி நிற்கும் சுதந்திரன் வாழ்கவே.

2. ஆவினைப் பயன் கொண்டுபின் ஊன்விலை
யாளர்க் கீந்திடல் போலு மறிவுசேர்
நாவினைப் பயன் கொண்டோர் புலவனை
நன்கு பேணல்செய் யாக்குறை போலும்வாழ்
பூவினைப் பொன் கொழிக்குநா டாக்கினும்
பொது மக்கள்தம் வாழ்வை உயர்த்திடாத்
தீவினைப் பிணி தீர்த்திடத் தோன்றுசஞ்
சீவியான சுதந்திரன் வாழ்கவே.

3. பாட்டிலே பொய்க் கதைகள்பா ராட்டுதல்
பழைய மூடப் பழக்கங்கள் போற்றுதல்
வீட்டிலே சாதி பேதம் விரும்புதல்
வெளியு ளோர்க்குச் சமபுத்தி போதித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டிலே பிறர் தம்பொரு ளீட்டுதல்
ஏழை மக்களின் நண்பர்கள்யாமெனல்
நாட்டிலே யிக் கொடுமைகள் நீங்கிட
நன்கு தோன்றும் சுதந்திரன் வாழ்கவே.

4. நன்மை சேர்ந்திடும் கட்சி முறையிலே
நாசம் செய்யும் வகுப்பு மதவெறி
வன்மை சேர்ந்த வகுப்பையே வன்மைசேர்
வகுப்பு நண்பெனக் கொண்டு தழுவுமால்
தொன்மை வாய்ந்த தமிழ்க்குலம் இங்கொன்றாய்த்
தொடர்புறா தொழிந்தா லெதிர் காலத்தே
இன்மை யாகும் உரிமைகள் யாவுமென்
றிடித்துக் கூறும் சுதந்திரன் வாழ்கவே.

5. பிறந்த தன்குலம் பேணல் பிழையன்று
பிறர்க் கெதிர்ப்பிர சாரமு மன்றுகாண்
சிறந்த நற்கலைப் பண்பு முரிமையும்
செல்வமும் தமிழ் வாழ்வும் படைத்தயாம்
திறந்த நெஞ்சொடும் ஈன்றதாய் நாட்டிலே
தேனும் பாலு மெனக்கலந் தொன்றியே
அறந்தரும் திரு வாழ்வு புகச்செய்யும்
அன்பின் தோன்றல் சுதந்திரன் வாழ்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியரங்கின் தலைமையுரை

1. அரசிய லரங்கில் சமயநல் லரங்கில்
அழகிய தமிழ்க்கலை அரங்கில்
விரிசுடர் மணிகள் பலர்பிறந் தொளிர
விளங்கு பட்டிருப்பெனும் தொகுதி
உருவுகொண் டிலங்கும் உயர்கலா சாரப்
பேரவை விழாப்பயன் கொள்ள
வருகைதந் திங்கு வீற்றிடும் ரசிக
மணிகளுக் கென்னன்பு வணக்கம்

2. கழுத்துவாங் கலுடன் கவியரங் கிதனில்
இழுத்துவந் தேற்றினார் என்னை
வெளுத்துவாங் குவரிக் கவிஞர்கள் இளைஞர்
வேகமு முள்ளவர் யானோ
பழுத்திடு வழுக்கைத் தலையெழு பதும்போய்ப்
படித்ததும் மறப்பவன் வீறு
கொளுத்துமிக் கவிஞர் நடையுடன் கூடி
நடக்குமோ என்னடை என்றால்.

3. அன்பினால் என்மேல் உபஅர சாங்க
அதிபராம் தில்லைநா தப்பேர்
நண்பரும் குழுவும் இச்சுமை யேற்றி
அரங்கிதை நடத்தென நவின்றார்
என்னடை யிந்தக் கவிஞர்கள் நடையோ
டிணங்கிடா தெனஐயம் கொண்டே
அன்னவர் தம்மைக் குறைசொலேல் எனையும்
குறைசொலேல் காரணம் அறைவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சேர்ந்திடில் மனிதர்க் கறுபது வயது
செயல்புரி யார்பலர் துள்ளிப்
பாய்ந்திடும் கவிகள் எழுபதின் மேலும்
பயப்படேல் வயதினைப் பற்றி
வாய்ந்திடும் பாட்டால் நாட்டினுக் குழைக்கும்
வழிவகை காட்டிட இங்கே
சார்ந்திடுங் கவிக ளெனதுசந் ததிகாண்
தாவிநான் இவருடன் பாய்வேன்.

5. பாய்ந்துசெல் புதுநீர் மாவலி பட்டிப்
பளையுடன் மாணிக்க கங்கை
ஓய்ந்திடா தோடும் களனிஜின் கங்கை
வளவையும் குமுக்கனும் முதலாத்
தோய்ந்திடும் நதிகள் கவிஞர்பாட் டெனவே
நாட்டிலே தூரங்கள் கடந்து
காய்ந்திடு பாலை நிலம்புலம் செழிக்க
இராப்பகல் உழைப்பது காண்பீர்.

6. நன்னலம் வாய்ந்த ஐம்பது லட்சம்
இளைஞர்கள் ளியர்நமக் குள்ளார்
இன்னெழில் இயற்கை வளமுள நாட்டில்
இவற்றினைப் பயன்செய்து நாளும்
தன்னல மற்ற சேவையால் நாட்டைத்
தன்னிறை வுறச்செய்யும் மார்க்கம்
தன்னையிக் கவிஞர் பாட்டினிற் கேட்போம்
சபையினர்க் கென்னன்பு வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர்ச் சைவ மகாசபை

1. சீர்வளரும் காரைநகர்ச் செம்மனத்தார் கூடியன்பு
வாழ்வுவளர் சைவ மகாசபைத்தான் - பூவில்
மணிவிழாக் கொண்டாடும் மங்களநன் னாள்நற்
பணியினால் வாழ்கபல் லாண்டு.

2. கல்விசெல்வம் தெய்வக் கருணைவளர் காரைநகர்ச்
சைவ மகாசபையித் தாரணியில் - மெய்ம்மை
மதாபிமா னம்வளர வாழ்கநீ டூழி
சதாபிஷே கங்கண்டு தான்.

3. விஞ்ஞானத் தாயின் வியன்மடியில் வீற்றிருந்து
மெய்ஞ்ஞானச் சைவம் மிகவளர்க - மெய்ஞ்ஞானம்
போகஇளஞ் சந்ததியின் புந்தியொளி சேர்கநன்கு
வாழ்கசைவ மாசபையின் மாண்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர்

## உத்தமர் திலகம் காந்தியடிகள்

(மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு வந்தபோது திருக்கோணமலை மக்கள் சார்பில் அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் வைத்துப் பாடிக் கொடுத்த வாழ்த்துகள்).

1. சாந்தம் பொலிமுகமும் தண்ணளிசேர் கண்ணிணையும்
வாய்ந்தகத ராடை வடிவழகும் - சேர்ந்துமகான்
காந்தியென ஓர்வடிவம் கண்முன்னர் நின்றதால்
சாந்தி எமக்கின்று தான்.

2. சகதர்ம மெல்லாம் தனிவளர்க்கு மன்பாம்
தகவுடைய கஸ்தூரித் தாயை - அகமகிழக்
கண்ணிற் தரிசித்தோம் காய மெடுத்திந்த
மண்ணிற் பிறந்தபயன் வாய்த்து.

3. அன்புக் கரசே அறத்தின் பெருவாழ்வே
இன்ப வழியே எழிற்குருவே - மன்பதைக்கோர்
செல்வப் பெருக்கே திருப்பா ரதமணியே
நல்வரவு கூறுகின்றோம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தீண்டாமை நோயதனைத் தீர்க்குஞ்சஞ் சீவிபகை
வேண்டாமே சாத்விகப்போர் வேண்டினோன் - தூண்டாச்
சுடர்விளக்கம் போல்நின்று தோன்றினான் மண்மேல்
இடர்விளக்க மில்லை இனி.

5. அடிமை யகற்று மருமிடியைத் தீர்க்கும்
படிமிசைநற் பாக்கியம் பாலிக்கும் - உடைமையெலாம்
நம்மதே யாக்கும் நலஞ்சேர் கதராடை
செம்மையாய் வாழ்க சிறந்து.

6. சத்தியத்தின் வாழ்வு தருமத்தின் வைப்புலகில்
உத்தமர்க ளுள்ளே ஒருதிலகம் - பத்திவளர்
சாந்திநிலை சாத்துவிக சக்திக் குதாரணமாக்
காந்திமகான் தன்னையே காண்.

## நேருவினைச் செப்புவீர்

நெஞ்சத் துணிவுமன நேர்மை சுறுசுறுப்பு
பஞ்சைமக்கள் மீது பரிதாபம் - கொஞ்சமுமோர்
அப்பழுக்கில் லாத அயல்நாட்டுக் கொள்கைக்கே
செப்புவீர் நேருவினைத் தேர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ராலினை மறவேம்

ஆதிக்கச் சொத்தை அனைவர்க்குஞ் சேர்த்துலகைப்
பாதித்த மன்னர் பறக்கவே - சேதித்து
வாழ்வை மலரச்செய் மாண்புசேர் ஸ்ராலினையாம்
ஏழ்பிறவி யும்மறவோம் இங்கு.

## சேர். பொன் இராமநாதனைக் கவர்ந்த பாடல்

கல்வி யுடையார் கனதனம் பெற்றாரில்லை
செல்வமுடை யார்கல்வி சேர்ந்திலரால் - எல்லாம்
எவன்பா லொருங்கே இருந்தனசொல் நெஞ்சே!
அவன்ராம நாததுரை யாம்.

## சேர். பொன் இராமநாதன் அரசியற் பொன்விழாச் செய்யுள்

தாடி தலைப்பாகை சார்ந்தமுக மண்டலந்தேன்
கூடிதெனத் தோன்றும் குறிப்பிற்றே - நீடவையில்
சீராம நாதன்சொல் தேன்சுவையிற் குத்துண்கை
தேரார்நே ராரும் தெளிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி வரவேற்புப் பா

இலங்கைப் பெருமகனே வருக - எங்கள்
ஏந்தல் துரைச்சுவாமி வருக.
களங்கமில்லா மனத்தோய் வருக - தமிழ்க்
கல்வி தழைத்திடவே வருக.
நல்லவர்க ளெல்லாரும் வருக - நமது
நாடு செழித்திடவே வருக.
செல்வர்களும் ஏழைகளும் வருக - கலைச்
செல்வமிங்கு சேர்த்திடுவோம் வருக.

## காலஞ்சென்ற ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்களை நெல்லோடு ஒப்பிட்டுப் பாடியது

(சிலேடை வெண்பா)

புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி
நிலத்ததிகா ரஞ்செய்து நின்று - பலத்தினிறை
நல்ல களம்பொலிந்து நாடு புரத்தலால்
நெல்லும் அசீஸ்துரைக்கு நேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைகண்ட பஞ்சசீலன்

1. துன்பமெனும் வெள்ளத்தே ஆசையெனும்
சுழிப்பட்டுத் துறைகா ணாது
மன்பதை பதைத்தல்கண்டு மனமிரங்கி
யதுதவிர்க்கும் மார்க்கம் தேடி
இன்பசுகம் அதிகாரம் எலாந்துறந்தே
ஏகாந்தம் இனிது மேவி
அன்புநெறி நின்றதனால் அருள்வாழ்வின்
நிலைகண்டு அமர னானோன்.

2. சிந்தைபொறிக் கடிமைசெய்து சிதறியலைந்
தறிவுநிலை சிந்தி மாந்தர்
ஐந்துபெருங் குறும்புடையோ ராகாமல்
ஆசார சீல ராகிப்
புந்திதெளிந் தன்புநெறி நிலைநின்று
புனிதமடைந் தொன்று பட்டுச்
சந்ததமும் சமாதான வாழ்வினிலே
வாழவழி கண்ட சாந்தன்.

3. மண்ணுலகிற் பிணிமூப்புச் சாக்காடு
வருவதன்முன் மக்கள் வாழ்வில்
தண்ணளிசேர்ந் துயிர்க்கொலையும் தீமைகளும்
தவிர்ந்துமனச் சாந்தி கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுபவ வினைத்துயரம் பற்றாமல்
அருள்நெறியே பாலித் தாண்டு
புண்ணியமே வடிவான புதுவாழ்விற்
புகுந்தமகான் புத்தர் கோமான்.

4. சாந்திநிலை கண்டுணர்ந்த தயாநிதிமெய்த்
தருமத்தின் வடிவம் செங்கோல்
ஏந்திநில மாள்வதினு மேகாந்தம்
மேவியிருந் தின்பம் கண்டே
மாந்தர்தமக் குய்யவழி வகுத்தருள
மனங்கொண்ட வள்ளல் போதி
வேந்தனருட் சயந்திவிழாப் பயன்கொண்டே
மெய்ந்நெறியில் மேவி வாழ்வாம்.

## அகிம்சைநெறி கடைப்பிடித்த இராமச்சந்திரன்

1. ஈழமணித் திருநாட்டில் இருபதாம்
நூற்றாண்டில் இந்து மார்க்கம்
வாழவழி வகுத்தமைத்த மகான்கள்வரி
சையிலுரிய இடம் வகித்தோன்
ஆழநெடுங் கடல்கடந்தே அனைத்துலக
நாடுகளும் அன்பின் ஒன்றாய்ச்
சூழவொரு குலமெனவே சமரசஞா
னம்தழைக்கத் தொண்டு பூண்டோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அன்புருவப் பெருந்தகைசீ ரருள்மலர்ந்து
 தியானத்தில் அமர்ந்து நாளும்
தன்புருவ மத்தியிலே தன்னாலே
 தனைக்கண்ட தீர சாந்தன்
என்புருக உட்காதல் இனிதுகனிந்
 தில்லாளைத் தாயாய்க் கண்டோன்
இன்பசத்தி மயமானோன் இல்லறத்தில்
 ஞானியென இங்கு வாழ்ந்தோன்.

3. பத்திவளர் பரமகம்ச குருதேவர்
 ஒருமைகண்ட பதியும் போதிப்
புத்தர்பிரான் நிருவாணம் புகுபதியும்
 இயேசுபிரான் புவிக்காய்த் தம்மைத்
தத்தம்செய் திருப்பதியும் நபிகள்நா
 யகம்சாந்தி தழைக்க வாழ்ந்த
அத்தலமும் தரிசித்தே அனுபவத்தி
 லொருமைகண்ட அருளின் செல்வன்.

4. தன்னுள்ளே தனைக் கண்டோன்
 தன்னுயிரில் மண்ணுயிர்கள் தமையும்கண்டோன்
தன்னுயிரை மன்னுயிரிற் கண்டான்ம
 தத்துவத்தின் ஒருமை கண்டோன்
தன்னாலே தனைவருத்தாத் தன்மைகண்டோன்
 காந்திமகான் தரிச னத்தால்
தன்னாயுள் வரையகிம்சா தருமநெறி
 கடைப்பிடித்த ராமச் சந்த்ரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தன்னுடலம் வீழவெளி யேறியுயிர்
தாரகமாம் சிதாகா சத்துள்
அன்னியமி லாதுகலந் திடுநன்னாள்
அண்மையினி லுளதா மென்றே
என்னூற்குத் தான்வகுத்த முன்னுரையில்
எழுதியதோ டெனைப்பா ராட்டத்
தன்னுரிமை மக்களவர் மக்களுள
ரெனவுமன்பாற் சாற்றும் பண்போன்.

6. சைவத்திற் காலூன்றிச் சமயநெறி
தலைப்பட்ட ராமச் சந்த்ரன்
மெய்வைத்த வேதாந்த விசாரத்தால்
சமரசஞா னம்மேற் பட்டே
கைவைத்த நெல்லியெனக் கண்டோன்மெய்ப்
பொருள்ககனத் தமர ருள்ளும்
வையத்து மனிதருள்ளும் இவன்போலோர்
மகனையெம்மாற் காண வற்றோ.

7. சத்துவ குணக்கடலில் தான்திளைத்து
விளையாடிச் சமநோக் கத்தால்
வித்தகமெய்ஞ் ஞானவொளி விளக்கேற்றி
உள்ளத்தே மெய்ம்மை கண்டோன்
சுத்தசம ரசஞானி குணங்கடந்தோன்
துவைதநிலை தன்னில் நின்றே
அத்துவித நிலைகலந்தான் ஆத்துமஜோ
திக்கொளிசெய் தமர்ந்த ஆசான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நாவலத்தாற் புனிதசனா தனதரும
   நடையினிது நவின்று காட்டிப்
பூவலய மெங்குமொளி வீறுநடை
   போட்டங்கும் புனிதன் தேவ
பாவலனிவ் விஞ்ஞான யுகத்தினிலே
   பரனனுப்பும் தூதாய் ஞான
காவலனாய் வருராமச் சந்திரன்தன்
   கடமையொழிந் தொடுக்கம் கண்டான்.

9. உடற்பற்று நீத்திங்கே உயிர்வாழ்ந்த
   ரமணமகா னருளி னூற்றாம்
கடற்கண்ணே மூழ்கிமகான் கருணைத்தேன்
   பொழிபாத கமலம் உள்ளத்
தடத்தின்கண் மலர்ந்திடத்தன் வாழ்நாளிற்
   சாந்திகண்ட ராமச் சந்த்ரன்
கடத்தலரி தாமுலக சஞ்சாரக்
   கடல்கடந்து கரைசேர்ந் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வணக்கம்

## கடவுள் வணக்கம்

எழுத்தாய் மொழியாய் இயைபொருளாய் அன்பிற்
பழுத்தா னருளைப் பராவ - விழுத்தமிழின்
தூயமுதற் பாவினாற் சொல்பகவத் கீதைமொழி
வாயமுத வூற்றாய் வரும்.

## என் இரு கண்கள்

### விநாயகப் பெருமான்

செந்நாப் புலமைவந்து சேர்வதுமாம் நற்கவிதை
தன்னாற் சிவன்சரணஞ் சார்வதுமாம் - பொன்னாடு
வாழவசு ரேசனமர் மாளவடு மாகருணை
ஆழமத வேழநினைத் தால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகப் பெருமான்

அருளா தொழியினெனக் கார்துணைநீ சொல்வாய்
குருவா யமர்ந்ததிருக் கோவே - பொருளாக
நந்தியைமு னாண்டுகதி நல்குபர னானசிவன்
தந்தமுரு காகிருபை தந்து

(இவை 1917இல் பாடப்பட்டவை)

## கந்தசட்டியின் உட்பொருள்

பாரதனிற் கல்வி செல்வம் பதவியின்ப
பாக்கியங்கள் படைத்துமுன தருள் மறந்த
தாரகனைச் சிங்கனையா யிரத்தெட் டண்டம்
தனியாண்ட சூரபன்மன் தனைய கந்தை
மாரகஞ்செய் தார்க்கருளும் வண்மை கண்டுன்
மலரடிகள் வந்தடைந்தேன் சிறியே னென்றன்
பேரகந்தை திருமுன்வைத் துருகி நிற்கும்
பேறருளெம் சிற்றாண்டிப் பெரிய வாழ்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர்ப் பதிகத்தின் முதற் செய்யுள்

மலர்க் கிரண மெறிகோடி சூரியர் மழுங்கவொளி
வளர்திரு முகங்க ளாறும்
மன மாரப் பாலுண்ட கனிவாயி னோடிந்த
மகிதலம் மருட்டு நகையும்
மலர்க் கடம் பாரமோ ராடவட முந்திகழும்
மாமேரு வொத்த மார்பும்
மலை தோறு மாடல்புரி மலர்போ லிலங்கிவரு
மாண்புற்ற பாத யுகமும்
கல னெனும் பாடகம் போலெழு மையுந்தொடர்
கன்மபா பங்கொல் வேலும்
கல னென ஒளிர்துவச மதிலே விளங்கிடு
காற்படைச் சேவ லுடனே
வல மருவு நீலமயில் மீதேறி ஏழையென்
மனக்குறைகள் தீர்க்க வருவாய்
மதி யேறு பணியேறு நதியேறு வேணியன்
மைந்த மண் டூர்க்கந்தனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

(புலவர்மணி அமரராவதற்கு 22 நாள்களுக்கு முன்னர் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய வாணி விழாவுக்கு (10.10.1978) சமூகமீந்த போழ்து உணர்ச்சிப் பெருக்கால் உருவாக்கிய சக்தி வடிவம். இதுவே அவரது இறுதிப் பாட்டாகவும் இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.)

1. அரங்கமென அணுவினுள் வீற்றிருப்பா ளன்னை
அணுச்சக்தி யாயுலகின் ஆக்க மாவாள்
தரங்கமுறு சலத்தினிலே தீயாத் தோன்றிச்
சகத்தை யொளிமயஞ் செய்வாள் உயிர்களேங்கி
இரங்கிடவே சலவாயுக் குண்டி லேறி
எரித்திடுவாள் பரமாணு ரூப மாவாள்
பரங்கருணைத் தேவிசத்தி அருட்க டைக்கண்
பார்வையிலே முகிழ்ப்பதின்ப துன்ப மெல்லாம்.

2. வானொலியில் அலையாகி உரைவி ரிப்பாள்
மணிக்குரல்வீ ணையிற்பொழிவாள் மதுர கானம்
தேனமுதக் கவியூற்றாய்ப் புலவர் நாவில்
தித்திப்பாள் வானொலியிற் பங்கு கொள்வோர்
ஊனுடலைத் தொலைக்காட்சி யதனிற் காட்டி
ஒருபுதுமை செய்திடுவாள் உலக மாதா
வானமுதற் பூதத்துட் கலந்தி யக்கி
வையமெலாம் படைத்தருள்வாள் அவளெம் வாழ்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தாதி தாரணியே காப்பாள்

அந்தாதி யில்லாத அன்னைக் கிங்கே
அந்தாதி பாடிவந்த கவிகாள் நீவிர்
அந்தாதி யில்லாதீர் உமது பாட்டும்
அந்தாதி யில்லாத தென்னின் நீவிர்
அந்தாதி பாடிவந்த தார ணிக்கே
அடுக்குமோ ஆமடுக்கு மவளே நாளும்
அந்தாதி செய்திடுவா ளுலக மெல்லாம்
அவள்நீர்செய் அந்தாதி யருளிக் காப்பாள்.

## குருபூசை வாழ்த்து

(மெய்கண்டார் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் குருபூசை வாழ்த்து. இச்சபையிலேதான் மதுரகவிப் பட்டம் புலவர்மணிக்கு ஈந்தது).

1. பாலாறு செய்யாறு பெண்ணை யாறு
பரந்துவரும் ஆரணியா றடையா றோட
நூலாறு சொல்வழியே அன்ப ராறு
நுகர்ந்தாடச் சிவபோகப் பேரா றோடக்
காலாறி அறக்கடவுள் அமர்ந்த தெய்வக்
காஞ்சிவளர் மெய்கண்டார் திருப்பீ டத்தில்
நாலாறு காட்டியதன் நடுவே தோன்றும்
ஞானப்ர காசகுரு திருத்தாள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வெண்ணெய்வரு மெய்ஞ்ஞானக் கதிரின் முன்னே
விகசிதமாய் நெகிழ்ந்துதெய்வ மணம் கமழ்ந்து
மண்ணவர்தம் உயிர்ப்பினிலே கலந்து சைவ
வாழ்வைநிதம் புதுமைசெய்து மதுர வாக்காம்
தண்ணளிச்செந் தேன்சொரிந்து காஞ்சி ஞானப்
பிரகாசர் முகதருண கமலம் பூப்பக்
கண்ணிணைகள் குளிர்ந்தன்பர் கண்டார் அந்தக்
காட்சியினைச் சிறியேனும் காணப் பெற்றேன்.

3. மெய்கண்ட சாத்திரங்கள் வியன்கோ டாக
மேன்மைபெறு சைவமெனும் திருக் குளத்துள்
கைகண்ட திருமுறையாம் அமுத வெள்ளம்
கருணையெனும் கால்வாயின் வழியே பாய்ச்சிப்
பொய்கண்ட விஞ்ஞானத் தீயால் வெந்த
புலஞ்செழிக்க ஒருபுதுமை செய்வா யென்றே
மைகண்டர் திருத்தூதாய் வந்த ஞானப்
பிரகாச வள்ளலடி மலர்கள் வாழ்க.

4. சான்றோர்கள் வாழ்தொண்டை நாட்டிற் சைவத்
தமிழ்க்காஞ்சி மெய்கண்டார் ஆதீ னத்தில்
தேன்தோய்ந்த மாவடியில் திருக்கா மாட்சி
தேவிதிரு வேகம்பர் அருள்போல் ஓங்கி
வான்தோய்ந்த புகழ்பரப்பும் ஞான பீடம்
வறிதாக நடந்தீழ நாட்டில் வந்தெம்
ஊன்தோய்ந்த உணர்வுருக்கும் கமல பாதம்
உளத்தடத்தில் மலர்ந்தெங்கள் உயிர்போல் வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. செங்கதிரின் இயக்கத்தில் தங்கி நின்று
சேர்ந்தியங்கும் கோள்களெனத் தலைவர் தம்மில்
தங்கிநிற்ப தாதீனம் என்னும் சொற்குத்
தகுதிபெறு மெய்ஞ்ஞானத் தலைவர் ஆதி
சங்கரர்காண் வேதாந்தத் தருவின் உச்சி
தனிற்கனிந்த சித்தாந்த சாரம் கண்ட
எங்குரவர் அருள்ஞானப் பிரகா சப்பேர்
ஏந்தல்திரு வடிப்பூசை இனிது வாழ்க.

## மாவைக் கோயில் கதவடைப்பு

1. கோயிலைக் கண்டு கும்பிடப் போனோம்
குருக்களும் முகாமையும் குறுகி
வாயிலைப் பூட்டி வேலியும் போட்டு
வளைந்துனைக் காவலில் வைத்தார்
காய்கறித் தோட்ட மோமுரு காநீ
கால்நடை யோசிறி யேங்கள்
வாயிலை முகாமை மனத்தினைத் திறந்தெம்
மனக்குறை தீர்த்தருள் பரனே.

2. நந்தியி னிடத்தைச் சுந்தரர் பிடித்து
நடுநின்று மறைத்தெமைத் தடுத்தார்
எந்தையே உனது தரிசன மின்றி
இராப்பகல் இரங்கிநிற் கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர மூலத் தானம்நின் பிரிவால்
வறிதுபா ழாகிட வெளியே
வந்தெமக் கருளி மாவைவேல் முருகா
வழிவழி எமைப்புரந் தருளே.

## கண்ணன் அருள்வெள்ளத்தில் வாழ்வோம்

1. புண்ணியமாந் தெய்வநலம் பொன்றிடவே
பொங்கியெழுந் துலகை நாசம்
பண்ணியதீ யசுரனென்னும் நரகனுயிர்
பறித்தான்ம வெற்றி கண்டே
மண்ணுலகி லிருள்நீங்கி வாழ்வினிலே
இன்பஒளி வயங்கச் செய்த
கண்ணனருள் வெள்ளத்திற் களித்தாடி
மனவமைதி கண்டு வாழ்வோம்.

2. தீதகன்று நன்மையெலாஞ் செழித்திடுக
வென்றேயித் திருநாள் தன்னில்
சூதுடனே வாதுகொடுஞ் சூழ்ச்சியிருள்
தொலைந்திடுக மக்கள் வாழ்வில்
மாதுயரம் வாராது காத்திடவே
மனவுறுதி கொள்க மாறாய்
ஏதுதடை வரினுமவை யெதிர்த்துவெல்வே
மெனச்சபத மின்றே செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை உன் அடிமலர் இருத்தி

விண்மிசை யெழுந்து பறந்திடும் விமானம்
வேகமா யுயர்ந்து சென்றாலும்
மண்மிசை மையக் கவர்ச்சியீர்த் திடலால்
வந்துமீண் டமர்ந்திடும் வகைபோல்
எண்ணுமென் மனமாம் விமானமீ தெளியேன்
எங்கெலாம் பறந்துசென் றாலும்
அண்ணல்நின் சக்தி யாலெனை ஈர்த்துன்
அடிமலர் இருத்தியாண் டருளே.

## சிவத்தை உரிமைசெய்ய மனத்துநார் வேண்டும்

1. காலையில் உதய சூரியன் தனது
கரங்களா யிரம்விரித் தினிய
சோலையைக் கமலப் பொய்கையைத் தீண்டத்
தோடவிழ் மலர்பறித் தெளியேன்
மாலைசெய் தெந்தாய் நின்மணி மார்பம்
வனைந்தனு தினம்சிரம் பணிந்தும்
மாலையோ டியைந்த நார்பெறும் பயனும்
பெற்றிலேன் மனத்துநா ரில்லேன்.

மனத்துநார் - நார் : அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மனத்தினில் முளைத்தே வளர்ந்தழ காக
மலர்ந்தவென் கவிதையங் காட்டில்
திணைத்துணை யெனினும் தேனிலை சிறிதும்
செம்மைசேர் மனமிலை யங்கே
இனத்துடன் வண்டு சூழ்ந்திசை பாடி
இராப்பகல் கழிப்பன வீணே
அனைத்துமாய் நின்றாய் இம்மலர் கொண்டுன்
அடிமலர் எங்ஙனம் அடைவேன்.

3. மனக்கதவு திறந்தடியேன் வாவென் றுன்னை
வரவழைத்தே இனிதிருத்தி வணங்கி யென்னை
உனக்குரிமை செயவறியேன் வாய்வே தாந்தம்
உரைத்துரைத்தே அலங்கார உரையால் இங்கு
தினத்தை யெலாம் வீண்கழிப்பேன் அன்பிலாதேன்
திருவருளுக் கயலானேன் சிவமே யுன்னை
எனக்குரிமை செய்யவொரு வழிகாட் டாயேல்
எவ்வண்ணம் யான்பிழைப்பேன் எங்கள் வாழ்வே.

## காளிக மடு கற்பக விநாயகர் ஊஞ்சல்

1. உத்தமமாம் பத்தி விசுவாசம் காலாகச்
சித்தமெனும் விட்டம் சேர்த்தி அனுதினமும்
புத்தி கயிறாயுன் மெய்யடியார் நன்கமைக்கும்
சுத்தமன மாம்பலகை மீது மகிழ்ந்தேறிச்
சித்திபுத்தி தந்தருளும் தேவே உலகுக்கோர்
கர்த்தனே சீர்காளி காமடுவிற் கற்பகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகஞ்சேர் வல்லபையோ டாடுகபொன் னூஞ்சல்
விக்கினங்கள் தீர்த்தருளி ஆடுகபொன் னூஞ்சல்.

2. தந்தையார் கோயில் தருமகர்த்தா வானமுதல்
மைந்தனே மூஷிகத்தை வாகனமாக் கொண்டெமது
சிந்தைவளர் தீயபுத்தி யெல்லாம் சிதைந்தொழிய
வந்தாயெம் வாழ்வில் வருமிடர்கள் தீர்ப்போனே
எந்தாயே சாதிமத மெல்லாம் கடந்துநின்ற
தந்தாய் திருக்காளி காமடுவிற் சார்கதியே
கொந்தார் குளிர்நிழற்கீழ் ஆடுகபொன் னூஞ்சல்
குறைநீக்கி யாண்டெம்மை யாடுகபொன் னூஞ்சல்.

3. மூவுலகும் தோன்றுதற்கு முன்னாகு மோரெழுத்தே
பூவுலக வின்பப் பொருளருளும் பொன்னெழுத்தே
தேவுலகுக் கப்பாற் சிறப்பருளும் ஐந்தெழுத்தே
சீவசிவ ஐக்கியமாய்ச் சேர்ந்தோர்சொல் மூவெழுத்தே
பாவலர்தம் நாவிலின்பப் பாட்டருளும் பண்ணவனே
காவலர்தண் மலர்க்காளி காமடுவிற் கண்ணுதலே
பூவலருந் தாரசைய ஆடுகபொன் னூஞ்சல்
பொலிகருணைத் தேன்சொரிந்தே
ஆடுகபொன் னூஞ்சல்.

4. இனத்துடனே மந்திகளும் ஏறியிருந் தின்பமுடன்
தினப்பூசை கண்டுதிருப் பிரசாதம் உண்டுலவும்
வனப்பமையும் ஆல்வேம்பு மாவரசு மகிள்மருதம்
மனக்கினிய நிழல்செய்ய மந்தமா ருதம்வீசப்
புனற்கினிய நீரோடை புறஞ்சூழச் செந்தமிழின்
இனிப்பொலிசேர் எழிற்காளி காமடுவில் எம்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைப்பொழுதும் நீங்காமே ஆடுகபொன் னூஞ்சல்
செல்வமெலாம் எமக்கருளி ஆடுகபொன் னூஞ்சல்.

5. உருப்பொலிந்த தம்பிகரம் ஒருசூலம் தான்கொடுத்தே
தெருக்கரையில் நின்றெவர்க்கும் செய்கருணை யெனநிறுத்தித்
தருக்ககன்ற மனத்துடனே தாழ்ந்துநிற்பார்க் கவர்வேண்டும்
பொருட்பேறும் கலைப்பேறும் புண்ணியஞ்செய் பெரும்பேறும்
அருட்பேறு முவந்தளிக்கும் அறிவுருவே வளர்செந்நெல்
திருப்பொலிசூழ் வயற்காளி காமடுவில் எழுந்தருளும்
மருப்பேந்து மலர்க்கரத்தாய் ஆடுகபொன் னூஞ்சல்
மன்னவர்செங் கோல்புரந்தே ஆடுகபொன் னூஞ்சல்.

6. தேடுகல்வி ஞானம் திடசித்தம் தேகசுகம்
பீடுபெறு நல்லோர் பெருநட்பும் செல்வாக்கு
நாடி யுனதடிக்கே பக்திசெயும் நன்மனமும்
கூடியுன்னோ டொன்றாகும் கூட்டுறவும் தந்தருளி
வாடி யலையாத மனநிறைவும் ஈந்தருளி
நீடூழி வாழ்காளி காமடுவில் நித்தியனே
நாடு வளம்பெறவே ஆடுகபொன் னூஞ்சல்
நன்மா தவர்க்கருளி ஆடுகபொன் னூஞ்சல்.

7. அன்பும் பணியும் அடக்க முடனருளி
மண்புவியில் தம்முயிர்போல் மன்னுயிரும் யாம்பேணும்
இன்ப நிலையும் எமக்கருளி எம்பெருமான்
உன்புகழெம் பாட்டில் உரைக்கும் திறனருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பும் கனியத் திருக்காட்சி யீந்தருளும்
தென்பொலிசெந் தமிழ்க்காளி காமடுவில் திருமூர்த்தி
பொன்பொலிசெம் மேனியனே ஆடுகபொன் னூஞ்சல்
புலவோர்க் கருள்புரிந்தே ஆடுகபொன் னூஞ்சல்.

8. சக்தி பலவருளி வீரமொடு கருணை
வைத்தெம் மனத்திற் சுதந்திரநல் வாழ்வருளி
நித்தம் புரந்தின்ப துன்ப நிலைகளிலே
சித்த சமாதானம் சேர்த்துச் சிவகுமரா
அத்தனையும் நின்னடிக்கே அர்ப்பணஞ்செய்புத் திதந்து
புத்தொளிசேர் நற்காளி காமடுவிற் புண்ணியனே
சித்தாந்த மெய்ப்பொருளே ஆடுகபொன் னூஞ்சல்
செய்பிழைகள் தீர்த்தெம்மை ஆடுகபொன் னூஞ்சல்.

9. சங்கத் தமிழும் சகல மொழிக்கலையும்
தங்குந் திருமுகத்து ஞானத் தனிவடிவே
எங்கும் நிறைந்தொளிரும் வேதாந்தப் பேரொளியே
எங்கள் வினைதீர்க்கும் மருந்தே மதந்தோறும்
பொங்குங் கருணை பொழியுந் திருமுகமா
தங்கமே தண்காளி காமடுவில் தற்பரனே
மங்களமெங் கும்பொலிய ஆடுகபொன் னூஞ்சல்
வையமெலாம் வாழ்வுறவே ஆடுகபொன் னூஞ்சல்.

10. கற்பக விநாயகர்க்குச் செயமங்களம் - ஸ்ரீ
காளிகா நாயகர்க்குச் சுபமங்களம்.

வற்றா அருள்மழைக்குச் செயமங்களம் - சத்தி
வல்லபை சமேதருக்குச் சுபமங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்குண சொரூபருக்குச் செயமங்களம் - நாளும்
சித்திபுத்தி சேர்பவர்க்குச் சுபமங்களம்.

வித்தைவடி வானவர்க்குச் செயமங்களம் - வரும்
விக்கினங்கள் தீர்ப்பவர்க்குச் சுபமங்களம்.

சொற்பதம் கடந்தவர்க்குச் செயமங்களம் - பரஞ்
சோதிவடி வானவர்க்குச் சுபமங்களம்.

அற்புத பரம்பொருட்குச் செயமங்களம் - நித்தி
யானந்த ரூபருக்குச் சுபமங்களம்.

குற்றம் பொறுப்பவர்க்குச் செயமங்களம் - எங்கள்
குலதெய்வ மானவர்க்குச் சுபமங்களம்.

உற்சவ கணேசருக்குச் செயமங்களம் - ஸ்ரீ
ஓங்கர ரூபருக்குச் சுபமங்களம் - (கற்பக)

## கிறிஸ்து திருவவதார கீதம்

பூலோகந் தனிற் பிறந்தாரே - பரனாரே
மேலோகத்தின் மேன்மைவிட்டு
மிகுமதிசய சுதனென இதோ - பூலோகந்

1. வரத்தையும் வேதாட் சரத்தையும் கிர்பா
கரத்தையும் சுதந்தரத்தையும் தரப்
பரத்தையும் தேவ புரத்தையுமுயர்
தரத்தையும் துறந் திரட்சகரெனப் - பூலோகந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வஞ்சமும் பிரபஞ்சமும் தீய
நெஞ்சமும் பவ நெஞ்சமும்கெடக்
கொஞ்சமு மினி அஞ்சலென்றுநற்
தஞ்சமும் பத கஞ்சமுந்தரப் - பூலோகந்

## கிறிஸ்தவசபைத் துயிலுணர்ச்சிப் பாடல்கள்

1. சாட்சியாய் நின்று கிறிஸ்துமார்க் கத்தில்
சமஸ்த சாதிகளையும் அழைத்து
மீட்சியாய் அவர்தம் அன்பினைத் தெரிக்கும்
விதத்தினை உரைக்கிலீர் வீணே
"சேட்சியா னிற்றி" எனவொரு வழியைத்
தேடினீர் ஈதுலௌ கீக
காட்சியே யன்றி மீட்சிதா னுண்டோ
கழறுவீர் திருச்சபை யோரே.

2. ஆடும் பாம்பு செயலடங்க
அடங்கா யானை மதமடங்கப்
பாடுமினிய இந்திய சங்
கீதம் பாடீர் துதிபாடீர்
ஓடும் மனத்தை ஒருநிலையில்
ஒடுக்கீர் கதியை உறுவதெங்ஙன்
வீடும் கதிக்கே செல்லாது
விரைந்து வாரும் சபையோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயம்புத்தூர் எழுச்சி மகாநாட்டுப் பாடல்

எல்லா மறிந்தநீ என்றைக்கு முள்ளநீ
இன்பமது வேயுடையநீ
எழில்ஞான வாழியைத் திறந்தூட்டும் ஆதிநீ
எமதருட் சோதிநீதான்
பொல்லாத வேதபா ரகர்கெட்ட பரிசேயர்
புரிசூழ்ச்சி யதனுட்பட்டுப்
பொந்தியு பிலாத்துமனை நிந்தனைக் காட்பட்டுப்
பொருந்தாத தீர்ப்புட்பட்டுச்
சொல்லாத வசைமொழிகள் பலவற்று ளேபட்டுச்
சூட்டுமுள் முடியும் பெற்றுத்
துன்பமுற வாரினால் அடிபட்டுப் புண்பட்டுச்
சோரிநீர் வடியப்பெற்றுக்
கொல்கதா மலையிலே குருசதனில் அறைபட்டுக்
கொடியரெம் பவங்கள்தீர்த்தாய்
குருராச பரதீசு வரராசர் அருள்நேச
குமரேச அருள்யேசுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப் பாக்கள்

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

**சூரிய அத்தமன வருணனை**

ஆயிரங் கரம்விரித் தலர்கதிர்ச் செல்வன்
பாயிரு ளென்னும் பகைவனைச் சிறிதும்
நோதல்செய் யாதொரு நொடியினி லோட்டிக்
கீழ்த்திசை நாடெலாம் கிளரொளி விரித்தே
காத்துநடு நின்று கடமையை முடித்தபின்
நானில மாந்தர் நன்றியும் வாழ்த்தும்
நயந்துரைத் தேபிரி யாவிடை நல்கிட
ஏற்பான் போன்றே இனிது கரம்கூப்பி
மேற்றிசை. நாட்டினும் விளங்கொளி வீசிப்
பலன்கரு தாத பயன்தரு சேவையை
ஆற்றிடச் செல்வேன் விடைபெறு கின்றேன்
வாழிய நலனென வாழ்த்திமேற் காழியில்
மூழ்கினன் வந்தனை தியானம் முடித்து
விவேகா நந்த வேதாந்த சூரியன்
தத்துவ ஞான சமரச ஒளியால்
அகவிருள் நீக்கி அறிவொளி யூட்டிய
அமெரிக்க நாட்டினை அடைந்தனன்
மறைந்தே.

அதுகண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்திமாலை வருணனை**

செவ்வுடை யுடுத்துச் செவ்வணி யணிந்து
அந்தி மந்தாரை சூடிச் செந்தலை
செஞ்சாந்து பூசிச் செம்பொட் டிட்டுப்
பூப்பறி விக்கும் மகளெனப் பொலிந்தே
அந்தி மாலையெனும் அரக்கி வந்தனள்
வந்தவள் வயிறு நோவாது பெற்றுத்
தந்தனள் இருட்குழா மாகிய மைந்தரை
அற்றைநாள்,
பாய்கலைப் பரிதியும் மாய்கலை மதியமும்
இருநில னுடனே யொருசம நிலையில்
மேற்கினும் கிழக்கினும் மேவி நின்றிடும்
பின்னுவா வாதலிற் பிறையொளி பெறாமல்
மங்கி யிருளுரு வாகி மறைத்தலால்
இருசுட ராகிய கண்ணிணை யிழந்து
பெருநில மடந்தையைப் பெருந்திணை
யொழுக்கில்
மருவியே யரக்கி மைந்தர்கள் வலிந்து
மயக்கிட உலகெலாம் இருள்மய மானதால்

**இராக்கால வருணனை**

இருளின் கொடுமையை என்னென் றியம்புவேன்
அன்பரைப் பிரிந்தோர் அகமென எம்பிரான்
அருள்நெறி யறியா இளைஞர்தம் மதியென
ஒழுக்கம் கெட்டோர் நடையென உரைக்கும்
கொள்கை யொன்றும் செயல்வே றொன்றுமாய்க்
குழப்புங் குறும்பர் குணமென மழுப்பும்
விடைபகர் வீணர்தம் வெறுமறி வெனவுயர்
மரபிகழ் மாக்கள்சொல் ஆபாச மொழியென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பி லாளர்தம் பாழ்படு படிப்பென
வித்துவக் காய்ச்சலால் வேகுவோர் முகமெனக்
காதலின் நுட்பம் காணார் கருத்தென
நல்லன நடுவே தீமைகண் டுவக்கும்
அல்லல் மாக்கள் ஐம்புல மயக்கென
பெரியோரை நகைத்திகழ் பெரும்பே
தைமையென
தேசிய நோக்கிலார் அரசியற் செருக்கென
இருண்டுல கெல்லாம் இருட்கடல் போன்றதே
இக்கொடு மிருளில் இன்னருட் கொடையாம்
நித்திரைத் திருவினை யான்சுகித் துறங்கையில்
கண்துயில் கலைந்தொரு கனவெனும்
அவத்தையில்
மண்டலம் விண்டலம் பாதலம் மற்றை
அண்டகோ டிகளெலாம் மண்டிமீ தோங்கி
நின்றதோர் பேரொளி நிமிர்ந்தெழக் கண்டேன்
அதுதான்,

பூத பௌதிகப் பொருட்பரப் பெல்லாம்
தன்னகத் தடக்கியே சார்பாய் விரிந்த
விஞ்ஞான வெளியினும் மேற்சென் றுயர்ந்து
சிந்தையும் மொழியும் செல்லா தகன்ற
அந்தமில் பரவெளி யதில்நிறைந் தெழுந்ததால்
முந்தையோர் கண்டவம் மூவா நிலைசேர்
மெய்ஞ்ஞான சோதியின் விளங்கொளி முன்னர்
விரைந்தெழுந் திருகை கூப்பி வியப்புடன்
வாழ்த்தி வணங்கியான் நிற்கையி லாங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட காட்சியை விண்டிடக் கேண்மின்.
ஆங்கே,
அப்பெருஞ் சோதியின் அழகினில் மூழ்கிச்
சைவர்வே தாந்திகள் சமயக் கணக்கர்கள்
முந்தைய நால்வோர் எழுவர் பிந்திய
நால்வராழ் வார்கள் நாயன்மா ருடனே
அமர னகத்திய னாதிய முனிவரர்
சங்கரர் விவேகா னந்தர்முத லாய
தத்துவ ஞானிகள் தாம்தொழக் கண்டேன்.
அன்றியும்,

**விஞ்ஞானிகள் கண்ட மெய்ஞ்ஞானம்**

பூதநூற் புலவரும் வேதிநூ லறிஞரும்
பல்லா யிரவர்விஞ் ஞானியர் பாங்கே
பக்தி கனிந்தருட் பாடல்கள் பாடி
வைத்தகண் வாங்கா தவ்வொளி வழுத்தி
அன்னோர் கண்ட ஆராய்ச்சி முடிபுகள்
அனைத்துமவ் வொளிக்கே
அர்ப்பணம் செய்துநின்
றகங்குழைந் துருகிய காட்சியற் புதமே.
அவருளே,

**விஞ்ஞானிகள் இறை வணக்கம்**

தூர திருட்டிக்கண் ணாடியைக் கண்ட
பேர்பெறு கலிலியோ பெருமித மிழந்தே
மெய்ம்மயிர் சிலிர்த்து விம்முற்று நின்றனர்.
தொலைபேசி யந்திரம் தோற்றிய தோமாஸ்
ஆல்வா எடிசனார் அமைதியில் ஆழ்ந்தனர்.
நீராவி யந்திரம் நேருறக் கண்ட
யேமிஸ் உவாட்சுடன் நிலம்வீழ் கனியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையக் கவர்ச்சியை மதிகொண் டுணர்ந்த
ஐசக் நியூட்டனும் அசைவற்று நின்றனர்.
அவர்பின்,
வானொலி கண்டமாக் கோனியும் ஊனினை
ஊடுரு வொளிக்கதிர் இயல்பினை உணர்த்திய
உறோயன் சென்னும் இரேடிய சிகிச்சையைக்
கண்டே புற்றுநோய் நிவாரணம் கண்ட
வண்மைக் கியூறியாம் மடந்தையும் பணிந்தே
உண்மைகண் டோமென உருகினர் நிற்க
தாவர வாழ்க்கையைத் தானினி துணர்த்திய
சகதீச சந்திர போசுட னாயிரம்
ஆயிர மாகவிஞ் ஞானியர் அன்புடன்
பாயிரம் பாடிப் பரவிடக் கண்டேன்
ஈதொரு புதுமை யாதென வினவினேன்.
அதுகேட்டுச்,
சமாதி கலைந்தவர் போன்றுகண் திறந்தே
வானொலி கண்டமாக் கோனி யுரைப்பார்

**விஞ்ஞானிகள் சார்பில் மாக்கோனியின் சமய விளக்கம்**

ஓசை ஒலியலை எல்லா மாகி
விஞ்ஞான வெளியினும் மேற்சென் றப்பால்
மெய்ஞ்ஞான வெளியில் விளங்குபே
றொளியிது
அணுவுக் கணுவாய் அணுவினை இயக்கும்
சீவ சக்தியின் திருவிளையாட் டிது
எம்மா ராய்ச்சிக் கெட்டாப் பொருளாம்
ஐம்புலக் காட்சிக் கப்பா லகன்றும்
அன்புரு வாகி அகத்தே அணுகியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப வடிவாய் எம்முனே நிற்கும்
எம்பெருஞ் சோதியைக் கண்டோம் எமையெலாம்
இயக்கிடும் சக்தியின் இருப்பினைக் கண்டோம்
செம்பொருள் கண்டோம் செருக்கினி
யொழிந்தோம்
விஞ்ஞான முடியினும் மேலாம் முடிபை
மெய்ஞ்ஞான முடிபின் விளங்குபே ரொளியை
அஞ்ஞான மகலக் கண்டோம் முன்னோர்
அனுபவக் காட்சியால் அறிந்தவிப் பொருளைச்
சாட்சியாய் நவின்றதே சமயமென்
றுணர்ந்தோம்
விஞ்ஞான அன்னை வியப்புட னீன்ற
மெய்ஞ்ஞானக் குழந்தையாய் விளங்குமே
சமயம்
விஞ்ஞான மெமக்கு விளம்பிய திதனை

**சமயம் விஞ்ஞான முடிபின் முடி**

சமயமே உண்மை சமயமே வாழ்வு
சமயமே சார்கதி சமயமே நன்னெறி
சமய வாழ்வின்றிச் சாந்தி கிட்டாது
எல்லாம் தெய்வமே எல்லாம் சக்தியே
விஞ்ஞான மெமக்கு விளக்கிய திதனை
விஞ்ஞான முடிபின் முடியே கடவுள்
விஞ்ஞான முடிபின் முடியே யான்மா
விஞ்ஞான முடிபின் முடியே சமயம்
மெய்ஞ்ஞான மென்னும் விளங்கெழிற்
குழந்தை
விஞ்ஞான அன்னையின் மடிமேல் வளர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான யுகமிது மெய்ஞ்ஞான யுகமாய்
விளங்குக உலகில் விஞ்ஞான முடிபுகள்
அசுர வாழ்க்கையின் அகோர மகற்றி
அமர வாழ்வினை உலகினுக் களிக்க
சாந்தியும் இன்பமும் தந்துவிஞ் ஞானம்
இகத்தினும் பரத்தினும் இனியவாழ் வருளுக
வாழ்கவிஞ் ஞானம் வாழ்கமெய்ஞ் ஞானம்
எனமாக் கோனியும் இயம்பியே மறைந்தார்
தோன்றிய சோதியும் மறைந்தது யானும்
கண்விழித் தெழுந்தேன் காசினி யோரே
உரைத்திடு கனவிதன் உட்பொரு ளுணர்ந்து
பக்திசெய்தே பரம் பொருளை வாழ்த்தி
வாழிய இனிதே உலகெலாம் வாழியே.

## மேன்மையணி கல்வி அறிவு

தாரகைக்கு வெண்மதியம் தானணியாம் கற்புடைய
காரிகைக்குக் காந்த னணிகலனாம் - பார்புரக்கும்
வேந்தன் குடிக்கணியாம் மேன்மையணி எல்லார்க்கும்
ஆய்ந்தமைந்த கல்வி யறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுச் சூழலுக்கு ஒவ்வாத நடையால் என்ன பயன்?

நல்லாய் இலண்டன் நகர்வரையும் சென்றொருவன்
பல்கலைகள் நன்கு பயின்றாலும் - சொல்லுங்கால்
தன்னூர் நிலையறிந்து தானொழுகா னாகிவிடின்
என்னபய னாகு மிவற்கு.

## நல்லார்க்கும் மூர்க்கர்க்கும் பொழுதுபோதல்

அல்லும் பகலும் அருங்கலைநூல் கற்பதிலே
நல்லோர்க்கு நாள்கழியும் நன்றாக - அல்லாத
மூர்க்கருக்கோ நித்திரையில் மூட்டும் குழப்பத்தில்
போய்க்கழியும் வீணே பொழுது.

## நல்லாரைப் பேணார் கதி

எல்லாம் படித்தாலும் ஈங்கொருவன் தன்னாட்டு
நல்லாரைப் பேணி நடவானேல் - கல்லார்
அவனிலும்நல் லாரே அவன்கற்ற கல்வி
அவனையுமா ளாக்கா தறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மொழி கற்றோர் நிலை

(வஸ் வண்டியிற் காற்சட்டை போட்டோருக்கு இடமொதுக்கியது கண்டு பாடிய பாடல்).

முன்னை வடக்கால் முளைத்தநாற் சாதிபோய்ப்
பின்னையிரு சாதி பிறந்துளகாண் - அன்னியர்தம்
ஆங்கிலத்தால் மேல்சாதி யாயிற்றே தாய்மொழிகற்
றேங்கிநிற்கும் கீழ்சாதி யே.

## புதுமைக் கவிஞருக்கு

1. மாத்திரையில் நின்றும் வளருமிசை யவ்விசையால்
நாத்திருந்தும் செய்யுள் நடக்குமே - சாற்றின்
ஒருமாத் திரைதப்பின் ஓசைகெடும் பாட்டும்
உருமாற்றம் பெற்றொழி யும்.

2. செய்யுளிலே செந்தொடையும் சேர்ந்துவரு மானாலும்
நையாது மாத்திரைதான் நையுமேல் - ஐயாகேள்
மாத்திரை தப்பின் இசைதப்பும் தப்பினிசை
வாய்த்திடுமோ செய்யுள் வரம்பு.

மக்கள் நடைக்கு வரம்புண் டதுபோல
மக்கள் கவிக்கும் வரம்புண்டு - மக்கள்
வரம்பு கடந்தால் மதியார் கவியும்
வரம்பு கடந்தால் வழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் முஸ்லிம் ஒற்றுமை

(1956ல் மருதமுனையில் நடந்த ஓர் அரசியல் மகாநாட்டில் பாடப்பட்டது)

இருதயத்தின் ஈரிதழ்போல் இங்குதமிழ் முஸ்லிம்
ஒருவயிற்றுப் பாலகர்போ லுள்ளேம் - அரசியலிற்
பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்கி
ஆராயார் செய்வார் அழிவு.

## உழைப்புத் தொழிலுணர்ச்சியால் உயரும்

(1942ஆம் ஆண்டு கல்முனை விளைவு விழா மலருக்கு எழுதிய பாடல்)

உழவா லுயரு முலகம் உழவும்
உழைப்பா லுயரும் உழைப்பும் - தொழிலுணர்ச்சி
பெற்றா லுயருமெனும் பேருண்மை நம்மிளைஞர்
கற்றால் வருமின்பங் காண்.

## அன்பினால் இன்பநிலை சித்திக்கும்

அன்பிற் சமத்துவமுண் டாங்கதனால் ஐக்கியமாம்
பின்புமகா சக்தி பிறக்குமே - மன்புவியில்
சத்திய னாற்கரும சாத்தியமாம் இன்பநிலை
சித்தியுமா மென்றே தெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக்கு நன்மை கருதும் நடை

(தமிழ்த்தலைவர்கள் ஒற்றுமையாய் உழைப்பதே சிறந்தது எனக் காட்டப் பாடப்பட்டது).

அறிவா லறிவை அராவுதல்விட் டேநல்
அறிவா லறிவை அறிந்தே - அறிவைப்
பயன்செய்து கூட்டாய்ப் பழகுதலே நாட்டு
நலன்கருதும் நல்லோர் நடை.

## பொங்குக பொங்கல் பொலிந்து

அன்பினிது பொங்க அறம்பொங்க ஆருயிர்கள்
இன்பசுகம் பொங்க இனிதாக - தென்பொலியும்
சங்கத் தமிழோசை தாரணியெ லாம்பொங்க
பொங்கு கதைப்பொங்கல் பொலிந்து.

## நிலமகளை ஈன்ற தந்தை

ஏழு நிறப்பரி பூட்டிய தேர்மிசை
ஏறி வலம் வருவோன்
இன்னொளி வீசி உயிர்த்தொகை யெல்லாம்
இனிது புரந்திடு வோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழ னெனத்தகு சந்திர னுக்கொளி
தந்து துலங்கிடு வோன்
தூயநல் வானொரு நீல நிறம்பெற
நின்று விளங்கிடு வோன்
ஏழையர் குடிலொடு செல்வர்தம் மாளிகை
எங்கும் விளங்கிடு வோன்
இனிய வளம்பல பொலிநில மகள்தனை
ஈன்றரு ளுந் தந்தை
வாழிய செங்கதிர் வடகீழ்த் திசைபுகு
மங்கல நன்னா ளே
வாழிய தமிழன் புதுவாழ் வுற்று
மலர்ந்திடு பொன்னா ளே.

## கலையும் பண்பும் சேர்ந்த அறிவே சிறப்பு

1. உண்மை தெளிய உணர்த்திடுமே
உள்ள முயர வளர்த்திடுமே
திண்மை பெறுநெஞ் சளித்திடுமே
தெவிட்டா துளத்தில் இனித்திடுமே
வண்மைத் திருவும் பெருக்கிடுமே
மண்ணும் விண்ணும் மிகநெருங்கி
அண்மை யுறும்வாழ் வளித்திடுமே
அறிவுக் கறிவே நிகரம்மா.

2. நீரும் நிலமும் இணைந்தாற்போல்
நெல்லும் உயிரும் இசைந்தாற்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரும் உறவும் அணைந்தாற்போல்
உறவும் அன்பும் அமைந்தாற்போல்
காரும் மழையும் கலந்தாற்போல்
கடலும் கரையும் கிடந்தாற்போல்
தேரும் கலையும் பண்புமொன்றாய்ச்
சேர்ந்த அறிவே சிறப்பம்மா.

## அகக்குருடர் இன்புறுவார்

உண்மை யுளத்தில் உதிக்க உரைதெளியும்
பின்னைப் புலமை பிறக்குமே - நன்மை
அகக்குருட ரெல்லாம் அறிவுவிழி பெற்றே
மிகப்பெரிதும் இன்புறுவார் மேல்.

## கூட்டுறவின் சீர்

(ஒவ்வொருவரும் எல்லார்க்கும், எல்லாரும் ஒவ்வொருவர்க்கும் என்கிற கூட்டுறவின் குறிக்கோளை இனிய குறள் வெண்பாவாக அமைத்த பா.)

எல்லெவரும் எல்லார்க்கும் எல்லாரும் எல்லெவர்க்கும்
செய்சேவை கூட்டுறவின் சீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஸ் பிரயாணம்

மனமும் விறைத்தது மார்பும் விறைத்தது மாதர்கன
தனமும் விறைத்தது தாங்காத வெப்பம் தகித்திட வா
சனமும் விறைத்ததாள் மேலாளை யேற்றச் சனமடை வி
சனமு முரைப்பதென் வஸ்பய ணம்பெருஞ் சங்கடமே.

## புலவர்மணியின் வாழ்க்கையில் மறக்கமுடியாத பாட்டு

(புலவர்மணி சாவகச்சேரியிலிருந்தபோது தாழ்த்தப்பட்ட குலத்தவரான ஆறுமுகம் என்பாரோடு நட்புப் பூண்டிருந்தார். அவர் மறைந்தபின் பாடிய பத்துப் பாடல்களில் ஒன்று)

ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்குபுக ழுண்டாம்
இழுக்கத் திழிகுலமா மென்றே - விழுப்பத்து
நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந் தாறுமுகன்
மேற்குலத்த னானான் விரைந்து.

## புத்திரர் புத்திரிகளின் வருகை

1. கணவனாற் பெற்றபிள்ளை [1]ஔரதன்
கணவன் கூட்ட
மனையவள் அயலாற் கீன்ற
மைந்தன் [2]கேத் திரச னென்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமிலாக் கன்னி பெற்ற
மைந்தன்[3]கா னீன னாவான்
குணமிலா மனைவி சோரற்
கீன்றவன் [4]கூட னாமே.

2. விலையினிற் பெற்ற பிள்ளை
[5]கிரிதனாம் விதவை மீண்டோர்
தலைவனை மணந்து தந்தோன்
சாற்று [6]பௌ நற்பவன் தாய்
அலதுதன் தந்தை தத்தம்
செய்பிள்ளை [7]தத்தன் முன்பே
தலைவனாற் கருவுற் றீன்றோன்
மணத்தின்பின் [8]சகோட னென்பர்.

3. திக்கிலான் வளர்ந்த நல்ல
சேய்[9] கிருத் திரம னாவான்
தக்கவந் தணனால் வேந்தால்
சூத்திரத் தையல் தந்தோன்
மிக்க [10]சௌத் திரனாம் பெற்றோர்
கைவிட வேற்றோர் பக்கல்
ஒக்கவே வளர்ந்த பிள்ளை
[11]அபவித்தன் எனவு ரைப்பார்.

4. தன்னைத்தான் தத்தஞ் செய்தோன்
[12]உபகிருது தப்பேர் சார்வான்
இன்னபன் னிருவ ருள்ளும்
ஔரதன் தத்தன் கூடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுகேத் திரசன் கிருத்ர
மன்னப வித்த னென்போர்
அன்னைதந் தையர்பாற் பாகம்
அடைந்திடும் உரிமை பெற்றார்.

*குறிப்பு : ஏலாதி 30, 31 செய்யுள் உரை பார்க்க*

# இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம்

பூமி திருத்திப்பயி ரேற்றிடுவோம் – நெல்
பொலிக பொலிகவென வாழ்த்திடுவோம்.

1. நாமினிப் பஞ்சமொரு நாளுமஞ்சோம்
நாழி யரிசிக்குப்போய்ப் பிறரைக்கெஞ்சோம்
சேம முறவேவாழும் திறங்கள்கண்டோம்
செல்வங்கள் பூமிதேவி யருளக் கொண்டோம். – பூமி

2. உழவுக் குயிரேயெங்கள் உழவுதொழில்
ஓங்கும் புதுமுறையில் அதைவளர்ப்போம்
நிலவைக் குவித்ததுபோல் நெற்பொலிகள்
நீண்டு வளர்ந்திடவே குவித்திடுவோம் – பூமி

3. தூர்ந்த குளங்கள்பல திருத்திடுவோம்
தொடுத்துநீர் வாய்க்கால்கள் பொருத்திடுவோம்
பாய்ந்து வரும்நதிநீர் மறித்திடுவோம்
பாங்காய்நெல் இருபோகம் விளைத்திடுவோம் – பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காடு கெடுத்துநாடு புதுக்கிடுவோம்
காணியிற் குடியேறி வசித்திடுவோம்
பாடு படுத்தும்சோற்றுப் பஞ்சமெல்லாம்
பறந்த தென்றேவெற்றி பாடிடுவோம் - பூமி

5. திருந்த வயல்நிலங்கள் சமன்படுப்போம்
சீராய் வரம்புயர்த்திச் செப்பனிடுவோம்
பொருந்து புதுமுறையிற் கலப்பைகொள்வோம்
புல்லை யறவுழுது புழுதிசெய்வோம் - பூமி

6. குலத்திற் சிறந்தஒக கோத்திரநெல்
கோடி பலன்தருமெம் மாத்திரஞ்சொல்
நிலத்திற் பயிரிடுவோ மிந்தநெல்லை
கலப்புநெல் லால்இலாபம் கதிப்பதில்லை - பூமி

7. கூட்டுப் பயளைஇலை குழைப்பயளை
கொள்ளும் செயற்கையெனும் உரப்பயளை
மாட்டுப் பயளையொட்டுத் தாட்பயளை
வயலுக்குச் சொரிந்துநாம் வளம்செய்குவோம். - பூமி

8. பல்லுக் கலப்பைகொண்டு பயிருழுவோம்
பதஞ்செய்து கிண்டிமண்ணை நெகிழ்த்திடுவோம்
புல்லைக் களைவோம்பூச்சி புழுத்தொலைப்போம்
பொலிந்தொன்று கோடிவிளை புதுமைசெய்வோம் - பூமி

9. வானந் தொடுமலைபோற் சூடுகள் வைப்போம்
வாரிப் படங்கில் தள்ளிப் பாடித்துவைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானந் தருமஞ்செய்தே உண்டுகளிப்போம்
தங்கநெல் பட்டடையிற் கொண்டு சேமிப்போம் - பூமி

10. மாற்றுப் பயிர்கள்செய்யும் வகைதெரிவோம்
வளத்தைப் பெருக்கும்புது முறைபுரிவோம்
சோற்றுக்குப் பிறநாட்டை இரந்துநில்லோம்
சோம்புக்கும் வறுமைக்கும் அடிமையல்லோம். - பூமி

11. இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம்
ஏற்றி அயல்நாட்டவர் பசிதணிப்போம்
இலங்குதங் கக்குவியல் கொண்டுவருவோம்
எங்கள் பழையநிலை இன்றுகாண்போம் - பூமி

12. தேசிய ஒற்றுமையாம் பயிர்வளர்ப்போம்
தீய வகுப்புவாதக் களைபறிப்போம்
நேசக் கரம்நீட்டி உலகமெலாம்
நிலையான நட்புறவை விளைத்திடுவோம் - பூமி

## நல்லையாவையும் முத்தையாவையும் இணைத்த கவியோவியம்

(மட்டக்களப்பு வடக்குப் பிரதிநிதியாகவிருந்த திரு. வ. நல்லையா அவர்கள் பின்னர் அவரது மனைவியாரான செல்வி முத்தையாவை அட்டாளைச் சேனைக் கடற்கரையில் அந்திமாலை வேளையில் வித்தியாதரிசி அ. சரவணமுத்து அவர்களுடன் சந்தித்ததைக் கேட்டுப் பாடியது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் கடல்சிவப்ப நீண்டமேல் வான்சிவப்பப்
பாலுற்ற கார்வண்ணன் பால்வண்ணன் - மேல்சிவப்பக்
கான்சிவப்ப மேதிக் கணைஞ்சிவப்ப வீசிற்றே
தேன்மொழியாள் சேலைச் சிவப்பு.

## கல்முனை விளைவுவிழா வாழ்த்து

1. கொல்லும் புலிகரடி
கோப மதயானை
செல்லும் வழிகளெல்லாம் - கிளியே
செந்நெல் விளையுதடி.

2. காயும் விஷநுளம்புக்
காடுகள் நாடாகிக்
காயும் கனிகிழங்கும் - கிளியே
கற்பகச் சோலையடி

3. வாழ்க விளைவுவிழா
வாழ்க பொருட்காட்சி
வாழ்க அஸீஸ்துரையும் - கிளியே
மங்களம் பொங்குகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்வேலி ஆண்பிள்ளைக்கு இரு பாடல்கள்

(தென்னிந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த முகையதீன் பீர்சாகிப் என்னும் வர்த்தகர் பங்காளிகள் மோசடியால் வியாபாரம் முறிந்து கடன்பட்டு வருந்தியபோது அவரைத் தேற்றப் பாடப்பட்டவை.)

1. ஒன்பது வாயி லூடற்கோட்டைக் குள்வாழ்
உயிருக் கிங்கே
இன்பமும் துன்பமு மெல்லாம் இயைவ
தியற்கை கண்டாய்;
மன்பதைக் கல்லாவி னின்னரு ளுண்டு;
மனம் பதையேல்
அன்ப முகையதீன் பீர்சாகிப் நெல்வேலி
ஆண் பிள்ளையே.

2. அருளுண்டு நல்லோரி னன்புண்டு செய்திடும்
ஆள்வினை யால்
பொருளுண் டறமுண்டு; பூணும் புகழுண்டு;
பூமி தனில்
இருளுண்ட நெஞ்சத்து வஞ்சகர் தீவினை
என்செயுங் காண்
மருளுண்டு நீதள ரேலிது யான்சொலும்
வாசக மே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாப்பியல் மெய்

(தமிழாசிரியர் வாழ்க்கையிலே தான் படும் துன்பங்களைப் பதில் வித்தியாதிபதி திரு. க.ச. அருள் நந்தியிடம் எடுத்துக்கூறும் வகையிலமைந்தது இப்பாடல்)

தாப்பிய லூச லெனத் தடுமாறும் தனித்துயர் யான்
நீப்பிய லாது தமிழா சிரிய நிலையி லிங்கே
யாப்பியல் மெய்போல் மதிப்பில ளாகி இருத்தல் நன்றோ
காப்பியம் வல்ல அருணந்தி செந்தமிழ்க் காவல னே.

## சட்டம்

(தான் நிர்வாகத்துறையிலுள்ள மேலதிகாரி என நினைத்து ஆசிரியர்களைத் துன்புறுத்திய அதிபரைத் திருத்த எண்ணிப் பாடிய பாடல்)

சட்ட மென்பது வேசரி யேயதைத்
தழுவி நிற்பது வேசரி யேயிட்ட
சட்ட மென்ப ரகந்தைய ரேயதைத்
தாங்கு வோர்பழங் கந்தைய ரேயன்பாய்க்
கிட்ட வந்துநற் பண்பொடு வாழ்வரேல்
கிட்டும் நன்மையல் லாவிடி லோசட்டி
சுட்ட தும்கையை விட்டது மாய்விடும்
தொல்லையே யதற் கெல்லையு மில்லையே.

சட்டமென்பது சரி. அதைத் தழுவி நிற்பதுவே சரி.
சட்டமென்பது வேசரி. அதைத் தழுவி நிற்பது வேசரி.
வேசரி - கழுதை. சட்டம் ஒரு கழுதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வ சமய சமரசப் பாடல்

இனியருட் கடலே ஏழையேன் என்னால்
இங்கொரு செயலிலை பயண
அனுமதிச் சீட்டும் செலாதினி விசாவும்
முடிந்ததென் றறிவிலேன் இருந்தேன்
புனிதனே எனது விசா வினை நீட்டிப்
புதுப்புது வினைசெயப் பணிப்பாய்
உனதுபே ரறிவின் முன்புகூ னியம்யான்
உணர்கிலேன் உன்விளை யாட்டே.

பயண அனுமதிச்சீட்டு - உடம்பையும்,
விசா - ஆயுட்காலத்தையும் குறிக்கும்.

## அல்வாயூர்க் கவிஞன் நினைவாக இளங்கவிஞர்க்கு

பாடுவ தெல்லாம் பாட்டோ
மக்கள்தம் பாட்டை நாளும்
நாடியே யுணர்ந் துயர்த்தும்
நலமின்றேல்; சமூகந் தன்னைச்
சாடியே கிண்டல் செய்து
தாழ்த்துவோன் கவிஞ னாமோ?
வாடியே உழலும் மக்கள்
வருத்தம்நீங் கிடவே பாடீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழதான் வீழாதோ

கோயில் நிலங்கொடுத்துக் குத்தகையை வாங்கித்தம்
வாயிலிடும் வண்ணக்கு மார்தலைமேல் - போயிடிதான்
வீழாதோ? சுற்றம் மிடியும் பிணியுமுற்றுத்
தாழாதோ? தெய்வமிருந் தால்.

## பெரியோர் அருமை அறியாதவன்

(யாழ்ப்பாணத்துக்கு ஒரு மகாநாட்டுத் தலைமைக்குச் செல்வதற்காகப் பென்சனை ஒருநாள் முந்தித் தரும்படி கேட்டபோது மறுத்த அதிகாரியைக் குறித்துப் பாடியது).

சட்ட முடன் மனிதத் தன்மையறி யாக்கயவன்
சிட்டர் பதவிதனைச் சேர்ந்தாலென் - முட்டும்
எருமையவ னுக்கெவரு மொன்றே பெரியோர்
அருமை யறியா னவன்.

## சொட்டைக் குணமுடைய பேய்

ஒட்டும் வயிறும் உலர்ந்தமுக முந்தேய்ந்த
நெட்டையுட லும்வஞ்ச நெஞ்சுமுளான் - சொட்டைக்
குணமுடையான் கொண்ட கொலைக்கருவிக் கையிற்
பிணமுடையான் சீனியொரு பேய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னிமை நியமனம்

1. கல்வியறி வில்லாக் கசட்டுமனக் காமுகர்க்கு
நல்வன்னி மைப்பதவி நல்கிடிலென் - தொல்லை
படிமுழுதுஞ் சென்று பழுதுரைத்து நாளும்
குடிமுழுதும் கொன்று விடும்.

2. மான மணியிழந்த வஞ்சகனைக் கூவியபி
தான மணியமெனச் சாற்றினர்காண் - ஆனதனால்
சிற்றினங்க ளோங்கும் சிறப்புடைய நல்லினங்கள்
முற்றும் நசிந்து கெடும்.

## குருக்கள்மடம் செல்வக் கதிர்காம சுவாமிகோயில் நீண்டகாலமாக கும்பாபிடேகம் இல்லாமல் இருந்த நிலைகுறித்துப் பாடியது

1. திருக்கதவம் சார்த்தித் திருத்தாழிட் டுள்ளே
இருக்க மனங்கொண்ட தேனோ - குருக்கள்மடம்
செல்வக் கதிர்காம தேவே திறந்தருளை
நல்கக் கடவாயிந் நாள்.

2. பலரும் நடமாடும் பாதையிலே போது
புலரும்போ துந்துயில்போ காதோ - மலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பார்வை யெங்கே திருக்கைவே லெங்கே
இருப்பாய் இருட்டறையுள் இங்கு.

3. எல்லா உயிர்க்கும் இனியஒளி ஈந்தருளும்
நல்லாய்பே ரூரின் நடுவினிலே - பொல்லாத
வஞ்சகர்தம் நெஞ்சம்போல் மால்சேர் இருட்டறையும்
தஞ்சமோ இங்குனக்குத் தான்.

4. சாதி சமயம் கடந்தநின் சந்நிதியில்
சாதிமதம் பேசிநிற்பார் தம்மனத்தே - சோதி
வடிவே லெறிந்து மனவிருளைத் தேவே
விடிவேசெய் யாயோ விரைந்து.

5. சாதித் திமிரோடுன் சந்நிதியி லேமுருகா
வாதித் ததிகாரம் வாய்பேச - மோதிச்
செருக்கோடு நிற்பாரைச் செவ்வேலால் நெஞ்சத்
திருக்கோட்டி யாள்வாய் தினம்.

## ஆராய்ச்சி முடிபால் நாட்டை வாழ்விப்போம்

இயற்கை துணையாக ஈட்டு மறிவால்
செயல்திறத்தால் ஆராய்ச்சி செய்தே - முயற்சியால்
முன்னேறிக் கண்ட முடிபுகளைக் கொண்டிங்கே
நம்நாட்டை வாழ்விப்போம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்நன்றி மாலை சேர்த்திடுவோம்

சொல்மலரை அன்பெனும் நாரிற் தொடுத்தினிய
நல்மணமாம் பண்பு நனிகமழ - மன்னுபுகழ்ச்
செய்ந்நன்றி மாலையினைச் சேர்த்தியொரு வர்க்கொருவர்
வையமிசை வாழ்வோம் மகிழ்ந்து.

## பிற்சந்ததிக்குத் தீங்கு சேர்ப்போர்

நாட்டு நெருக்கடியில் நாட்டைவிட்டு நீங்கியயல்
நாட்டுக்குச் செல்லும் நலமில்லார் - ஓட்டமெலாம்
தேருங்காற் புல்லடிமைச் சின்னமே யிங்கிவரால்
சேரும்பிற் சந்ததிக்குத் தீங்கு.

## நல்ல புத்தியுடன் மக்கள் வாழ்க

வாழி பிறப்பும் இறப்பு மிவைமண்மேல்
வாழி கடமை மகிதலத்தில் - வாழியே
பத்திவிசு வாசம் பரனருளால் நல்லொளிசேர்
புத்தியுடன் மக்கள் பொலிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்ப புத்தியால் சூழுங் கேடு

1. ஆனை கிடக்கவோர் ஆள்கிடக்கத் தன்னுணவாய்
ஏனை அராகிடக்க ஏற்றுநாண் - தோல்நுனியை
மெள்ளக் கடித்தெல்லாம் வீணாகத் தான்மடிந்த
குள்ளநரிக் கிக்கதியேன் கூறு

2. இரும்புமண் வெட்டிதனை இங்கொருவன் தங்கக்
கரண்டியெனச் சொல்வோனைக் கண்டால் - விரைந்தன்ப
கந்தோர்க் கனுப்பவனைக் காலியிட மொன்றிருக்கு
வந்தா லவனெனக்கு வாய்ப்பு.

## கண்ணன் இருக்க உட்பகை என்செய்யும்

1. அட்டமத் துச்சனியால் ஆகாத லோபிகளால்
முட்ட ருறவால் முழுமோசம் - கிட்டநின்று
பண்ணுகின்ற உட்பகையால் பாழாய்ப்போ காதொன்றும்
கண்ணனிருப் பானெல்லாம் கண்டு.

2. போகா விடந்தனிலே போகவைத்தான் வாழ்நாளில்
ஆகாரைக் கும்பிடச்செய் தானதன்மேல் - ஈயாமல்
ஒட்டும் பிசினர் உறவாலே மாற்றினான்
அட்டமத்து வந்தசனி யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலமும் சாமியாரும் செய்த வம்பு

அம்பலமும் ஓர்சாமி யாருமொன்றாய்க் கூடியென்
சம்பளத்தின் தர்மகர்த்தா தாமென்றே - வம்புசெய்து
நம்புமெனை வஞ்சித்தார் நானறியேன் சாமிநிலை
அம்பலவன் அம்பலமா னான்.

## தலைவீக்கம்

(தலைவீக்கமுள்ள ஓர் அரசியல்வாதி தாங்க முடியாத தலைப்பாரத்தாற் சாவுற்றபோழ்து பாடியது)

முழங்காலில் நின்று முறையே எமக்கு
வழங்குமன்னிப் பென்று வணங்கி - அழுங்காலம்
தூரத்தி லில்லையென்றான் தூக்கமுடி யாததலைப்
பாரத்தால் வீழ்ந்தான் பதைத்து.

## சமூகத்தின் ஈனன்

(கோழிக்கறிக்குப் பதிலாகப் பூனைக்கறி சமைத்துப் போதகருக்கு விருந்தூட்டிய ஒருவரைப் பற்றிப் பாடியது)

கட்டிவைத்த கோழிகாற் கட்டறுத்துக் கொண்டோடி
விட்டதாற் பாவி விரைந்துபற்றி - வெட்டியே
பூனை கறிசமைத்துப் போதகரை உண்பித்த
ஈனனுமு ளான்சமூகத் தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலுகைக்குப்பின் செல்வோரால் இழுக்கு

சலுகை சலுகையென்று சாற்றுகின்றார் நாட்டில்
சலுகை உரிமையன்று தம்பி - சலுகைக்காய்
பின்செல்வார் பேடியர்காண் பிற்சந்த திக்கிவரால்
என்சொல்வேன் எய்தும் இழுக்கு.

## அறுவைச் சிகிச்சை கைதேர்ந்த வைத்தியர்

தெய்வத் திருவருளும் சேர்ந்தே ரணசிகிச்சை
செய்வைத் தியத்தின் திறமையிலே - கைதேர்
வருணகுல சிங்க வைத்தியனை யிங்கே
இரணகுல சிங்கமென்பேன் யான்.

## சந்திர மண்டலப் பயணம் பற்றி

சந்திரமண் டலம்புகுந்தும் தாரணியில் வளர்ந்துவரும்
தந்திரம்பொய் பேராசை போட்டிமுதற் சரக்குகளை
சிந்தையெனும் தேரேற்றி இறக்குமதி யங்குசெய்தால்
அந்தரமே யன்றிமன அமைதியங்கும் நிலவிடுமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பல்

(29.12.39ல் திருகோணமலையில் பாடியது)

## நேரிசை வெண்பா

1. முகமினிதாய்ச் செஞ்சொல் மொழிந்தின் னமுதம்
அகமினிதா யூட்டுமெம் மன்னை - தகவு
பொருந்துதையல் நாயகியார் பொன்மனையி லென்றுந்
திருந்து மினிய திரு.

2. தென்கயிலை சேர்வார்க்கோர் தாய்போற் சிறந்துயர்ந்த
நங்கைதையல் நாயகிசெய் நல்விருந்தை - உண்கையிலே
சைவம் மணக்குந் தமிழ்மணக்குஞ் சார்சிவமாந்
தெய்வம் மணக்குஞ் சிறந்து.

3. மாதரறம் வளர்க்கு மாதரசி வண்கோணை
நாதரருள் சேர்தையல் நாயகியார் - ஆதரவாய்
நல்லுப சார நவின்றளிக்கு நல்விருந்திங்
கெல்லா விதத்து மினிது.

4. நன்னூல் பயில்தையல் நாயகியார் தம்மனையிற்
பன்னூற் புலவர் பயிலுதலால் - தொன்னூற்
கவிச்சுவையுந் தூய அவிச்சுவையுந் துய்த்தே
உவப்பர் விருந்தினரென் றோது.

5. செல்வர் வறியரெனத் தேராம லாதரித்து
நல்விருந்து நாளும் நனியோம்பும் - இல்லினிது
வாழ்கதையல் நாயகியார் வாழ்க திருப்புதல்வர்
சூழ்கவரு ளின்ப சுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மலைமகள்" கயிலை மலைமகள் போன்று வாழ்க

(மலேசிய நாட்டு "மலைமகள்" என்னும் சஞ்சிகையை வாழ்த்திப் பாடிய கவிகள்)

1. இயற்கைசூழ் வணிக நிலையமா யிலங்கும்
ஈப்போமா நகரெனும் வனிதை
செயற்கைநல் லறிவா மழகொளி யதிலுந்
திகழ்ந்திடத் தமிழர்தம் சிந்தை
மயற்கைபோ யகன்று மதிதெளி வடைய
மதிதொறும் வருமலை மகளாம்
புயற்கைசேர் தூய புண்ணியப் புதல்வி
பொலிந்துநீ புவிமிசை வாழ்க.

2. செந்தமிழ்த் தெய்வச் செழும்பொழி லதனிற்
தேர்ந்தினி தாய்ந்த சொல்லவரைச்
சிந்தனை யென்னு மினியநன் னாரிற்
செவ்விதாத் தொடுத்தமைத் தணிசேர்
சந்தமார் கலைப்பண் பெனுமணங் கமழச்
சாத்திய மாலிகை தாங்கிப்
புந்தியி லடிமைப் புத்திபோ யகலப்
புகுந்தனள் மலைமகள் புவிமேல்.

3. மலையிடைத் தோன்றி வருதலா லிருளை
மலைதலால் வயங்கொளி விரித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகலை வளர்த்து விளங்கலாற் பாரிற்
பாங்குட னேழையர் செல்வர்
நலமுறச் சமமாய் நாட்டினிற் பயின்று
நல்லின்பம் விளைத்தலா லீரெண்
கலைவளர் பிறையை நிகர்மலை மகளைக்
காண்பதும் படிப்பது மினிதே.

4. தங்குபே ரறிவு மிச்சையுந் தொழிலும்
தம்முளே யொன்றுகூ டினபோல்
இங்கிளங் கோவன் இராமலிங் கப்பேர்
இருவரும் பெரியசா மியுடன்
துங்கமார் பணிசெய் நோக்கமே கொண்டு
தொடங்கிய மலைமக ளென்னும்
மங்கள மாத சஞ்சிகை யீது
வழங்குக மாநில மெங்கும்.

5. அலைகடற் துறையிற் பலவகைப் பொருள்கள்
அணிபெற அமைந்தகாட் சியைப்போல்
விலைகொளற் கரிய பலகலைச் செல்வம்
விளங்கிடத் தன்னகங் காட்டிக்
கலைமக ளென்னக் கவின்கொடு தோன்றிக்
காசினி கண்விழித் தெழவே
மலைமகள் கயிலை மலைமகள் போன்று
வாழ்கபைந் தமிழ்மணம் வளர்த்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பற் குடும்பம்

1. சோம்பலுடன் இவன்பிறந்த தொருநாளில் இவனைச்
சூழ்ந்துநிற்கும் வறுமையுடன் சிறுமைசுற்ற மெனவே
போம்பொழுதோர் அலுவலுக்கே அதனைமுடி யாமற்
போவதுடன் முடிப்பவரைப் பழிப்புரையும் சொல்வான்
தேம்பிநிற்கும் இவன்தந்தை பெயர்நாளைச் செய்வார்
திருத்தாயின் பெயர்கேட்பின் தேவையம்மாள் அறிவீர்
ஆம்பிளைபேர் தாமதம்பின் தங்கியிவன் மனைவி
அனுதினநித் திராதேவி ஆசியவர்க் குண்டே.

2. கல்பிடிப்பான் அன்னியர்முன் கைகட்டி நிற்பான்
கண்மூடித் தனமாக அவர்சொல்லைக் கேட்பான்
வால்பிடிப்பான் நம்மவரை வசையுரைப்பான் மேலும்
வந்தாரை வாழவைப்பான் வாழ்பவரைக் கெடுப்பான்
பால்பிடிக்கும் பருவத்தே நெற்கதிரை யுறிஞ்சிப்
பதராக்கும் பூச்சியெனக் கருமம்பாழ் படுப்பான்
வேல்பிடித்த தமிழ்வீர மரபில்வந்தோ னெனவே
வீண்பெருமை பேசலிவன் நாளாந்த வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

## குருகுலத்தின் குறிக்கோள்

(1976ஆம் ஆண்டு வெளிவந்த மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மாணவர் இல்லப் பொன்விழா மலரில் வெளிவந்தவை)

### நேரிசை வெண்பா

1. சீராம க்ருஷ்ணசங்கத் தெய்வப்பூம் பொய்கையிலே
ஏரார் திருவருளாம் இன்னீரில் – பாராய்காண்
செய்ய துறவிகளாம் செங்கமலம் பூக்குமதில்
வைகும் பரமஹம்சம் வந்து.

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் ஒரு தெய்வப்பூம் பொய்கை. அதிலே திருவருளாகிய இனிய நீர் நிறைந்திருக்கும். துறவிகளாகிய செங்கமலங்கள் அதில் மலரும். அம் மலர்களிலே குருதேவராகிய பரமஹம்சம் தங்கியிருக்கும்.

ஹம்சம் – அன்னம்.

2. உலகமொரு வீடே உலகமக்கள் அங்கே
குலவிவாழ் ஓர்குடும்ப மாவர் – கலகமேன்
தத்தம் மொழிசமயம் சார்ந்து செயும்பணியில்
ஒற்றுமைகண் டின்பமடை வோம்.

3. ஈதே இராமக்ருஷ்ண சங்கம் இயம்புநெறி
ஏதோ புதியதென எண்ணற்க – வேதாதி
காலமுதல் முன்னோர்கை கண்டசக வாழ்வதிலே
ஞாலமெலாம் வாழ்க நலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சீரார் இராமக்ருஷ்ண சங்கம் கிழக்கிலங்கை
வாரா திருந்தால்நம் வாழ்வெங்கே - பாராண்ட
சைவ சமூகமெங்கே பிற்சந் ததியிங்கே
உய்யும் வழியெங்கே ஓது.

5. ஈழ வளநாட்டின் இனியதபோ வனம்போல்
ஆழ நெடுங்கடலின் அண்மையிலே - சூழவர
நல்லோர்வாழ் கல்லடியுப் போடைக் குருகுலம்நம்
பிள்ளைகளின் வாழ்வெனவே பேசு.

6. சமய சுயாதீனம் சமரசநல் வாழ்வு
நமைநாமே யாளும்நம் பிக்கை - சமனொளிபோல்
இங்கு நாம்நிற்கும் எழுப்பம் இராமக்கிருஷ்ண
சங்கக் குருகுலத்தின் சார்பு.

7. தேசியச் செல்வமாம் சீரார் குழந்தைகளை
ஆசீர் வதித்துநிதம் ஆளாக்கி - தேசாரும்
நாரா யணன்வடிவில் நாம்காண வைத்ததே
தேராய் குருகுலத்தின் சீர்.

8. இளஞ்சந் ததியைவளர்த் திந்நாட் டியற்கை
வளம்பயன்செய் கல்வி வழங்கி - உளநிறைவு
பெற்றமைந்து வாழ்ந்திடவே பேணும் குருகுலத்தில்
உற்றினிது வாழ்வீர் உயர்ந்து.

9. இரும்பு நிகர்தசையும் எஃகனைய நெஞ்சும்
திருந்து குணநடையும் சேர்க்கும் - பெருந்திருவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டும் குருகுலந்தான் கூடிவாழ் மாணவர்க்கு
நாட்டுப்பற் றும்தருமே நன்கு.

10. ஏழைச் சிறுவர்பலர் இங்கே குருகுலத்தில்
வாழப் பெறுஞ்சிறந்த வாய்ப்பினால் - சூழுமதிப்
பேரா சிரியராய்ப் பேனா மனிதராய்
ஆராய்ச்சி யாளருமா னார்.

11. கண்போற் குழந்தைகளைக் கருணை நீராட்டி
பண்பாள ராக்கிப் பயன்செய்தே - அன்பால்
ஒருகுலம்போல் வாழ உருவாக்கும் ஈதே
குருகுலத்தின் நல்லகுறிக் கோள்.

12. குருகுலத்துப் பொன்விழாக் கொண்டாடும் நல்ல
தருணத்தில் நன்றிசமர்ப் பித்தே - குருகுலத்தின்
தேவைக் குழைத்த தியாகிகளை அன்பர்களைப்
பாவிப்போம் அன்பாற் பணிந்து.

13. மூலத்தா னத்தமர்ந்த மூர்த்திபோல் நல்லருளைப்
பாலித்திருப்பார் பரம ஹம்சர் - ஞானமெலாம்
உற்சவ மூர்த்திகள்போல் ஊரூராய்ச் சீடர்கள்போய்
சுற்றிவருவார் தொண்டு பூண்டு.

14. தாய்மைக் கொருதெய்வம் தத்துவஞா னம்தெளிந்த
வாய்மைக் கொருதெய்வம் மாசில்மனத் - தூய்மைக்கும்
சேவைக்கும் தண்ணளிக்கும் செம்மைக்கும் சாரதா
தேவிக்கு யார்நிகர்வார் செப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இராம பிரானுக் கிலக்குவன்போற் கண்ண
பிரானுக் கருச்சுனன்போற் பேசில் - இராம
கிருஷ்ண பரமஹம்சர் கேண்மைக் குரியார்
அருள்விவே கானந்த ராம்.

16. துணிவுக்கும் நேர்மைக்கும் தூய்மைக்கும் அன்புப்
பணிவுக்கும் தியாகப் பணிக்கும் - தணியாத
ஆன்மிக சக்திக்கும் அண்ணல்விவே கானந்த
சாமியே இங்கெமக்குச் சார்பு.

17. அஞ்சாமை நேர்மை அகந்தூய்மை நம்மகத்தே
எஞ்சாமல் நிற்க இணைத்து வைத்தார் - தந்தை
அவிநா சானந்த அடிகளார் நாம்செய்
தவமாக வந்த புனிதர்.

18. சைவமெங்கே தெய்வத் தமிழெங்கே நீறெங்கே
மெய்தேர்வே தாந்த விசாரமெங்கே - தெய்வம்போல்
வந்து கிழக்கிலங்கை மண்ணில் விபுலாநந்தர்
இங்குபிற வாமலிருந் தால்.

19. சேவை வடிவம் தியாகத்தின் சின்னம்நம்
ஆவி நிகர்நடரா சானந்தர் - பாவித்தே
அன்னாரை யேனை அருட்துறவோர் தம்மையிந்தப்
பொன்னாளில் அஞ்சலிப்போம் போந்து.

20. எல்லாச் சுமையும் குருதேவர் இன்னருளால்
சொல்லாமல் தாங்கிச் சுமந்தெம்மை - எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கண்ணால் நோக்கும்பிரே மாத்மானந் தாஜீ
இருக்கநமக் கென்னகுறை யிங்கு.

21. ஜீவனா னந்தர்ஸ்ரீ இராமக்ருஷ் ணபக்தி
பாவனா சக்திப் பயனாலே - நாவினால்
பேசா ரதிகம் பெருங்கரும வீரர்நம்
பூசா பலனெனவே போற்று.

22. எங்கிருந்தா லென்னமக்கள் எம்மதமா னாலென்ன
எங்கும் எவர்க்குமொரே ஈசனே - நன்கிதனை
சாதனையிற் காட்டும் ஸ்ரீஇராமக் கிருஷ்ணசங்க
போதனையில் வாழ்க புவி.

## அழகு

(புலவர்மணியின் மகன் சாந்தலிங்கம் இயற்கையெய்தியபோது அவரது உள்ளத்துதித்த சிந்தனைகள் இவை).

1. அன்பு கொண்டொரு ரோசா மலர்க்கொடி
அருமை என்மகன் சாந்தன் வளர்த்தனன்
முன்பு வாசலில் நின்று தளிர்த்தது
முகிழரும்பி நெகிழ்க் கொரு காலையில்
பொன் புனைந்த அவன்முகம் போலொரு
பூமலர்ந்த தப் பூவி னழகிலே
இன்பு கொண்டதி லீடுபட் டிம்மலர்
எழிலுக் கெம்மலர் தானிணையோ வென்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாலை வந்தவன் பார்க்கையி லம்மலர்
வாடி முன்பு வயங்கு மழகும்போய்க்
காலை வண்டிசை பாடு மலர்க்கொடி
கவலை மூழ்கிக் குழைவதுங் கண்டனன்;
காலை பூத்துப்பின் மாலையிலே யெழில்
கருகி வாடும் மலரினைப் போலவே
ஞால மீதில் மனிதர்தம் வாழ்வென
நவிலு மிம்மலர் காணெனச் செப்பினேன்.

3. கனியு மன்போடு தாய்முகம் நோக்கியே
காட்டி யாங்கொரு மாங்கனி தூங்குதல்
இனிய பொன்னிற மாங்கனி யீங்கிதன்
எழிலில் என்மனம் சென்றதம்மா வென்றான்,
குனியும் கொம்பை வளைத்தன்னை மாங்கனி
கொடுப்ப வுண்டு கடும்புளி யென்றனன்;
மனிதர் தம்முளிம் மாங்கனி போற்புற
வடிவில் வாழ்வர் பலர்மகனே என்றேன்.

4. கனியி லுள்ள அழகும் வெறுத்தனன்
காட்டினே னொரு செந்தமிழ்ப் பாட்டினை;
தனியிருந் ததன் வாடா அழகினைச்
சற்றே நோக்கென் றொருவழி சாற்றினேன்;
இனிய பைந்தமிழ்ப் பாட்டி னழகிலே
இதய மொன்றுபட் டின்பமுற் றானவன்;
மனித வாழ்விற் புலவ னமைத்தருள்
வண்மை சேரழ குண்மை யழகென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மழலை பேசு மழகு மறைந்திடும்;
வளரும் பிள்ளை யழகு மறைந்திடும்;
பழகுங் காளை யழகு மறைந்திடும்
பருவக் கன்னி யழகும் மறைந்திடும்;
சுழலுங் காலச் சுழியி லகப்படாச்
சுவைகொள் இன்பக் கவியழ கென்றுமே
அழிவி லாத அழகெனு முண்மையை
அறிதல் யார்க்கு மழகென லாகுமே.

6. வண்ணச் சித்திர நுட்ப வழகினை
வயங்கு சிற்ப அமைதி யழகினைக்
கண்ணைத் தன்வச மாக்கி யுளத்தினைக்
களிப்பி லாழ்த்து மியற்கை யழகினைப்
பெண்மைத் தன்மை கனிந்திடு மாதர்தம்
பேரழ கினை நோக்கிடும் போதெலாம்
உண்மைத் தெய்வ ஒளியினைக் காண்பவர்
உலகம் யாவும் அழகெனக் காண்பரே.

## இன்பம்

1. அழகி லேயின்ப மாகு மழகுதான்
அகத்திலே பொலி வாகுங் குணங்கண்டீர்
பழகு வார்க்கன்றி யீது வெறும்வெளிப்
பகட்டி லேவரும் பான்மைய தன்றுகாண்
முழுது மன்பு வடிவா மழகினில்
மூழ்கிக் கண்ட அனுபவ நுண்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுது பாட்டி லுரையிற் புலப்பட
எடுத் துரைக்க வொண்ணாத இனிமையே.

2. தண்மை சேர்ந்த அகத்தினில் மெய்யன்பு
தான் தளிர்க்கும்; அதன்மேல் முகிழ்த்தெழும்
உண்மை நல்லற மாகு மரும்புயர்
ஊக்க மென்னு மொளிகொண் டலருமால்;
பெண்மை யென்னு மிளந்தென்ற லாங்கதிற்
பெருகு மின்ப மணத்தினை வாரியே
வண்மை செய்தென்றும் பேணி வளர்த்தலால்
வையம் யாவும் தழைக்கும்நல் வாழ்விலே.

## இன்பத்துள் இன்பம்

3. உள்ள மென்னுங் குரவன்சொல் லாணையில்
ஒன்று பட்டைம் பொறியெனு மாணவர்
கள்ள மின்றி யமைந்து பணிசெய்தாற்
காணும் புத்தி யுறுதி பெறுங்கண்டீர்;
தள்ள ரும்புத்தி தான்திடம் பெற்றிடிற்
சாரு மான்ம விடுதலை; யந்நிலை
தெள்ளு நன்மனச் சாந்தி நிறைவிலே
சேரும் பேரின்ப மின்பத்து ளின்பமே.

## இன்பம் எங்கே?

4. மாட மாளிகை மாமனை நன்மக்கள்
மாசில் சுற்றம் மனமொத்த நண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடு கல்விசீர் செல்வ மதிகாரம்
தேக நற்சுகம் யாவையும் சேர்ந்துமென்
நாடு முற்றும் வறுமை சிறுமையும்
நலியுந் தீப்பிணி யுங்குடி கொண்டிடில்
கூடு மோநமக் கின்பம் நம்சகோதரர்
குறைகள் தீர்ந்திடி லின்பம் குலவுமே.

## யார்க்கு எது இன்பம்?

5. நாட்டு மக்கள் நலம்பெறக் காணுதல்
ஞாலங் காவல் புரிவோர் தமக்கின்பம்;
கேட்டி லேழைகள் தந்துயர் தாங்குதல்
கேடில் செல்வர் தமக்கின்பம்; இன்சுவைப்
பாட்டில் வல்ல புலவர்பண் பாட்டிலே
பழகிப் போது கழிதல் நமக்கின்பம்;
வீட்டில் யாவுந்தே சீய மயமென
விளங்கக் காண்டலெம் மன்னைகோ ரின்பமே.

6. பொருந்து சூழ்நிலைக் கேற்ற கலைத்திறம்
புகட்டல் மாணவர்க் கின்பம்; பொருள்நிலை
திருந்தி வாழ்விற் செழித்தல் சுதந்திர
தேச மக்களுக் கின்பம்; தொழிலுக்காய்
வருந்தி நாளும் பிறரைப்பின் சென்றேங்கி
வாழ்ந்தி டாமைநம் வாலிபர்க் கின்பமாம்
அருந்து தன்னுண வுக்குத்தன் கையேயா
தார மாக்கொளல் தேசத்துக் கின்பமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எப்போது இன்பம்?

7. மக்கள் தம்ஜன நாயக நல்லற
வாழ்வி லேநிலை நின்றால் வருமின்பம்;
புக்க சாதி மதமொழி வேற்றுமை
புவியில் நீங்கிடும் போது நமக்கின்பம்;
மிக்க வீண்செல வின்றிக்கைக் கூலியும்
விட்டு நல்வழி மேவிலுண் டாமின்பம்;
ஒக்க யாவரு மின்புற்று வாழநல்
உலகம் வாழ்ந்திடும்; ஈதுண்மை இன்பமே.

## மதுவினை யொழிப்போம்

1. மதுவினை யொழிப்போம் - செல்வ
வாழ்வினிற் செழிப்போம்
புதுவுல கமைப்போம் - இன்பம்
பொலிந்திட வுழைப்போம்.

2. மதி மயக்கிடுமே - மதுவுடல்
வலிமைபோக் கிடுமே
கதி கெடுத்திடுமே - அகாலத்திற்
காலனைக்காட் டிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒழுக்கம் போய்விடுமே - தீய
பழக்க மாய்விடுமே
வழக்கும் வாதுகளும் - மதுவின்
வழக்க மாகுமையா!

4. கொலைகளவு கொள்ளை - பகையின்றிக்
கோரச் செயல்கள்செய்தல்
நிலை தவறிடுதல் - மதுவின்
நீசக் குணங்களப்பா!

5. சொந்த மனைவிமக்கள் - வெறுத்திடத்
துன்பம் பலதருமே
பந்து சனங்களையும் - கொடிய
பழிக்குள் ளாக்கிடுமே.

6. அளவில் நிற்பதில்லை - மதுக்குடி
ஆளைக் குடித்திடுமே
இலவசக் குடியும் - பெருங்குடிக்
கிழுக்கும் மார்க்கமையா!

7. மருந்துக்கு மருந்தோம் - மதுவை
விருந்துக்கும் விரும்போம்
அருந்தி மாதருடன் - நடனம்
ஆடியினி வருந்தோம்.

8. முட்டி மதுவினுக்கும் - 'வடித்த
புட்டி மதுவினுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிப் பணத்தையெல்லாம் - அழித்துக்
கெட்ட தினிப்போதும்.

9. மானம் கெடுக்குமது - தரும்வரு
மானமும் வேண்டோம்யாம்
ஈனம்தரு மதுவால் - உழைப்பவர்
ஏழையினு மிழிந்தோர்.

10. வீட்டை யுயர்த்திடுவோம் - நமதுதாய்
நாட்டை யுயர்த்திடுவோம்
கூட்டுப் பொறுப்புணர்ச்சி - கொண்டுமதுக்
குடியொழித் திடுவோம்.

## சிந்தனைத் தரு

1. கற்பனை நகரை வளைந்து முன்வாயில்
காவலாம் சிந்தனைத் தருவை
அற்பமும் இரங்கான் அடியற வெட்டி
அடற்பகை அகநகர் புகுந்தான்
பொற்பமை கவிதை அரசியைப் பிடித்தே
புன்மைசேர் இருட்சிறை யிட்டான்
கற்பக மனைய கலைநிதி கவர்ந்தான்
கவியுணர் வினைமக்கள் மறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கற்பனை நகரும் சிந்தனைத் தருவும்
காலத்தாற் பழையன கயிலை
வெற்பனும் பொதிய வெற்பனும் சங்கப்
புலவரும் வேந்தரும் பிறரும்
அற்பகல் பேணிக் காத்தன அகிலம்
அனைத்துக்கும் பொதுவென ஓங்கி
நிற்பன அவற்றை யழித்திட நினைக்கும்
நெஞ்சையெங் ஙனமிறை படைத்தான்.

3. தவமென உயர்ந்த சிந்தனைத் தருவின்
அருமையைச் சற்றுமெண் ணாமல்
புவிமிசை வெள்ளைக் கோட்டிவெட் டினுமவர்
புல்லறி வென்னும்கோ டரிக்குச்
சவியுற ஆழ்ந்த ஆணிவேர் தப்பித்
தாய்மரம் உயிர்பிழைத் திங்கே
நவயுகம் தோன்ற நறுங்கிளை யொன்று
நலம்பெறமுளைத் தெழுந் ததுவே.

4. உள்ளம்போல் எழுந்த முளைவளர்ந் தோங்கி
ஒன்பது கிளைகொண்டு பரந்து
அள்ளூறு மழகுக் கனிபல தூக்க
அறிவுசேர் கவிஞரா மினிய
புள்ளின முணர்ச்சி வேகமா மிரண்டு
பொற்சிற கடித்தொன்றாய்ச் சூழ்ந்து
வள்ளல்போல் நின்ற சிந்தனைத் தருவின்
கனிகள்கூட் டுண்டன மனம்போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைப் பொருள்கண்டு சாந்தியில் வாழ்வோம்

1. திருவருளாற் பெற்றுளநம் தேகமெனும் கூடத்தே
   சிந்தை யென்னும்
   உரனுடைய தகழிதனில் உருகுமன்பாம் நெய்சொரிந்து
   புலன்க ளென்னும்
   விரவுமைந்து திரியிட்டு விவேகமெனும் விளக்கேற்றி
   விளங்கு முண்மைப்
   பொருள்கண்டு திருத்தீபா வளிநாளில் மனச்சாந்தி
   பொலிந்து வாழ்வோம்.

2. எண்ணெய்வைத்து முழுகுதலால் இத்தீபா வளிநாளில்
   எழிலார் தூய
   வண்ண வண்ணப் புதுப்புடவை யுடுத்தலால்
   வகை வகையாய்ச்
   சமைத்தே நாவில்
   உண்ணவுண்ணத் தெவிட்டாத உணவுபல உண்பதனால்
   உயர்வுண் டோநம்
   எண்ணமதி லிருள்நீங்கி ஒளியோங்கி மறுமலர்ச்சி
   எய்திடா தேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம்

ஒழுக்கம் தெய்வ மாகும்
உயர்குல மாகும் தூய
ஒழுக்கமே அறமு மாகும்
உயர்ந்தபே ரரணு மாகும்
ஒழுக்கமே மெய்காப் பாள
னாகுமிங் குலகில் யார்க்கும்
ஒழுக்கமே அழகு மாகும்
உத்தமப் பரிசும் அஃதே

## திருமணச் சிறப்பு

1. சக்தியும் சிவமும் போலும்
தமிழுடன் இனிமை போலும்
உற்றிடும் இதயத் துள்ளே
ஒன்றுமீ ரிதழ்கள் போலும்
வைத்திடு மனமொன் றாகி
மணமக்கள் இனிது வாழ்க
நித்தமும் இனிய வாழ்வில்
நிறைகநல் லின்ப மெல்லாம்.

2. இன்பமார் மணவை போகம்
இங்கித சுகானு போகம்
அன்பிலே கனிந்த பாகம்
ஆண்டவ னருளின் யோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பமைந் துளசி நேகம்
முறைநிறை வாமித் தேகம்
என்பதோர்ந் திடின்வி வாகம்
இல்லற மதுநல் யாகம்.

3. பொற்பிலே பொருந்தும் நேசம்
பொலியுமே மனவிஸ் வாசம்
கற்பிலே மனையின் வாசம்
கமழுமே யருள்வி லாசம்
அற்பமோ மணச்ச மாசம்
அதன்நுட்பம் அறிந்தால் தேசம்
நிற்குமோ மனவித் யாசம்
நிலைக்குமே நிதம்சந் தோசம்.

## காதல் மணம்

அறிவுபொறை ஓர்ப்புகடைப் பிடியென் றான்றோர்
அறைந்திடுநாற் குணமுநெறி சிறிது நீங்க
நிறைநாண மடமச்சம் பயிர்ப்பென் றோதும்
நீர்மைகளும் நிலைகடப்பச் சிறிது நேரம்
உறுமாசி லாதஅன்பில் ஈடு பட்டே
ஒருவர்மனம் ஒருவர்வச மாகி நிற்பப்
பெறுமாசி லாதமணப் பேறு கண்டீர்
பெருமகிழ்ச்சி பொலிந்தென்றும் இனிது வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமரச ஞானம்

சார்ந்து வியட்டியெலாம் தம்முள் இணைந்தொன்றாய்
வாய்ந்த சமட்டி வழிபாட்டில் - தோய்ந்துள்ளம்
தானே யதுவாய்த் தனைமறந்த நிட்டையிலே
நானே தெனதேது நாடு.

## பெரும்பான்மை வகுப்பாட்சியும் மதச்சார்பும்

1. பல்லினமும் பல்மொழியும் பல்மதமும் வாழ்நாட்டில்
வல்ல பெரும்பான்மை வகுப்பாட்சி - பொல்லாது
மற்றதுபோ தாமல் மதச்சார்பும் கூடுமேல்
மற்றினங்கட் கேதுசம வாழ்வு.

2. பேதாய் வகுப்புப் பெரும்பான்மை ஆட்சியினை
ஏதோ சனநா யகமென்பாய் - மாதே
ஒருவகுப்புக் கேனை வகுப்பூ ழியம்செய்
கருமமன்றி யேதுரிமை காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக் காதலும் உண்மைக் காதலும்

1. அகத்தினும் காதல் புறத்தினும் காதல்
அளவிலாக் காதல்காண் உலகம்
முகத்தினிற் கண்ணில் மூக்கினில் வாயில்
முகிழ்த்திடும் காதலின் இன்ப
சுகத்தினி லுள்ளம் தோய்ந்துமென் பயன்காண்
சொல்லிடில் உடலுற வதனை
இகத்தினிற் கடந்த கருணைசேர் உள்ளக்
காதலே இறந்திடாக் காதல்.

2. பணத்தினாற் காதல் பதவியாற் காதல்
பல்கழன் றிடுகிழட் டெருது
மணத்திலே வைக்கோல் முகந்திடல் போல
வயோதிகன் இளம்பெண்மேற் காதல்
கணத்திற்கண் மாறும் காமுகர் காதல்
கைபுனை செய்கையாற் காதல்
பிணத்திலே மாலை போலிவை இழிவாம்
பிழைபடும் காதலால் மோதல்.

3. கன்னமும் வறண்டு கூந்தலின் கரிய
கற்றையும் நரைத்துமுத் தனைய
புன்னகைப் பல்லும் கழன்றுபோய்ப் பொன்போல்
பொலியுமெய் யழகுமின் னிடையும்
அன்னமென் னடையும் ஓய்ந்திடு மவதி
அணுகினும் அகத்தினில் அன்பும்
தன்னிக ரில்லாக் கருணையும் தழைத்த
தனிப்பெருங் காதலே காதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையும் ஈசன் கோயில்

அன்பினாற் சாந்தி யுண்டாம்
சாந்தியால் இன்ப மாகும்
இன்பமே தெய்வம் நம்முள்
தெய்வமிங் கிருப்ப தானால்
என்குறை நமக்குண் டெல்லாம்
அவனருட் கொடையே நாம்வாழ்
பொன்பொலி மனையும் ஈசன்
புனிதமார் கோயி லாமே.

## அகந்தையே நீ இறங்கி வா

அகந்தையே எங்கு ளாயெவ்
வளவும் நீ உயர்ந்து நிற்பாய்
அகந்தையே அறத்தி னாணைக்
கடக்கம்நீ இறங்கி வாராய்
அகந்தையே மேலோர் கீழோ
ராவதும் கீழோர் மேலாய்
அகந்தையே ஆட்சி பீடத்
தமர்வதும் அறியா யோநீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசை வேண்டாம்

போர்படைத்த ஊதியத்தால் போர்க்கருவி
வல்லமையால் போரே காணா
ஊர்படைத்த மக்கள்சிந்தும் உதிரத்தால்
உண்டாய அரசை ஓம்பிப்
பார்படைத்த செல்வமெல்லாம் படைத்துவிட்டோம்
பாரின் முதல் தலைவனென்ற
பேர்படைப்போம் இனியென்னும் பேராசை
நாடுகளைப் பின்செல்லேம் யாம்.

## இலங்கைப் புகையிரதப் பெருவிபத்து – 1923

### சில பாக்கள்

#### காப்பு

பொன்னிலங்கை மன்னர் புகையிரதம் போயுடைந்து
மன்னுயிர்கள் மாண்டு மடிந்தகதை – சொன்னிகழ்ச்சி
மங்காத கீர்த்தனமாய் மண்ணுலகிற் பாடுவன்மா
தங்க வினாயகன்தாள் சார்ந்து.

சீரிலங்கு துந்துபிதைத் தேதியொரு பன்னிரண்டிற்
போரிலங்கை மன்னர் புகையிரதம் – சீரியகாங்
கேயன் துறைநீங்கி யேகுதற்கு நின்றதே
சாயுந் தரமறிந்து தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லொடு வில்லும்வேறாய்ச் சேர்ந்திடு வெளிச்சம்வேறாய்
நல்லபெட் டிகளநேகம் நாசமாய்ப் போனபோது
அல்லிருள் மழைக்காலத்தில் அந்தகர் போலெல்லாரும்
சொல்லலாம் வகையொன்றின்றித் துன்புறுகின்றோ மிங்கே.

நாட்டை யிழந்து நல்லசுற்றந் தானிழந்து
வீட்டை யிழந்து மிகுபொருளைத் தானிழந்து
காட்டை யிழந்த குலப்பறவை யானவெந்தன்
பாட்டை யறிந்து கண்ணாற் பாரும்பராபரமே.

## மண்டூர்ப் பதிகத்திற்கு மயில்வாகனனார் (விபுலானந்த அடிகள்) அளித்த சிறப்புப்பாயிரம்

11 மண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதி யீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம்மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையென்னும் கலைவல் லோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்முனையில் 1943இல் நடைபெற்ற விளைவுவிழாக் காட்சியின் போது புலவர்மணியால் பாடப்பட்டது

## புதுமைக் கமக்காரன்

*பல்லவி*

பூமி திருத்திப்பயி ரேற்றிடுவோம் நெற்
பொலிகள் பொலிகவென வாழ்த்திடுவோம் - பூமி

*கண்ணிகள்*

1. நாமினிப் பஞ்சமொரு சிறிது - மஞ்சோம்
நாழியரிசிக்குப் போய்ப் பிறரைக் கெஞ்சோம்
சேம முடனே வாழுந் திறங்கள் கண்டோம்
செல்வங்கள் பூமிதேவி யருளக் கொண்டோம்.

2. உலகுக் குயிரே எங்கள் உழவு தொழில்
ஓங்கும் புது முறையில் அதை வளர்ப்போம்
நிலவுக் குவியல் போன்ற நெற் பொலிகள்
நீண்ட மலைகளெனக் குவித்திடுவோம்.

3. தூர்ந்த பெருங் குளங்கள் திருத்திடுவோம்
தொடுத்துநீர் வாய்க்கால்கள் பொருத்திடுவோம்
பாய்ந்து வரும் நதிநீர் மறித்திடுவோம்
பாங்காய் நெல் இருபோகம் விதைத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காடு கெடுத்து நாடு புதுக்கிடுவோம்
காணியிற் குடியேறி வசித்திடுவோம்
பாடு படுத்தும் சோற்றுப் பஞ்சமெல்லாம்
பறந்த தென்றே வெற்றி பாடிடுவோம்.

5. திருத்த வயல் நிலங்கள் சமன்படுப்போம்
சீராய் வரம்புயர்த்திச் செப்பனிடுவோம்
பொருந்து புதுமுறையிற் கலப்பை கொள்வோம்
புல்லை அறவுழுது புழுதி செய்வோம்.

6. கூட்டுப் பயளை இலை குழைப்பயளை
கொள்ளும் செயற்கை யெனும் உரப்பயளை
மாட்டுப் பயளை ஒட்டுத் தாட்பயளை
வயலுக்குச் சொரிந்துநாம் வளமிடுவோம்.

7. குலத்திற் சிறக்கும் ஏக கோத்திர நெல்
கோடி பலன்தரும் எம்மாத்திரம் சொல்
நிலத்திற் பயிரிடுவோம் இந்த நெல்லை
கலப்பு நெல்லால் இலாபம் கதிப்பதில்லை
•

8. பல்லுக் கலப்பை கொண்டு பயிருழுவோம்
பதஞ்செய்த்து கிண்டிமண்ணை நெகிழ்த்திடுவோம்
புல்லைக் களைந்து பூச்சி புழுத்தொலைப்போம்
பொலிந்கொன்று கோடிவிளை புதுமை செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தந்தைபோல் வயலைநாம் காத்திடுவோம்
தாய்போலப் பயிரைநாம் வளர்த்திடுவோம்
மைந்தர்போற் பயிருக்குத் தொண்டுபுரிவோம்
வளர்ந்து விளையத் தெய்வம் வணங்கிடுவோம்.

10. வானந் தொடுமலைபோற் சூடுகள்வைப்போம்
வண்ணப் படங்கில் தள்ளிப் பாடித் துவைப்போம்
தானந் தருமஞ் செய்தே உண்டு களிப்போம்
தங்கநெல் பட்டடையிற் கொண்டு சேமிப்போம்.

11. மாற்றுப் பயிர்கள் செய்யும் வகை தெரிவோம்
வளத்தைப் பெருக்கும்புது முறைபுரிவோம்
சோற்றுக்குப் பிறநாட்டை யிரந்து நில்லோம்
சோம்புக்கும் வறுமைக்கும் அடிமையல்லோம்.

12. வயல்களைத் துண்டுசெய்யும் வழக்கெறிவோம்
வளர்செலவைக் குறைக்கும் மார்க்கமறிவோம்
அயலவர் உயர்ச்சியில் அகம் மகிழ்வோம்
ஐக்கிய வாழ்வுதனில் நிதம் திகழ்வோம்.

13. அரசினர் மாதிரிப் பண்ணைகள் கண்டோம்.
அங்கே புதுமுறையின் உண்மைகள் கண்டோம்
கரமதிற் பேனைக்கொண்டு பிறரை மண்டோம்.
கல்விக்கும் கலப்பைக்கும் தொடர்பு கண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இலங்கை முழுவதுக்கும் உணவளிப்போம்
ஏற்றி அயல்நாட்டவர் பசிதணிப்போம்
இலங்கு தங்கக் குவியல் கொண்டுவருவோம்
எங்கள் பழைய நிலை இன்று காண்போம்.

15. செந்நெல் விளைக தேசம் மலிந்திடுக
திங்கள் மும்மாரி பொங்கி பொழிந்திடுக
பொன்னும் பொலிக மக்கள் நீடுவாழ்க
புதுமைக் கமக்காரற்கு ஜே! ஜே!! ஜே!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லை மண்டூர்ப் பதிகம்

1

வானுந்தேடி வருந் தில்லைமண்டூர்

கானும் பூம்புனற் பொய்கையுஞ் சூழ்ந்தொழில்
கனிந்து செந்நெற் கழனியின் செல்வமும்
தேனும் பாலும் மலிந்து தமிழ்மணம்
சிவமணங் கமழ் தென்றல் உலாய்வர
மீனுந் தீந்தமிழ் ஏழிசை பாடிட
விருந்து நல்லறம் மாதர்க் கணிசெய
வானுந் தேடி வருந்திரு வார்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

2

வேடன் கண்ட திருக்கைவேல்

முல்லை யோங்குபைங் கானந் திருவருள்
முந்து செல்ல விரைந்துமெய் யன்பிற்கோர்
எல்லை யாகிய ஏழைநல் வேட்டுவன்
ஏழேழ் பிறவியும் தீர்ந்தொளி யுட்புகத்
தில்லை நீழலின் கீழருள் செய்துதன்
திருக்கை வேல்கொடுத் தாண்ட முருகனை
மல்லற் கோங்கொடு வில்வங் கமழ்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## அன்புருவான முருகப்பிரான்

சாதி பேதங் கடந்த அனாதியைச்
சமயவாத மொழிந்தகல் சோதியை
ஓதும் வாசக மோய்ந்த உணர்வினை
உண்மை மோனத்தின் உச்சி நிலையினை
வேத போதகர் காணா வியப்பினை
மெய்ம்மை யன்புரு வான முருகனை
வாதும் சூதும் மறந்தவர்க் கருள்தில்லை
மண்டூ ரானை வணங்கியுந் தேனே

4

## முருகப் பிரானின் திருவடித் தொண்டர்கள்

உ— எள்ளு மன்புடன் ஐம்புலன் போலைந்தூர்
உவந்து நாளு மடித்தொண்டு பூண்டிட
வள்ளம் போல்வரும் அன்பர் குழாந்தொழ
வேண்டு நல்வர் மீந்தருள் மூர்த்தியைக்
கள்ள மில்மனத் தன்பு கனிந்துசெய்
கற்பக நயினார் பூசை யேற்றருள்
வள்ளலைத் தமிழ் வாணர்கள் வாழ்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

துன்பத்தில் முன்னிற்கும் திருமுருகன்

தூய நல்லற மாகிநின் றானைத்
தோன்ற றறப்பய னாய்விளைந் தானை
ஆய பல்பொரு ளாய்வளர்ந் தானை
அப்பொருட் கொடை யாய்ச்சிறந் தானை
நேய மாரின்ப மாய்நிறைந் தானை
நேருந் துன்பத்தில் முன்னே நின்றானை
மாய வல்வினை தீர்த்தருள் புரிதில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே

6

அன்பருள்ளத் தமர்ந்த முருகன்

சரியை யோடு கிரியையும் யோகமும்
தந்து ஞானமுந் தந்துல கோர்க்கெலாம்
உரிமை யாயவர் உள்ளத் துணர்வுபோல்
உணர நின்ற ஒருவனை யன்பிலார்க்(கு)
அரிய னாய்மறைந் தானை யெளியனாய்
அன்ப ருள்ளத் தமர்ந்த முருகனை
வரிகொள் பூங்குயில் கீதை பயில்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

### இங்குமோர் கண்ணப்பன்

உருகு மன்போடு தில்லையின் கீழ்வேடன்
இட்ட ஊனமிர் தாயுவந் தானை
வரிவில் லம்புகைக் கொண்டவன் முன்செல
வயங்கு புட்பவி மானம் வலம்வரப்
பெருகு மன்பினில் மெய்ம்மறந் தாலாத்திப்
பெண்கள் சோர்நிலை கண்டருள் வள்ளலை
மருவி வள்ளிதெய் வானையர் வாழ்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

## 8

### கல்மனமுங் கனியச்செய்யும் முருகன்

சொல்லு மாயதன் பொருளுமா னானைத்
தோன்றி யப்பொருள் துலங்கச் செய் வானை
அல்லல் யாவு மறுத்தருள் வானை
அன்பி லேனென் மனமெனும் வன்கருங்
கல்லும் பாகெனக் கனியச் செய்தானைக்
கருணை யாறு முகப்பெரு மானை
வல்ல சூர்மயில் ஏறி வருந்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9

### மறுமையும் இம்மையும் வாழ்வளிக்கும் முருகன்

வறுமை யிற்செம்மை வைத்தருள் வானை
வளர்திரு வாளர்க்குள் வணக்கம்வைத் தானை
நிறைவு மாங்கவர் நெஞ்சுள்வைத் தானை
நெஞ்ச மேழையர்க் கிரங்கவைத் தானை
பொறி புலன்மனம் புனிதம்வைத் தானைப்
புந்தி நற்குணம் பொருந்தவைத் தானை
மறுமை யோடிம்மை வாழ்வளித் தருள்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

## 10

### நிலையில்லாத உலகில் நிலையான சாந்தி

நிலையி லாத உலகினி லென்னை
நிலையி லாஉடல் தன்னி லிருத்தி
அலகில் கல்வியுஞ் செல்வமு மருளி
அறமு மின்பமு மாக்கிவைத் தானைக்
கலகம் போய்மனச் சாந்தியென் வாழ்விற்
காணும் பேறு மளித்த பிரானை
மலர்கம லப்பொய்கை யல்லியும் வாழ்தில்லை
மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

மண்டூரி லுறை முருகன் திருவருளால்
வந்தவெனக் குரியவொரு காலந்தேர்ந்து
மயலறுத்தே உயர்ந்த தமிழ் இலக்கணமும்
இலக்கியமும் உரை நடையும் ஒளிர வைத்தோன்

பண்டிதருட் பாவலனாய்ப் பல கலையும்
திருவருளும் உள நிறைவும் பயின்றுதமிழ்ப்
பண்பாட்டிற் புலவர்மணி பெரியதம்பிப்
பிள்ளை எனப் பலர் புகழு மொருவனாகிக்
கொண்டாடும் தகைமையினோன் மட்டுநகர்த்
தமிழ் விளக்காய் ஈழமெங்கும் ஒளிரும்சோதி
தமிழ் மணமும் சிவ மணமும் கமழ் மண்டூர்த்
தப் புதல்வன் கீதை வெண்பா நிதியமீந்தோன்

பண்தோயும் செந்தமிழ்வேல் முருகனுக்குப்
பதிகமென அருள் குழைந்த கவிபடைத்தான்
பதித்ததனை வெளியிடற்கு யானிழைத்த
தவப்பேற்றை ஒரு நாவாற் பகரலாமோ!

பண்டிதர் வித்துவான்
வி. சி. கந்தையா B.O.L.

[illegible]
மட்டக்களப்பு.

## உயர்திரு. விபுலாநந்த அடிகளார்க்கு மட்டுநகர்த் தமிழ் மன்றத்தினர் படித்து வழங்கிய உபசரணைப் பத்திரம்

*(மட்டுநகர், பண்டிதர் திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இயற்றியது)*

## நிலைமண்டல ஆசிரியப்பா

முத்தொளிர் திரைக்கரை முந்நீர் நீலச்
சித்திரப் படாமுடீஇத் திருமா வலிந்தி
உத்தரீ யந்தரித் துலகெலாம் கைதொழ
மணியணி பலவும் வயங்கிட வணிந்து
சோலைக் கூந்தலிற் கதிர்மதி சூடிச்
சிவனொளி பாதச் சிறுநறு நுதலிற்
திருவருட் திலகம் தீட்டிப் பொருவனும்
எழில்நலங் கனிந்த இலங்கைமா தேவியின்
உயர்தவப் பேறாய் உதித்தீங் கெமக்கெம்
அல்லற் காலையில் அருந்துயர் கடிந்த
தெய்வக் காதற் திருமகன் வருக
விவேகா நந்த வியன்கோடு சூழ்ந்த
சீராம கிருஷ்ண சங்கமாம் பொய்கையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தொளிர் புதுமணப் பொற்றா மரையே
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடைப்
பள்ளியும் இன்சுவைப் பழுமரச் சோலையும்
தெள்ளுநீர் நிலையும் திகழ்ந்திட அமைத்துக்
கழுமிய நெஞ்சக் காரிருள் சீத்தெம்
விழுமம் துடைத்த விளக்கே வருக
மட்டக் களப்பு வாவியின் வடபால்
நீரர மகளிர் எழுவர் நெடும்புனல்
ஆழத் தருந்தவ மாற்றிய பேற்றால்
நின்னெதிர்ப் பட்டொரு நிலவுநா ளிரவில்
நின்செவி யிசைத்தமிழ் நுட்பம் நிகழ்த்த
ஆயிர மாண்டாய் அமைப்புமுறை மாறித்
துறைபோ மறிவர்க்குந் தோன்றா நெறித்தாய்த்
கலைமயங் கியஇசைத் தமிழ்த்தீம் பரவையின்
நிலைகண் டுணர்ந்து நிரல்பட நிறீஇச்
செம்முறைக் கேள்வியும் பிறவு மம்முறைக்
கேள்வியிற் பிறப்புங் கிளையுங் காட்டி
'யாழ்நூற்' பெயரால்யாத்தொரு நன்னூல்
தந்தாய் இசைத்தமிழ்த் தந்தாய் நின்னை
அரும்பெறற் கலியுக அகத்திய னென்கோ
செழுஞ்சுவைத் தமிழ்மொழி தெளிந்தோர்க்காங்கிலக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுஞ்சுவை கூட்டித் தெருட்டும் கொள்கையால்
நயம்புணர் நவீனக் கபிலனீ யென்கோ
இமயப் பிடர்த்தமிழ் முத்திரை யெழுதலால்
ஈழக் கரிகால் வளவனீ யென்கோ
தமிழ்தலை தாங்கிய நான்காம் மதுரைச்
சங்கச் சான்றோர் சூளா மணியே
அண்ணா மலைநகர் அமிழ்துகு கொண்டலே
பண்ணார் கரந்தைத் தமிழ்ப்பொழிற் குயிலே
காரேறு மூதூர்க் களிநட மயிலே
இங்கெழுந் தருள்க இனிதுநின் வரவே
வெள்ளிமால்வரை மிளிர்திருக் காட்சியில்
உள்ளந் திளைத்த உரவோய் வருக
கலைச்சொல் லாக்கம் கவின்செய்தோய் வருக
உள்ளத்· துயர்வென ஓங்கிடும் ஈழப்
பல்கலைக் கழகப் பைந்தமிழ்ப் பீடத்
தொருமுதற் பெரும்பே ராசான் வருக
அருள் விபுலானந்த அடிகளார் வருக
தேன்பாய் சோலைத் திருவொடு கலந்தே
ஆன்பால் கழனி அமுதெனப் பரக்கும்
மட்டு நகர்த்தமிழ் மன்றம் பொலிந்திட
இங்கெழுந் தருள்க இனிது நின்வரவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகப் பைந்தமிழ்ப் பீடத்துத்
தனித்தமிழ் விளக்கும் தகவுடன் விளங்கக்
கடைக்கணித் தருள்கெனக் கனிவுடன் வேண்டியாம்
சாத்து தமிழ் மாலைநின் தாளிணைக் கமைகென
ஏத்துதும் வருக இனிது நீ வாழ்க
மட்டக் களப்பு வளவயற் காய்த்த
நெல்லினும் பொலிக நல்லாண்டு பலவே.

தமிழ் மன்றம்
29.4.44 மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணிக்குப்
# பண்டிதமணிப் பட்டம்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடா பாஷாபிவிருத்திச் சங்கத்தார். தங்கள் சங்கத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடியபோது. அவ்விழாவோடிணைத்து விசேட பட்டமளிப்பு விழாவொன்றனையும் நடாத்தினர். 1952ஆம் ஆண்டு நடந்தேறிய இப்பட்டமளிப்பு விழாவின்போது பகவத்கீதையை வெண்பாவாகப் பாடிய பெரும்புலவரான புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்களுக்கு 'பண்டிதமணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அதே விழாவிலே. மகா வித்துவான் கணேசையா அவர்களுக்கு. வித்துவ சிரோமணிப் பட்டமும், பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்களுக்குப் புலவர்மணிப் பட்டமும், வித்துவான் சுப்பையா பிள்ளை அவர்களுக்கு பண்டித மணிப் பட்டமும் வழங்கப்பட்டன.

அப்பட்டமளிப்பு விழாவினைப்பற்றி எழுதிய கல்கி பத்திரிகையானது, புலவர்மணியவர்களின் பட்டம் பெற்றமையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்தில்,

> 'சுன்னாகம் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவர், முத்தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்த அடிகளார் ஆகிய இரு பெரும் புலவர்களிடம் பாடங்கேட்டுப் பண்டிதராய் விளங்கும் திரு.ஏ.பெரியதம்பிப் பிள்ளையவர்கள். மட்டகளப்புத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். செந்தமிழ்ச்சுவை நனி சொட்டச் சொட்டத் தேனினுமினிய பாடல்களைப் பொழியுந் திறன் இவருக்கு இயற்கையாகவே உண்டு'

என மிக அழகாக எழுதியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org